# அகணி



மண்முனை மேற்கு பிரதேச கலாசாரவிழா சிறப்புமலர் - 2012




பிரதேச கலாசார பேரவை, பிரதேசசெயலகம், மண்முனைமேற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகணி

மண்முனை மேற்கு
பிரதேச கலாசார விழாச் சிறப்பிதழ்
2012




*முன் அட்டை, பின் அட்டை ஓவியம்*
**வி. ஜி. ரமணன்,**
**விபுலானந்தா அழகியல்**
**கற்கைகள் நிறுவகம்,**
**மட்டக்களப்பு.**

*அட்டை மற்றும் நூல் வடிவமைப்பு*
**ரி. சாங்கர்,**
**மல்ரிவிஷன், மட்டக்களப்பு**

*மலராசிரியர்*
**திருமதி.த.ஜெயமாறன்**

*ஆலோசனை*
**வெ.தவராஜா**

*அச்சு*
**வணசிங்கா அச்சகம்**

பிரதேச கலாசார பேரவை
மண்முனை மேற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்முனை மேற்கு கலாசார பேரவை

**தலைவர்**
திரு.வெ.தவராஜா

**உப தலைவர்கள்**
திரு.ரி.தேவகாந்தன்
திரு.எஸ்.சிவலிங்கம்

**செயலாளர்**
திருமதி.த.ஜெயமாறன்

**விடய எழுதுவினைஞர்**
திருமதி.க.சுதாகரன்

**உறுப்பினர்கள்**
திரு.ஞா.ஸ்ரீநேசன்
திரு.ஆர்.இராமமூர்த்தி
திரு.ரி.சத்தியசீலன்
திருமதி.ய.புவனேந்திரன்
செல்வி.எல்.விக்னேஸ்வரி
திரு.மு.உதயகுமார்
திரு.எஸ்.அரசகுமார்
திரு.பி.குருபரன்
திரு.ஆர்.தட்சணாமூர்த்தி
திரு.க.சத்தியநாதன்
திரு.வ.திலீபன்
திரு.மு.அருணன்
திரு.கு.பிறைசூடி
திரு.எம்.இளையதம்பி
திரு.ஏ.முத்துலிங்கம்

**மலர்க்குழு**
திரு.ஞா.ஸ்ரீநேசன்
திருமதி.த.ஜெயமாறன்
திரு.பி.குருபரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

மண்முனைமேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, கலாசார விழாவை முன்னிட்டு வெளியிடப்படவிருக்கும் அகணி மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மண்முனைமேற்குக் கலாசாரப் பேரவையானது, மண்முனை மேற்குப் பிரதேச மக்களின் தனித்துவமான கலை, கலாசாரப் பாரம்பரியங்களை மண்வாசனையுடன் பேணிப் பாதுகாத்து வருவதில் பெரும்பங்கு வகிக்கின்றது என்றால் அது மிகையாகாது. அந்த அடிப்படையில் இவ்வாறான அரிய பலவிடயங்களை ஆவணப்படுத்துவதிலும் இலைமறை காயாகக் காணப்படுகின்ற கலைஞர்களின் ஆற்றல்களை வெளிக் கொணர்ந்து அவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவதிலும் சிறந்த வழிகாட்டியாக இம்மலர் திகழ்கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எனவே மட்டக்களப்பு மண்ணின் மண்முனை மேற்கு பிரதேசப் பண்பாட்டுப் பெருமைகளைத் தாங்கிவரும் "அகணி" மலர் சிறப்பாக வெளிவர உழைத்த அனைத்து உள்ளங்களையும் பாராட்டுவதோடு, இம்மலரின் வெற்றிக்கு எனது உளம் கனிந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி. பி.எஸ்.எம்.சாள்ஸ்**
மாவட்டச் செயலாளரும்
அரசாங்க அதிபரும்
மட்டக்களப்பு மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

இம்மலரிற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இலங்கைத் தீவின் கிழக்கே நீண்ட கரையோரப் பகுதியான கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டம் அமைந்துள்ளது. வாவியுடன் இணைந்த கடல், மலை, காடு, வயல் போன்ற அழகிய இடமாக இம்மாவட்டம் திகழ்கின்றது. இம்மாவட்டத்தில் வயலும், வயல் சார்ந்த மருத நிலப்பரப்பின் தன்மையை கொண்டமைந்த பிரதேசமாக வவுணதீவுப் பிரதேச செயலகப்பிரிவு காணப்படுகின்றது. இங்கு விவசாயத்தோடு கூத்துக்கலையையும் வளர்த்த பெருமை இவர்களுக்குண்டு. கிராமியக் கலைகளுக்கும், கூத்துக் கலைகளுக்கும் பெயர்போன இடமாக இப்பிரதேசம் விளங்கு கின்றது.

கலை என்பது உள்ளத்துணர்வை வெளிப்படுத்திக்காட்டுவது. இக்கலையானது மனித இனத்தின் பாரம்பரியத்தினைப் பறை சாற்றி நிற்கிறது. இக்கலையை வளர்த்தல், பாதுகாத்தல், அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்லல் போன்ற விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த அடிப்படையில் தான் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் கலாசார விழாக்கள் நடைபெற்று வருகின்றன. வவுணதீவுப் பிரதேச வாழ் மக்களின் கலை உணர்வை வெளிப்படுத்தும் முகமாக இவ்வாண்டிற்கான கலை நிகழ்வும் அதனை முன்னிட்டு **அகணி** என்னும் சிறப்பு மலர் வெளியீடும் நடைபெறவுள்ளது. இம்மலர் மண்ணின் மகிமையை தாங்கி வரும் மலராக அமையுமென்பதில் எவ்வித ஐயமில்லை.

இவ்விழா சிறப்புற அமைய எனது நல்லாசிகளை தெரிவிப்ப தோடு இவ்விழாவினை முன்னின்று செயற்படுத்துகின்ற பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசாரப் பேரவையினர் அனைவருக்கும் எனது நன்றியினையும் வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**D.W.U. வெலிக்கல,**
பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி பண்பாட்டலுவல்கள் காணி,
காணி அபிவிருத்தி போக்குவரத்து அமைச்சு,
கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

மண்முனை மேற்கு பிரதேச செயலக கலாசார பேரவையினால் வெளியிடப்படும் அகணி மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். மருதநிலமாகவும் பாரம்பரியக் கலையம்சங்கள் அழியாது போற்றி வளர்கப்படுமிடமாகவும் மண்முனை மேற்கு பிரதேசம் காணப்படுகின்றது. கலைஞன் வாழும் போது கௌரவிக்கப்படல் வேண்டும். அதன் முன்னோடியாக கலைஞர்கள் அவர்களது பிரதேசத்திலேயே கௌரவிக்கப்பட்டு அகணி மலரில் வெளிவந்துள்ளமை முக்கியமான விடயமாகும். கடந்த காலங்களில் ஏற்பட்ட அழிவுகளிலிருந்து முன்னோக்கி வருகின்ற பிரதேசமாக மண்முனை மேற்கு காணப்படுகின்றது.

மக்களின் வாழ்வியல் கலையம்சங்களையும் பண்பாட்டுக் கூறுகளையும் தாங்கி வெளிவருகின்றமையால் இவ் அகணி மலரானது தனித்துவமானதாக விளங்குவது சிறப்புக்குரியது. அகணி மலர் வெளிவருவதற்கு காரணமான மலர்குழுவிற்கும் மண்முனை மேற்கு பிரதேச செயலக கலாசார பேரவையினர்க்கும் எனது பாராட்டுக்கள். அகணி மலர் தொடர்ந்து வெளிவர எனது நல்லாசிகள்.

**திரு. கே. விமலநாதன்**
மேலதிக அரசாங்க அதிபர்
மட்டக்களப்பு மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பின் வளம் கொழிக்கும் பிரதேசம் மண்முனைமேற்கு பிரதேசமாகும் ஆனால் கடந்த கால அசாதாரண சூழ்நிலைகாரணமாக பல அழிவுகளை சந்தித்து தற்போது நிலையான அபிவிருத்தி வேண்டி நிற்கும் பிரதேசமும் இதுவே.

அண்மைக்காலத்தில் இப்பிரதேசஅபிவிருத்திப் போக்கு குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவுக்கு முன்னேற்றம் கண்டு வருகின்றது பலரது பங்களிப்புடன் பல்வேறுபட்ட துறைகளிலும் வளர்ச்சிகாண்கிறது.

நிலையான சமூக அபிவிருத்தி என்பது சமூக, பொருளாதார, கலை, கலாசார உட்கட்டுமான அபிவிருத்தியின் போதுதான் முழுமையடையமுடியும் அந்தவகையில் மண்முனை மேற்கு பிரதேச செயலகம் கலை கலாசார விருத்தி தொடர்பாக எடுத்துவரும் செயற்பாடுகள் பாராட்டப்பட வேண்டியதே. இப்பிரதேச கலைஞர்களை, துடிப்புமிக்க இளைஞர்களை, சிந்தனையாற்றல் கொண்டசிறுவர்களை இனம் கண்டு அவர்களிடையே கலை கலாசார மற்றும் படைப்பாற்றல் விருத்திக்கான போட்டிகளை நடாத்தி பரிசில்கள் வழங்கி கலாசார விழாவெடுத்து கலைஞர்களை கௌரவித்து அவர் தம் ஆக்கங்களை கொண்டதாக 'அகணி' எனும் சிறப்பு சஞ்சிகையையும் வெளிக் கொணர்வது சிறப்பம்சமாகும்.

தங்களது அன்றாட நிருவாக வேலைப் பளுக்களுக்குமப்பால் இத்தகைய பயனுள்ள, காலத்தக்கு தேவையான செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் மண்மனைமேற்கு பிரதேசசெயலாளர் திரு.வெ.தவராஜா அவர்கட்கும் மற்றும் அவர்தம் குழுவினர் அவரோடு இணைந்து செயற்படும் சமூகத்தினர் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள் அவர்தம் பணி தொடர வாழ்த்துக்கள்.

**ஜே.வி. பிரகாஷ்**
பிரதேச முகாமையாளர்,
சிறுவர் நிதியம், மட்டக்களப்பு

ChildFund Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

வயலும் வயல் சார்ந்த மருத நிலத் தன்மைகள் மேலோங்கி நிற்க காடும் காடு சார்ந்த முல்லை நிலப் பண்பினையும், மலையும் மலைசார்ந்தகுறிஞ்சிநிலப் பண்பினையும் கொண்டிருப் பதுடன் கலையும், கலைசார்ந்தபண்பினையும் தன்னகத்தே கொண்டி ருப்பதுதான் மண்முனைமேற்குபிரதேசமாகும்.

தமிழர்களின் தேசியகலையானவடமோடி,தென்மோடிக் கூத்துக்கள் இன்னும் வாழ் நிலமாக இப்பிரதேசத்தில் காணப்படு வதுடன் வசந்தன், கரகம், கும்மிபோன்ற கிராமியக் கலைகள் வாழ்நிலமாகவும் இந்நிலம் அமைந்துள்ளது.

கடந்த காலகசப்பான அனுபவங்கள் எம் கலைகளை, கலைஞர்களைச் சிதைத்திருந்தாலும் அந்தச்சிதைவுகளோடும் தம்மை, தமதுகலையை இனங்காட்டிக் கொண்டிருக்கும் கலைஞர்கள் வாழும் பூமி இது. யுத்தத்தினால் இழந்தது அதிகம். பொருளாதாரம், சமூகம், பண்பாடு என எல்லாவற்றிலும் தேக்கம் இருந்தாலும், தமது இருப்பை உணர்த்தப்போராடும் மக்கள் வாழும் பிரதேசம் தான் மண்முனைமேற்கு.

இப்பகுதியிலுள்ள மூத்த, இளம் கலைஞர்களிற்கு ஊக்கமளித்து, அவர்களது படைப்பாற்றலை வளப்படுத்த சந்தர்ப்பம் அளித்து, மண்முனை மேற்கு பிரதேச கலாசார பேரவையினர் கலாசாரவிழா எடுப்பதுடன் இப்பிரதேச படைப் பாளிகளின் படைப்புக்களைக் கொண்டு வெளிவர இருப்பதே அகணி மலராகும். அந்தவகையில், நூலிற்கான தமது ஆக்கங் களை வழங்கிய எழுத்தாளர்களிற்கு நன்றிகளும், வாழ்த்துக் களும் மற்றும் இந்நூல் வெளிவர துணை புரிந்த கலாசார பேரவையினருக்கும் குறிப்பாக மலர் குழுவிற்கும் எனது பாராட்டுக்கள்.

மண்முனைமேற்கு கலாச்சாரப் பேரவை இவ்வாண்டிலே இளம் கலைஞர்களிடையே கவிதை,சிறுகதை, நாடகமும் அரங்கியலும் பயிற்சிப்பட்டறைகளை நடாத்தி அப்பட்டறையி லிருந்து கிடைத்த விதைகளையும், சிறுகதைகளையும் இவ் வகணியில் இணைத்திருப்பதுசிறப்பம்சமாகும். படைப்பாற்றல் விருத்தி என்பது சமூக அபிவிருத்தியின் ஓர் அங்கமே. எனவே, இத்தகைய செயற்பாடுகள் தொடரவேண்டும். இறுதியாக அனைத்து முயற்சியிலும் ஈடுபட்ட, உதவிபுரிந்த, இணைந்து கொண்ட அனைவருக்கும் எனது பாராட்டுகளும், வாழ்த்துக்களும்.

**வெ.தவராஜா**
பிரதேசசெயலாளரும், கலாசாரபேரவைத் தலைவரும்,
மண்முனைமேற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகணியின் உள்ளே...


| | |
|---|---|
| சித்த மருத்துவம் | - 09 |
| எழில் கொஞ்சும் கன்னனூர் | - 18 |
| அருகிவரும் விருந்தோம்பல் பண்பாடு | - 19 |
| நாட்டார் உருவாக்கிய நாட்டுக்கூத்து | - 21 |
| அன்னையே என் தெய்வம் | - 22 |
| அழிவின் ஆசை | - 24 |
| மண்முனை மேற்கு பிரதேச... | - 25 |
| ஒருவடையும் பல நரிகளும் | - 38 |
| கண்ணீர்ப் பூக்கள் | - 38 |
| விவசாயின் முயற்சி | - 39 |
| இந்து வழிபாட்டு மரபில்.. | - 41 |
| மண்முனை மேற்கின் மாபெரும் சிறப்பு | - 47 |
| உதயமாகும் உபதேசம் | - 48 |
| கவியும் பொருளும் | - 49 |
| மீண்டும் ஒரு விடியல் | - 52 |
| கலைஞர் கௌரவம் | - 53 |
| ஸ்ரீ குறள்கள் சிறு குறள்கள் | - 56 |


படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்த மருத்துவம்

**திரு. பி. கமலநாதன்**, கிராமசேவை உத்தியோகத்தர், மகிழவட்டவான்.

சித்தமருத்துவம் அல்லது நாட்டு வைத்தியம் என்று சொல்லப்படும் நமது பரம்பரை மருத்துவ முறை மிகவும் ஆற்றலுடையது. இந்த மருத்துவத்தின் உயிர்மூச்சே தாவரங்களிலிருந்து கிடைக்கும் இலை, தழை, காய், கனி, மலர், வேர், விதை ஆகியவை தான்.

உலக மனித குலம் முதன்முதலில் உணர்ந்தது இந்த மருவத்துவ முறையைத் தான். தன்னை சுற்றிலும் தமக்கு அருகிலும் கிடைத்த மூலிகைகளின் ஆற்றலை உணர்ந்த மனிதன் அதனை உபயோகித்து உடல் வலுவுடன் நீண்ட நாள் வாழ்ந்தான். தன் உணவுக்காக உபயோகித்த தாவரப்பொருட்கள் நோய்களை நீக்கும் அதிசயத்தை உணர்ந்து, அவன் சித்த மருத்துவ முறைகளைக் கண்டுபிடித்தான்.

எல்லாம் உணர்ந்த ஞானிகளும் நம் முன்னோர்களான சித்தர்களும், யோகிகளும், முனிவர்களும் இலை, தழை, காய், கனி, கிழங்குகள் மட்டுமே உண்டு திடமான உடலுடன் நீண்ட காலம் வாழ்ந்துள்ளனர். அவர்கள் சித்த மருத்துவ முறைகளை ஆராய்ந்து உணர்ந்து அனுபவித்து நமக்கு பயன்படுமாறு பாடல்களில் சொல்லி விட்டும் சென்றுள்ளனர். சுயநலம் மிக்க மனிதர்களில் சிலர் அதனை வீண்விரயம் செய்து வணிக நோக்கோடு மருத்துவம் எளிதில் உணரமுடியாதவாறு சில முறைகளை மறைமுகமாகவும் சொல்லி விட்டு சென்றுள்ளனர். பின்னர் மருத்துவர்கள் தங்களது இலாப நோக்கத்தால் பிறருக்கு மருத்துவ முறைகளை சொல்லாமலும் மறைந்துவிட்டனர். இதனால், இடைக்காலத்தில் சித்தமருத்துவம் அழிந்து விடும் சூழல் கூட உருவாகிவிடுமோ? என பலரும் அஞ்ச நேர்ந்தது. ஆனால், இன்று உலகம் முழுவதும் சித்த மருத்துவம் புகழ் பெற்று எல்லா நாடுகளிலும் கையாளப்பட்டு வருகின்றது.

சித்தமருத்துவத்தின் இலை, தழை, காய், கனி, கிழங்கு, வேர், விதை, பூ இவைகளை நேரடியாக உண்பது என்பது ஒருமுறை. அவைகளை கசாயமாக, தைலமாக, சூரணமாக செந்தூரமாக, பஸ்பமாக, லேகியமாக, மாத்திரையாக மெழுகு என பல முறைகள் மூலம் பக்குவம் செய்து மருந்தாக உபயோகிப் பது இன்னொரு முறை. இன்று இம்முறைகளில் தயாரித்த மருந்துகள் கடைகளில் விற்கப்படுகின்றன. நாம் கூட இவற்றை முறைப்படி படித்து உணர்ந்து தயாரிக்கலாம். உணவே மருந்தாகிறது. அன்றாடம் உணவு முறைகளில் கூட இனிப்பு, புளிப்பு உவர்ப்பு, கசப்பு இவை களை சம அளவில் சேர்ப்பதன் மூலம் வாதம், பித்தம், கபம் சமப்படும். ஏதேனும் ஒன்று மிகுந்தாலும் நோய் வரும் என்பதே சித்தர்கள் கூற்று.

**என்னவே வானத்திடியினிலொன்று**

**அன்னயமான கடல் தனிலொன்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொன்னெனப் பூத்த பூமியி லொன்று**
**முனிவர் சொன்ன முப்பூ இம்மூன்றோ?**

இந்த சித்த மருத்துவ முறையில் முப்பூ முறையை விளக்கும் பாடல் இவர்கள் தயாரிக்கும் சித்த முறை மருந்துகள் இன்று உலக அளவில் பாராட்டுப் பெற்றுள்ளன. இந்த நூலில் மொத்தம் 13 மருத்துவர்கள் வெவ்வேறு மருத்துவ முறைகளையும் தயாரிக்கும் முறையையும் அவற்றால் தீரும் நோய்களைப் பற்றியும் கட்டுரைகளைத் தந்துள்ளனர். மிக எளிய நடையில் யாவரும் புரிந்து கொண்டு மருந்துகளைத் தயாரித்து உட்கொள்ளும் வகைகளைச் சிறப்பாக இது எடுத்துக்கூறுகின்றது.

**முதல்படி :-** மனதில் முடிவெடுத்தல்.
**"நீ என்னவாக எண்ணுகிறாயோ அதுவாகவே ஆகிறாய்"**
**"முடியுமென்றால் அது முடியும்"**
**"எண்ணித்துணிக கருமம்"**
இன்றைய இழிவான உணவுப் பழக்க வழக்கங்களில் தீமைகளையும் இயற்கை உணவிற்கு மாறுவதால் ஏற்படும் நன்மைகளையும் அலசி ஆராய்ந்து சீர்தூக்கிய சிந்தனைக்குப் பின் மனதால் முடிவெடுக்க வேண்டும். துணிந்த முடிவை அழகாக எழுதி வைத்து தினமும் காலையில் எழுந்து பார்த்தால் அது உங்கள் மனதில் பதியும்.

**இரண்டாம் படி :-** அறிவித்தல்
எந்த முடிவை எடுப்பினும் வீட்டிலும், உறவினரிடத்திலும், நண்பர்களிடத்திலும் வேலை செய்யும் இடத்திலும் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.
"இன்ன திகதி முதல் படிப்படியாய் மறக்கப் போகிறேன்" என்று அறிவித்து அம்முடிவிற்கு உங்களை ஒப்புவித்துக்கொள்ள வேண்டும். பலர் அதை தெரியப்படுத்துவார், கேலிபேசுவார்கள், தடுப்பார், பயமுறுத்துவர். இவற்றை நீங்கள் தாங்கி வென்றால் மூன்றாம் படிக்கு செல்லலாம்.

**மூன்றாம் படி :-** விட விட இன்பம் தொடத் தொட துன்பம்
"கூட உணவுகளையும் கூடாத நட்பையும் விட விட இன்பம், தொடத் தொட துன்பம்" இன்றைய நிலையில் உங்களிடம் உள்ள கூடாத உணவுகளை படிப்படியாக குறைக்க வேண்டும். மது, புகை, மாமிசம், தேனீர், கோப்பி, பால், தயிர், மோர், நெய், வெண்ணெய், வறுத்தவை, பொரித்தவை மற்றும் கொழுப்பு உணவு, சூடான சுவை பானங்கள், குளிர் பானங்கள் இப்படி ஏராளமாய் உள்ளது. முதலாவதாக, உப்பையும் சக்கரையையும் குறைத்தே ஆக வேண்டும். இதிலேயே நோய் நொடிகள் நீங்கத் தொடங்குவது தெரியும்.

**நான்காம் படி :-** இயற்கை உணவை ருசித்தலும், ரசித்தலும்
இயற்கை உணவை இனிமையான காதலியாக கற்பனை செய்து விரும்ப வேண்டும். நன்கு மெய்ப்பசி வந்த பின் ரசித்து ருசித்து புசிக்க வேண்டும். காதலியோடு பேச நேரம் ஒதுக்குவதைப் போல உண்ண நேரம் ஒதுக்க வேண்டும். தொடக்கம் ஒரு வேளை இயற்கை உணவு போதும். காலையோ மாலையோ வசதிப்படி வைத்துக்கொள்ளவும். அடுத்து இருவேளை இயற்கை உணவிற்கு மாறுங்கள். ஒருவேளை சமையல் உணவில் தொடர்வதே சம்சாரிக்கு அழகு. அதுதான் இயலும் என்று உணர்ந்து பயின்ற பின் காலையில் உண்ண நேரம் ஒன்பது மணி, மதியம் சீர்திருத்தப்பட்ட சமையல் உணவு, மாலையில் இயற்கை உணவு என்ற நித்திய கதிக்கு நீங்களே மாறிவிடுவீர்கள்.

**ஐந்தாம் படி :-** நிலைத்தல்
"நீயா உணவு நோயைக்கொடுத்தாலும் நீயா உணவு தீயினில் அச்சப்படும் தீயவை உடனே ஒட்டிக்கொள்ளும்". விட்ட கால நல்லவை நாட்பட்டு நாட்பட்டு மெதுவாக ஒட்டிக்கொள்ளும். சிறிது ஏமாந்தால் வைராக்கியம் குறைந்தால் சறுக்கி விழும் என்றாலும் மனம் தளரக்கூடாது. பாடுபட்டுக்கொண்டு வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லுறக்கான மாற்றத்தை நிலை நிறுத்திக் காட்டினால் தான் நோயற்ற வாழ்வு பெறலாம். துன்பம் இல்லையேல் இன்பம் இல்லை. ஒன்றை இழந்து தான் ஒன்றை பெற முடியும். இது இயற்கையின் நியதி.

**ஆறாம் படி :-** பரப்புதல்

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம். அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலை தானே வந்திடுமே பராபரனே". நீங்கள் பெற்ற முழு ஆரோக்கிய வாழ்வையும் இனிமை பெற்று இயன்ற போதெல்லாம் எடுத்துக் கூறுங்கள். மற்றவர்களும் மாறி விடுவார்கள்.

**தினசரி உணவு முறை:-**

நேரம், உணவின் வகைகள், அளவு உங்கள் வசதிப்படி பார்த்துக்கொள்ளுங்கள். நொறுக்குத்தீனி தீங்காகும். இனிப்பு நிலைக் காது. சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்; இயற்கை உணவும் மனப் பழக்கம். நேரம் காலை 08 மணி முதல் 09 மணிக்கு முன் நிறைந்த உணவும், மதிய உணவு 12 மணி முதல் 02 மணிக்குள் அரை வயிறு உணவும் போதுமானது. சாப்பிட்டு இரு மணி கழிந்து நீள் உறங்க **விக்கல் விதிவிலக்கு.**

மாலை உணவு உணவல்லா மிகக் குறைவாக இருப்பின் நீண்ட ஆயுள், ஆழ்ந்த நித்திரை. இது சில நாட்களில் பழகிவிடும். பழங்கள் விரும்பிய வண்ணம், அல்லது கோதுமை தோசை, தாழிப்பு இல்லா சட்டினி, அல்லது ரவை தோசை தாழிப்பு இல்லாதது, அல்லது பாண் போன்ற மென்மையான சாப்பாடு, அல்லது எண்ணெய் இல்லாத சாப்பாடு, காய்கறி கூட்டு என்பவற்றுடன் இரவு தூங்கும் முன் நீ அருந்துவதும் உலாவுவதும் சிறந்தது. 02 மணி நேரம் கழித்தே உறங்கப் போக வேண்டும். முன்னிரவில் படுத்து அதிகாலை எழுதல் வேண்டும். எளிய உடற்பயிற்சி அல்லது நடைப்பயிற்சி அல்லது நல்வாழ்வில் அடிப்படை யோகாசனம் செய்வோர் ஆரோக்கிய சாம்ராஜியத்தின் சக்கரவர்த்திகள் ஆவர்.

**உணவுச் சங்கிலி என்றால் என்ன?**

உன் உணவைக் கவனி
அது உணவாகின்றது.
உன் உணர்வைக் கவனி
அது எண்ணங்களாகின்றன.
உன் எண்ணங்களைக் கவனி
அவை சொற்களாகின்றன.
உன் சொற்களைக் கவனி
அவை செயலாகின்றன.
உன் செயல்களைக் கவனி
அவை பழக்கங்களாகின்றன.
உன் பழக்கங்களைக் கவனி
அவை நடத்தையாகின்றதுன
உன் நடத்தையை கவனி
அதுவே நீயாகின்றாய்.
இது சித்தர்கள் வாக்கு.

**மூலிகை முறைகளால் தீரும் நோய்கள்**

மனித குலம் தோன்றி அவன் காட்டு வாசியாக இருந்த காலத்திலேயே அவனுக்குத் தெரிந்த ஒரே மருத்துவம் பச்சிலை தான் என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றார்கள்.

செடி, கொடி, மரம் ஆகிய இயற்கைத் தாவரங்களின் ஊடாக வாழ்ந்து வந்த மனிதன் தனக்கு ஏற்பட்ட நோய்களுக்கு அந்த தாவரங்களிலிருந்தே தீர்வு கண்டான். இதுவே சித்த மருத்துவத்திற்கு அடிப்படை ஆகும். நாம் சாதாரணமாகப் பார்க்கும் இலை, தழைகளுக்கு நோய்கள் அணுகாதவாறு நீண்ட நாள் வாழ உதவுகின்ற அதிசயத்தக்க ஆற்றல்கள் உள்ளன. அவற்றைப் புரிந்து கொண்டு உபயோகித்தோமானால் நாம் நலமாக வாழலாம். இவ்வாறு நலமும் வளமும் பெறும் முறைகள் குறித்து இங்கே விரிவாக காணபோம்.

**அருகம்புல்**

பல விதமான நோய்கள் அகற்ற வல்ல அற்புதமான ஒரு மூலிகை. இது உடலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்பத்தினை குறைப்ப தோடு சிறுநீர் பெருக்குகளையும் இரத்தத்தைத் சுத்தம் செய்யும் தன்மையும் ஒருங்கே அமையப்பெற்ற ஒரு மருந்தாகும். தினசரி காலை ஒரு கைபிடி அருகம்புல்லை இடித்து சாறு எடுத்து வெறும்வயிற்றில் சாற்றை உமிழ்நீருடன் நன்கு கலக்கச் செய்து அருந்த, உடல் உஷ்ணம் குறை வதோடு கண்களும் குளிர்ச்சி பெறும். இது அனைவரும் அரிதாக கைக்கொள்ளக்கூடிய ஒரு சிறந்த மருத்துவ முறையாகும். இன்றைய நாகரீக உலகில் மனித வாழ்க்கை மிகுந்த பரபரப்பும், வேகமும் உடையதாக உள்ளது. இதன் காரணமாக பலருக்கு இருதய நோய்கள் உண்டாகின்றது. இவ்வாறு உண்டாகும் இருதய நோய்கள் குணப்படுத்த அருகம்புல்லை நீரிலிட்டு காய்ச்சி அந்நீரை சிறிது சூட்டுடன் அருந்தி வர, எல்லா விதமான இருதய நோய்களும் இருக்கும் இடம் தெரியாமல் மறையும்.

நவீன உலகில் மாபெரும் வியாதி யான மற்றுமொன்று மூல நோயாகும். இந்த மூல நோயினைக் குணமாக்க அருகம் புல்லின் சாற்றுடன் பால் அருந்த குணமாகும். நாகரீக மிகுதியால் பல்வேறு வகையான சவர்க்கார வகைகளுடன், சருமத்திற்கான பல்வேறு வகை அழகு சாதனங்களுடனும் வாழவேண்டி உள்ளது. இவ்வாறான சூழலில் ஏதோ ஒரு வகையில் நமது தோலும் கெட்டுப் போவதோடு தேமல், வியர்குரு, வேறல் கட்டி போன்ற பல்வேறு நோய்கள் நமது உடலில் ஏற்பட நேரிடும். இவ்வாறாகக் கெட்டு விட்ட தோலை மீண்டும் புதுபிக்க வேண்டுமெனின் அருகம்புல்லுடன் மஞ்சள் சேர்த்து அரைத்து தோல் நோய் உள்ள இடங்களில் பூசினால் குணமாகும். மெலிந்த உடலை பெருக்க வைக்க விரும்புவோர் அருகம் புல்லின் சாற்றுடன் கரட் சாறு அருந்தி பயன்பெறலாம்.

**அம்மான் பச்சரிசி**

தாய்ப்பால் என்பது குழந்தைகளின் நோய் எதிர்ப்புச் சக்திக்கு அடிப்படையான இயற்கை உணவு. ஆனால் தாய்ப்பாலை விட அதிகப்பலம் பொருந்திய ஒரு வகைப்பால் இவ் உலகில் உண்டு. ஆம் தாய்ப்பாலையே ஊறச் செய்யும் தன்மை உடையது. அது அம்மான் பச்சரிசியின் செடியை பூவுடன் பறித்து அரைத்து கொட்டைப்பாக்களவினை பசும்பாலில் கரைத்து அருந்த தாய்ப்பால் சுரப்பு தாய்மார்களுக்குக் கூடும்.

தாதுப்பலம் தேடி உலகமே வயக்காராவின் துணையை நாடுவது சர்வ சாதாரணமாகி விட்டது. இந்நிலையில் இயற்கையின் துணையுடன் தாதுப்பலம் எளிதாகக் கிடைத் தால் நமக்கு இன்பம் தானே. அம்மான் பச்சரிசி யுடன் தூதுவளையை சம அளவு கலந்து துவளையாக்கி உண்டு வர தாதுப்பலம் பெருகுவதோடு உடல் பலமும் உண்டாகும்.

**அகத்திக் கீரை**

எமது நாட்டில் இளம் தலைமுறை யினரிடம் புகைபிடிக்கும் பழக்கம் அதிகரித்து வந்துள்ளது. இப்புகை பிடிப்பதனால் உடலில் ஏறிய புகையிலையின் நஞ்சை முறிக்க விரும்பினால் அகத்திக்கீரையைப் பூவுடன் சேர்த்து ஓமம், மிளகு, பூண்டு, சீரகம், வெங்கா யம் ஆகிய வற்றுடன் உப்பு மட்டும் சேர்க்காது விலக்கி நெய்யில் பொரித்து இரு நாட்கள் பகலில் உண்டு வர புகையிலை நஞ்சு முறியும்.

கண்களில் தோன்றும் காட்ராக்ட் நோய்க்கு வாரம் ஒருமுறை அகத்திப் பூவை யும் மாதம் இரு முறை அகத்திக் கீரையும் சமைத்து உண்டுவர குணமாகும்.

**அரசுமரம்**

விநாயகப் பெருமானின் வீடான அரசு மரம் கடவுளைப் போன்றே பல நன்மைகளைத் தரவல்லது என்பது நமது மருத்துவ முனிவர்க ளின் கூற்று. மென்மையான பாதங்களில் வன்மையாகக் குடியிருக்கும் பித்த வெடிப் பையும் அதன் வலியையும் அதை தங்களது பாதங்களில் ஆபரணமாகக் கொண்டவர்க ளுக்கே தெரியும். இந்த பித்த வெடிப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமாக்க அரச மரத்தின் அடிப்பகுதியைக் கத்தியால் கீறி அதிலிருந்து வரும் பாலைத் தடவக் குணம் காணலாம். இந்த மரத்தின் விதைகளை பால் விட்டரைத்துக் கற்கண்டு கலந்து பாலில் கலக்கி அருந்தச் சுக்கிலத்தி லுள்ள அணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**கற்றாளை**

குமரி என்று அழைக்கப்படும் இது பலவிதமான மருத்துவ குணங்களை உட் கொண்டதாகக் திகழ்கின்றது. தலைமுடி நன்கு வளரவேண்டும் என்று விரும்புவோர் இதன் சோற்றைத் தேங்காய் எண்ணெயில் காய்ச்சி தலைக்குத் தேய்த்து வரலாம்.

உடற்சூடு அதிகமாகிப் பலவித துயரங்களை அனுபவித்து வருபவர்களுக்குக் கற்றாளைச் சோற்றுடன் பசும்பால் கலந்து அருந்த மூலச்சூடு குறையும். மேலும், இரத்தச்சோகை குணமாகும். தாதுப்பலம் பெருகும்.

மூலநோயை முற்றிலும் குணமாக்க வேண்டுமா? கற்றாளையின் சோற்றை நீரில் சுத்தம் செய்து முருங்கைப்பூ, வெண்ணெய் கலந்து அரைக்க வேண்டும். இதை மூன்று நாட்கள் எலுமிச்சை அளவு காலையில் மட்டும் உண்டு வர மூல நோய் குணமாகும். அத்துடன் பத்தியம் இருக்க வேண்டும்.

இந்தக் கற்றாளை என்புருக்கி நோயையும் குணமாக்கும் ஆற்றல் உடையது. 70 கிராமம் கற்றாளைச் சோற்றுடன் அரை லீற்றர் நல்லெண்ணெய் கலந்து ஊற வைத்து அரைத்து நீர்ச்சத்து இன்றி காய்ச்சி அந்த எண்ணெய்யை தினசரி இருவேளை ஒரு தேக் கரண்டி உட்கொள்ள என்புருக்கி நோய் குணமா கும். மேலும், பெண்களிற்கான மாத விலக்குக் குறைபாடுகளையும் போக்கும். கர்ப்பிணிகள் இந்த மருந்தை பயன்படுத்தக் கூடாது.

**வில்வம்**

சிவாலயங்களில் வளர்க்கப் படுவதும் சிவனுக்கு உகந்ததாக நம்பப்படு வதுமான வில்வம் இலை அளப்பரிய மருத்துவ ஆற்றலைக் கொண்டது. வில்வ இலைகளைத் தினசரி 10 இலைகள் வீதம் என்று சாப்பிட்டு வெந்நீர் அருந்த மனநோய் குணமாகும்.

பெண்களிற்கான பெரும்பாடு குணமாக இதன் இலையை அரைத்து பாக்களவு உட்கொண்டு குளிர்நீரில் தலை முழுகி வர குணம் காணலாம். வில்வ இலையையும், கரிச இலையையும் கலந்த சாறெடுத்து அருந்தக் காமாலை குணமாகும்.

இதன் இலையை உலர்த்தி பொடியாக்கித் தேனில் குளைத்து தினசரி இருவேளை உட்கொண்டு வர காசநோய், தொண்டைக்கட்டு, தலைவலி ஆகியவை குணமாகும்.

**எலும்பு முறிவு மருத்துவம்**

உயிரினங்களின் உடலை நிலையாக, பாதுகாப்பாக வைத்திருப்பதில் எலும்பு முக்கிய பங்கு வகிக்கின்றது. சதையும் நரம்புகளுமான இந்த உடம்பைக் கம்பீரமாக நிமிரச்செய்வது எலும்பு தான். எலும்பு இல்லாத உயிர்கள் வெயிலில்க் காய்ந்தே மடியும் என்று திருக்குறள் சொல்லுகின்றது. ஒரு நாட்டின் தொழிலாளரின் முக்கியத்து வத்தைத் தொழிலாளர்கள் சமுதாயத்தின் முதுகெலும்பென கூறுகையில் முதுகெலும்பின் முக்கியத்துவம் புரிகின்றதல்லவா?

சிறுவிடயத்திலும் கூட எலும்புகளில் கீறல் விழுவதும் அல்லது எலும்பு உடைந்து போவதும் தற்போது சர்வசாதாரணமாக நடக்கின்றது. எலும்பு முறிவில் சதைபிய்ந்து போவதால் அதிக வலி ஏற்பட்டு கையோ காலோ செயலிழக்கவும் செய்கின்றது. உடனடியாக "எக்ஸ்றே" எடுத்துப் பார்த்தால் இடம், அளவு, அதன் தன்மைகளை அறிந்து கொள்ள முடிகின்றது. எலும்பு முறிவுக்கு சித்த மருத்துவ முறைகளை இலகுவாகக் கையாளலாம். அடிபட்டது கையோ, காலோ மற்றதையும் நீட்ட வைத்து இரண்டையும் ஒப்பிட்டுச் சரியாக உள்ளதா என்று பார்க்க வேண்டும். எலும்பு வித்தியாசமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகியிருந்தால் இழுத்தோ, அமுக்கியோ சரி செய்ய வேண்டும்.

மூங்கில் அல்லது பனைமட்டை தட்பைகளை ஒன்று போல சீவி நாலு அங்குலம் முதல் எட்டு அங்குலம் அளவில் 3 அல்லது 4 எண்ணிக்கையில் வைத்துக் கொள்ள வேண்டும். நாட்டுக்கோழி முட்டை வெள்ளைக்கருவை மட்டும் எடுத்து உளுத்தம் மாவும் போட்டு குழைத்து வெள்ளைத் துணியை மடக்கி பாலம் போட்டு அதில் மாவை விட்டு எலும்பு உடைந்த பகுதியின்மேல் ஒரு சுற்று கட்டு போட்டு மூங்கில்த் தர்ப்பைகளை அதைச்சுற்றி மூன்று இடத்தில் வைத்து மேலும் முட்டைப்பத்துத் துணியைச் சுற்றிக் கட்டி விட வேண்டும்.

வலி குறைவதற்காகக் கால்ப்படி எண்ணெய்யில் வேப்பம் பட்டை, கல்பிசின், கஸ்தூரி மஞ்சள் தூள் போட்டு காய்ச்ச வேண்டும். வெற்றிலை முனையை காய்ச்சும் எண்ணெய்யில் விட்டால் உடன் சுர்ரென மஞ்சளாக காய்ந்தால் சரியான பக்குவம். கட்டுப் போட்ட இடத்தில் முதல் நாள் அதிகமான எண்ணெய்யை விட்டுக் கொண்டே இருக்க வேண்டும். வலி குறையும் தருணத்தில் எண்ணெய்யை கட்டின் மீது தடவி வந்தால் போதும்.

இரத்தக்கட்டு குறையும் எலும்புகள் வேகமாக இணையவும் வேறு ஒரு வகை எண்ணெய்யை தயாரிக்க வேண்டும். நல்ல எண்ணெய் 1/2லீற்றர், வாய்விளங்கான் பட்டை, வேப்பம் பட்டை, வெப்பாலை அரிசி, கார்போக அரிசி, விலா அரிசி, கஸ்தூரி மஞ்சள் காசுகட்டி, சீனாகாரம், காளிப்பாக்கு, துத்தம் துருசு, மஞ்சன மிளகு இவற்றை வகைக்கு 35 கிராம் எடுத்து இடித்துத் தூள் செய்து எண்ணெய்யில் இட்டு சாதிலிங்கம் 20கிராம் கலந்து 03 எலுமிச்சம் பழங்களைச் சாறு பிழிந்து அதையும் எண்ணெய்யில் இட்டு பக்குவமாகக் காய்ச்சி இறக்க வேண்டும்.

இரண்டு நாளில் அந்தக்கட்டை அவிழ்த்து புதிதாக முட்டைப் பத்து போட்டு மீண்டும் கட்டி இந்த எண்ணெய்யை நன்றாக தடவி வர வேண்டும். 20 நாளிலிருந்து 40 நாட்களுக்குள் எலும்புகள் இணைந்து உடலுறுப்பும் செயற்பாட்டிற்கு வந்து விடும். அதுவரை நன்றாக ஓய்வெடுக்க வேண்டும். எலும்பு சேதமான உடலுறுப்பை அசைக்கலாம். பக்குவமாகப் பாதுகாக்க வேண்டும். சரியாகும் வரை முடிந்தால் தினமும் பிரண்டைத் துவையல் செய்து உணவோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு வேளைக்கு வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு போடலாம். கல்சியம் சத்து அதிகமுள்ள இவைகள் எலும்புகள் விரைவில் இணைய துணை செய்யும். இதில் அனுபவமுள்ளவர்களை உடன் வைத்து செய்வது நல்ல பலன் தரும்.

**மலர் வகைகள்**

இறைவனுடைய படைப்பில் எல்லாமே பயனுடையதாகும். நமது முன்னோர்கள் மூலிகைகள் மூலம் எத்தகைய நோயாயினும் அதனைப் போக்கி இன்பமாக வாழ்ந்தார்கள். அதுபோலவே மலர்களும் நோய்களை நீங்கும் மருந்துகளாகப் பயன்பட்டுள்ளன. எல்லா மலர்களும் ஏதோ ஒரு வகையில் நோயைப் போக்கவல்லது. எனவே அவற்றில் சில மலர்களின் மருத்துவ குணங்களையும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நோய் வந்த பின் மருந்தைத் தேடி அல்லல்படுவதைக்காட்டிலும், நோய் வராமல் தடுத்து நலமுடன் வாழ்வதே அறிவுடைமை. இவ்வகையில் எல்லோருக்கும் எளிதில் செலவில்லாது கிடைக்கக் கூடிய பூ ஆவாரம்பூ. இதன் மருத்துவ குணங்கள் பின்வருமாறு.

**ஆவாரம் பூ**

ஆவாரம் செடி மஞ்சள் நிறத்தில் பூத்திருக்கும். ஆவாரம்பூ சிறிது துவர்ப்பு சுவையுடையது. இதனை நாள் தோறும் உபயோகித்தால் உடல் குளிர்ச்சியடையும். வியர்வை நாற்றம் நீங்குவதோடு உடல் மெருகும் ஏற்படும். சிறுநீரக கோளாறு வராமலும் பாதுகாக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆவாரம் பூத்திருக்க சாவாரைக் கண்ட துண்டோ" என்ற மருத்துவச் செய்முறையானது ஆவாரம் பூக்களைச் சேகரித்து நன்றாக உலர்த்தி உரலில் பொடியாகும்படி குத்த வேண்டும். மெல்லிய துணியில் அரித்து பொடியைச் சேகரித்து வைத்து கொள்ள வேண்டும். மணத்திற்காக ஏல அரிசியையும் நன்றாக அரித்து எடுத்த பொடியையும் ஈரம் படாமல் கண்ணாடி பெட்டிகளில் வைத்து மூட வேண்டும்.

ஒரு நாளைக்கு 02 வேளை காலை, மாலை நன்றாக காய்ச்சிய பசும்பாலில் ஒரு தேக்கரண்டி ஆவாரம் பூத்தூள் சேர்த்து தேன் கலந்து சாப்பிடலாம். தேன் கிடைக்காத போது பனைவெல்லம் அல்லது சக்கரை சேர்த்து கொள்ளலாம். கோப்பி ,தேநீ அருந்தவதுற்குப் பதிலாக ஆவாரம்பூ பானம் அருந்தினால் உடல் நலம் பெருகும். நீரழிவு நோய் நீங்கும். ஒரு மண்டலம் ஆவாரம்பூத்தூள் பானமருந்தினால் குணம் தெரியும்.

**முருங்கைப் பூ**

முருங்கைப் பூ நரம்புத் தளர்ச்சிக்கு ஒப்பற்ற மருந்தாகும். நாள்தோறும் ஒரு கைப்பிடி அளவு முருங்கைப் பூவை பசும்பாலில்க் காய்ச்சி சாப்பிட்டு வந்தால் சிறந்த பலனைத் தருவதுடன், புத்துணர்ச்சியும் தென்பும் கிடைக்கும். குழந்தைப் பேறில்லாதவர்கள் முருங்கைப் பூவைப் பாலில் காய்ச்சி தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் ஆண்மைத் தன்மை பெருகி குழந்தைப்பேறு உண்டாகும். இல்லற வாழ்வில் இன்பம் உண்டாகும்.

இதனைப் போன்று இன்னும் பல அரிய மூலிகைகளின் ஆற்றலையும் அற்புத சக்தியையும் இது கொண்டுள்ளது. இதன் பூ, காய், கனி, பட்டை போன்றவற்றின் சக்தியைப் பற்றி எண்ணிலடங்கா விளக்கங்க ளைச் சொல்லலாம்.

**சளி, இருமல், ஆஸ்துமா போன்றவை குணமாக்கும் மூலிகைகள்**

1. இரைப்பு, இருமல் குணமாகக் கொன்றை வேர்ப்பட்டை, தூதுவளைப் பொடி கலந்து சாப்பிட்டால் குணமாகும்.
2. ஆஸ்துமா இருமல் குணமாகச் சிறு தேட் கொடுக்கு இலை, மிளகு, சீரகம் சேர்த்து அரைத்து ஆட்டுப் பாலில் சாப்பிட்டு வரக்குணமாகும்
3. மார்பு சளி தீர இஞ்சி, புதினா, கொத்தமல்லி, கறிவேப்பிலை துவையலைச் சுடு சோற்றுடன் நெய்யில் உண்ண மார்புச் சளி நீங்கும்
4. ஆஸ்துமா தீர சிறுகுறிஞ்சா வேர் சூரணம், திரிகடுகு சூரணம் சமமாக சிறிதளவில் எடுத்து வெந்நீரில் சாப்பிடலாம்.
5. சளித்தொல்லை குணமாக, மாதுளம் பழச்சாறு, எலுமிச்சை பழச்சாறு கலந்து குடித்து வரலாம்.
6. என்புருக்கி நோய் குணமாக, புறால் இலையைப் பொடித்து அரிசி மாவுடன் கலந்து அடைசெய்து சாப்பிடக் குணமாகும்.
7. இருமல் குணமாக, ஆடா தோடை இலைச்சாற்றுடன் தேன் கலந்து சாப்பிட்டால் தீரும்.

**பெண்கள் கருப்பை - சுகப்பிரசவம்**

1. கருப்பை பலமடைவதற்கு சதகுப்பை, கருஞ்சீரகம், மரமஞ்சள் சமஅளவு அரைத்து பனை வெல்லம் சேர்த்து 5 கிராம் காலை மாலை சாப்பிடவும்.
2. கருப்பை குறைபாடுகளை நீக்குவதற்குப் பருத்தி இலைச்சாற்றைத் தேனுடன் கலந்து சாப்பிட்டு வரலாம்.
3. சுகப்பிரசவம் ஆக, ஆடு தின்னா பாலை வேர் சூரணம் 5 கிராம் வெந்நீரில் கொடுக்கலாம்.

**ஆண்மைக் குறைவு சரியாக**

1. அரச விதைத்தூள் ஆண் மலட்டினை நீக்கும்.
2. இழந்த இளமையைப் பெற, அமுக்கிர பொடி, கசகசா, பாதாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருப்பு, சாரப் பருப்பு சேர்த்துச் சாப்பிட்டு வரலாம்.

3. தாது இழப்புத் தீர, அம்மான் பச்சரிசியுடன், கீழ்காய்நெல்லி சேர்த்து அரைத்துச் சாப்பிட்டு வரலாம்.
4. பெண் மலடு நீங்க:- அசோகப் பட்டை, மாதுளை வேர்ப்பட்டை, மாதுளம் பழத்தோல் பொடி செய்து 02 சிட்டிகை 120 நாட்கள் சாப்பிடலாம்.
5. அழகு, வசீகரம் கூடி முகவுடல் அழகு பெற கொன்றை வேர்ப்பட்டை கசாயம் குடித்து வரலாம்.
6. இளமையும் வசீகரமும் உண்டாக, முக்கிரட்டை இலை தொடர்ந்து சாப்பிட்டு வர வேண்டும்.
7. முகப்பொலிவு பெற, இஞ்சி சிறு சிறு துண்டுகளாக நறுக்கித் தேனில் ஊற வைத்து 48 நாட்கள் சாப்பிட்டு வரலாம்.
8. உடல் சிவப்பாக மாற, வெள்ளரிக் காய், மஞ்சள், வேப்பம் பூ சேர்த்து அரைத்து உடலில் பூசி குளித்து வர நிறம் மாறும்.
9. முகவசீகரம் கூடுவதற்கு தூது வளைப்பூ பத்து பாலில் காய்ச்சி 48 நாட்கள் தொடர்ந்து குடித்து வர முக வசீகரம் கூடும்.
10. உடல் பொலிவு பெற, கோரைக் கிழங்குப் பொடி தேனில்க் கலந்து சாப்பிட்டு வர உடலில்ப் பொலிவு உண்டாகும்.

**சரும நோய் குணமாக**

1. படர் தாமரை தீர, சந்தனக் கட்டையை எலுமிச்சைச் சாற்றில் உரைத்துத் தடவ வேண்டும்.
2. சொறி, சிரங்கு, மேக நோய் தீர நன்னாரி வேரைச் சிதைத்து ஒரு நாள் ஊற வைத்துக் குடித்து வரவும்.
3. கரும்படை குணமாக, கொவ்வை இலைச்சாற்றுடன், கரும்சீரகப்பொடி 05 கிராம் சேர்த்து அரைத்துப் படை பூசி ஒரு மணி நேரம் கழித்துக் குளிக்க வேண்டும்.

**பெண்கள் பெரும்பாடு, உதிரச் சிக்கல்**

1. மாதவிடாய் ஒழுங்காகப்: புதினா இலை சாறெடுத்து அதனுடன் தேன் கலந்து சாப்பிடக் குறையும்.
2. மாதவிடாய் வயிற்று வலி தீர, அத்திப் பழம் தேனில் ஊற வைத்து சாப்பிட்டால் பெரும்பாடு குறையும்.
3. வெள்ளை ஒழுக்கு தீர, ஓரிதழ் தாமரை இலை, கீழ்க்காய் நெல்லி இலை, யானை நெருஞ்சி இலை அரைத்து 50 மில்லி லீற்றர் தயிரில்க் கலந்து சாப்பிடல் வேண்டும்.
4. உதிரச்சிக்கல் தீர, ஈஸ்வர மூலி அரைத்துக் காய்ச்சிக் குடிக்கலாம்.
5. மாதவிடாய் வலி சரியாக, வெள்ளெருக்கு, சீரகம், மிளகு சேர்த்து அரைத்துப் பாலுடன் சாப்பிட வேண்டும்.
6. ஒழுங்கில்லாத மாதவிடாய் ஒழுங்குபட, கரும் செம்மை விதை ஊற வைத்து அரைத்து ½ கிராம் அளவு சாப்பிட்டு வரலாம்.

**மலச்சிக்கல் சரியாக**


1. மலச்சிக்கல் தீர, முள்ளங்கி இலைச் சாறு, 5 மில்லி லீற்றர் 3 வேளை சாப்பிட்டு வரவும்.

**மாரடைப்பு வராமல்த் தடுக்க**

1. இரத்தக் குழாய்களில் அடைப்பு நீங்க, 1 கப் சுத்தமான தயிர் சாப்பிட வேண்டும்.
2. நெஞ்சு வலி திடீரென ஏற்பட்டால், கஸ்தூரியை ஒரு வெற்றிலையில் வைத்து மென்று சாப்பிடல் வேண்டும்.
3. இதய பலவீனம் குணமாக, தூது வளைக் காய் மோரில் ஊற வைத்துக் காய வைத்து வறுத்துச் சாப்பிட்டு வரலாம்.
4. மாரடைப்புக்கு, தான்றிக்காய் பொடியை 2 சிட்டிகை தேனில்க் கலந்து நாக்கில் தடவலாம்.
5. இதய பலவீனம் தீர, செம்பருத்தி பூ கசாயம், பால், சக்கரை சேர்த்து பருகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2. பித்தப்பாண்டு தீர, பொன்னாவரை வேர், சுக்கு, மிளகு, சீரகம் என்பவற் றின் கசாயம் குடிக்கவும்.
3. பித்த மயக்கம் தீர, இஞ்சிச் சாறு, எலுமிச்சைச் சாறு, தேன் கலந்து குடிக்கவும்.
4. புற்று நோய் தீர, பீச்சங்கு இலை வேர், சிவகரத்தை, இலவங்கம் பொடி செய்து தேனில்ச் சாப்பிட்டு வரவும்.
5. நோய் எதிர்ப்புச் சக்தி பெருக, அதிமதுரம் 35 கிராம், சோம்பு 35 கிராம், சக்கரை வேர் 11 கிராம், கொடி வேலிப் பட்டை 11 கிராம் தூளாக்கி காலை, மாலை கால் கரண்டி சாப்பிடவும்.
6. நோய் எதிர்ப்புச்சக்தி அதிகரிக்க, இஞ்சித் துண்டு தேனில் ஊற வைத்து 48 நாட்கள் உண்டு வரவும். நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

6. மார்பு வலிக்குத் திருநீற்றுப் பச்சிலைச் சாறு, தேன் கலந்து சாப்பிடலாம்.

**தாதுப்பலம் பெற**

1. தாதுபலம்பெற, பத்து கிராம் வில்வ வேர்ப்பட்டையை ஒரு கிராம் சீரகத்து டன் அரைத்துப் பாலில் கலந்து சாப்பிட்டு வரவும்.
2. தாது கட்டலுக்கு, துளசி விதைப் பொடியைத் தாம் பூலத்துடன் மெல்ல தாது கட்டும்.
3. ஆண்மை பெருக, திப்பிலி பொடியை நெய்யுடன் சாப்பிடவும்.

**நரம்புத் தளர்ச்சி குணமாக**

1. நரம்புத் தளர்ச்சி குணமாக, சேப்பம் கிழங்கை புளியுடன் சேர்த்துக் சமைத்து உண்டு வர பலவீனம் மாறும். ஆண்மை பெருகும்.
2. நரம்பு இழுப்பு தீர, ஆடாதோடை வேர், கண்டங் கத்தரி வேர் என்பவற் றைப் பொடி செய்து தேனில்க் கலந்து சாப்பிடலாம்.

**பித்த நோய்கள் குணமாக**

1. பித்தம் தெளிந்து ஆயுள் பெருக, இஞ்சித் துண்டி னைத் தேனில் ஊற வைத்து 48 நாட்கள் சாப்பிட வேண்டும்.

**பொது விளக்கம் :**

பரம்பரையாக வருவதைத் தவிர 75 சதவீதமான நோய்கள் சூழ்நிலைகள் மற்றும் பழக்கவழக்கங்களால் வருவதால் எப்போதும் விழிப்புணர்வுடன் வாழ்தல் சிறந்ததாகும். நவீன மருத்துவத்தில் பல்வேறு கண்டு பிடிப்புகள் மற்றும் முன்னேற்றங்கள் இன்றைய காலகட்டத்தில் ஏற்பட்டுள்ளது. ஆனால் இது மூலிகை மருத்துவத்துடன் ஒப்பிடுகை யில் பக்கவிளைவுகள் அதிகமாகவும், செலவு கூடிய மருத்துவ முறையாகவும் காணப்படுகின்றது. நோய் குணமாக காலம் கூடுதலாகத் தேவைப்பட்டாலும் மூலிகை வைத்தியத்தில் நோயின் அறிகுறிகள் அடக்கி வைக்கப்படாமல் முற்றாக் குண மாக்கப்படுகின்றது. எனவே எதிர்காலத்தில் இரசாயண மயமாக்கப்பட்ட சுற்றுச் சூழலில் ஆரோக்கியமான வாழ்வு வாழ மூலிகைகள் இன்றியமையாததாகக் காணப்படும் என்பது தெள்ளத்தெளிவான உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில் கொஞ்சும் கன்னனூர்

நா. சஞ்சிகா,
மட்/ கன்னன்குடா மகா வித்தியாலயம்.

வடக்கிலும் கிழக்கிலும் வாவி சூழ
வயல் வெளி சூழ்ந்த எம்கிராமம்
படகோடும் ஆற்றிலே வலைவீசி மீன்பிடித்து
பலர் வாழ்கை இங்கே மேன்மையுறும் - நிறை
குடமேற்றி மங்கையர் கோலங்களிட்டு
நேர்த்திக் கடன்கள் தான்முடிக்க
திடமுடன் அருள்தரும் எங்கள் காவல்
தெய்வம் கண்ணகி குடிகொண்ட கன்னனூர்

வயலிலே பச்சை பசுமைகள் இதம்தர
வந்தாரை வாழ வைத்திடு மெம்மூரில்
அயலிலே அழகிய கிராமங்கள் சில சூழ
அன்பாக ஆடுகள் மாடுகள் வளர்த்ததன்
தயவிலே வாழ்க்கையை யோட்டிடும் மானிடன்
தயிர் மோர் நெய்யென பல வளங்களைத் தேடி
சுயமாக பிறர் உதவியை நாடாது
சுதந்திரமாய் மக்கள் வாழ்ந்திடும் கன்னனூர்

அறிவினைத் திறந்திடும் அழகிய கல்விக்கூடம் - ஆலய
அருகினில் உயர் தரம் வரையுள்ளதால் - சைவ
நெறியது தவறாது எந்நாளுமிங்கே
நேர்மையால் வாழ்ந்திடும் மாவை வெண்புறாக் கூட்டங்கள்
அறிஞர்கள், கலைஞர்கள், புலவர்கள், கவிஞர்கள்,
அரச உத்தியோகத்தர்கள், அன்பான பெரியோர்கள்
இறைவனைப் பாடியே இதமாய் வாழ்ந்திடும்
எழில் கொஞ்சும் கிராமம் எம் கன்னனூராகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருகி வரும் விருந்தோம்பல் பண்பாடு!

● ஆரையூர் அருள்

ஒரு சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையின் வெளிப்பாடே பண்பாடு ஆகும். பழக்கவழக்கங்கள், நம்பிக்கை கள், மரபுகள், கலைகள், இலக்கியங்கள் முதலியவற்றால் இப்பண்பாடு அறியப்படுகின்றது. சுருங்கக் கூறின் பண்பாடு என்பது ஒரு தலைமுறையினர் சென்ற தலைமுறையினரிடம் பெற்றுக் கொண்ட வாழ்க்கை முறையாகும்.

ஓரினம் அல்லது சமூகம் நாகரீக முதிர்ச்சி அடைந்ததெனக் கருதப்படுமேயானால், அவ்வினம் அதை பாரம்பரியமாகக் கடைப் பிடித்து வரும். அத்துடன் பண்பாட்டு விழுமியங்களிலே நன்கு வேரூன்றிச் செழித்துள்ளதென்றே கொள்ளப்பட வேண்டும். இரசனை வேறுபட்டது என்பார்கள். ஆம், அந்த இரசனை போலவே பண்பாடுச் செயற்பாடுகளும் இடத்திற்கிடம், இனத்திற்கினம் மாறுபட்டவை யாகக் கைக்கொள்ளப்பட்டு வரலாம். ஆயினும் முழு மனித சமுதாய மும் ஓருணர்வாக அறிவு, மற்றும் அனுபவரீதியாக உணரப்பட்டு தேர்ந்தெடுத்த சில பண்பாட்டு விழுமியங்களும் உலகில் உள்ளன. இவையே உண்மையான சிறந்த, நாகரீக, பண்பாட்டு, விழுமியங்கள் எனலாம். ஒருவருக்கு ஔடதமாக உள்ளது வேறொருவருக்கு விஷமாக இருப்பது தெளிவு. உலகில் தோன்றி வளர்ந்த தொன்மை நாகரீகங்களில் மொகஞ்சதாரோ - ஹரப்பா என்னும் திராவிட நாகரீகமும் அடங்கும். இதன் கீழ் தமிழரும் அடங்குவர். தமிழரின் பண்பாட்டு விழுமியங்களில் தலைமையானவை காதல், வீரம், ஈகை, அறம் என்பவையாகும்.

மட்டக்களப்புத் தமிழகத்தில் பெயர் பெற்றிருந்த விருந்தோம் பல் என்னும் ஈகையறம் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள உலகியல் மாற்றங்களாலும், நவீன விஞ்ஞான சமூகப் பொருளாதார நெருக்கு வாரங்களினாலும் சுயத்தை இழந்து வலுவற்ற நிலையில் போலியாக வாழ்ந்து வருகின்றது. அன்றைய மட்டக்களப்பு தமிழ் சமூகத்தில் அகமும், முகமும் மலர வரவேற்று ஆசுவாசப்படுத்துவதொன்றே சமூகம் அடையும் மகிழ்சியாக இருந்தது. தமக்கு இயலாத போதும் வந்தவரை வரவேற்று உபசரிப்பதிலே அவர்கள் பெருமை கண்டார்கள். இதனால் தானோ என்னவோ "வந்தவரை வாழ வைக்கும் மட்டக்களப்பு" என்ற வார்த்தையும் பிரபல்லியமானது.

**"வருவிருந்து வைகலும்**
**ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுத்தல்**
**இன்று"**

நாள்தோறும் தன்னை நாடிவரும் விருந்தினரைப் போற்றி உபசரிக்கும் ஒருவனது வாழ்க்கை, எக்காலத்திலும் துயரமுற்று நலிந்து போவ தில்லை என்ற வான்புகழ் வள்ளுவரின் கூற்றுக்கமை வாக, மட்டக்களப்பு தமிழகம் அன்று விருந்தோம்பிச் சிறந்தது என்பது எவராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாத உண்மையாகும்.

**"அகனமலர்ந்து**
**செய்யாள் உறையும்**
**முகனமலர்ந்து"**
**நல்விருந்து ஓம்புவான்**
**இல்"**

என்ற திருவள்ளுவரின் திருக்குறளுக்கு ஒப்பாகவே, அதாவது முகமலர்ந்து தங்கள் வீடு நோக்கி வந்த விருந்தினரைப் போற்றுவான், இல்லத்தில் திருமகள் மனம் மலர்ந்தது என்றும் நீங்காது தங்கியிருப்பாள் என்று எண்ணாது விருந்தோம்பி உயர்வு பெற்ற இடமே மட்டக்களப்பு ஆகும். ஆரம்ப காலத்தில் தமிழரிடையே காணப்பட்ட விருந்தோம்ப லானது விருந்தினரை இன் முகம் காட்டி இதயபூர்வ மாக வரவேற்று, அவர்கள் விரும்பும் உணவு வகை களைத் தேடித் தயாரித்து, அன்பொழுகப் பரிமாறி அவர் களைப் போதும், போதும் என்று சொல்லுமளவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபசரிப்பர். இதனால் விருந்தோம்பலானது உறவுகளுக்கிடையே அன்பை மென்மேலும் வளர்ப்பதாகவே அமைகின்றது. இன்று அந்நிலை வெகுவாக அருகிவருகின்றது. இதற் கான காரணம் யாது? எனத் தேடப்புகுங்கால் எம் எதிரே கிடைக்க வரும் தகவல்கள் பின்வருமாறு அமைந்துவிடும்.

1. உலகியல் செய்தித் தொடர்பாடல்.
2. விஞ்ஞான அபிவிருத்தி
3. தற்கால சமூகமயமாதல் நிகழ்வு
4. வாழ்வியல் மாற்றமும், ஈடுபாடும்

இன்றைய கால கட்டத்தில் நவீன தொழில்நுட்பம் வாயிலாகச் செய்திப் பரிமாற்றம் மற்றும் தொடர்பாடல் முறைமைகள் மிகவும் இலகுவாக்கப்பட்டதொன்றாகவும், நினைத்த வுடனேயே நினைத்த காரியங்களை விசாரித்து அறிந்து கொள்ளத்தக்க விதமாகவும் முன்னேற்றம் கண்டுள்ளது. பல நாட்கள் அல்லது மாதங்கள் எடுத்து அடைய வேண்டியிருந்த பல விடயங் கள் இன்று கணனி, ஒளிக்காட்சி, மின்னஞ்சல் மூலமாக ஓரிரு நிமிடங்களிலே பெறத்தக்க வசதி வாய்ப்புக்கள் இப்போது மலிந்து விட்டது. மொத்தத்தில் முழு உலகமும் ஒரே கூரை வீடு போல் தொலைநீக்கம் ஏற்பட்டு விட்டது. இவை தவிர நவீன விஞ்ஞான ஆய்வுகள் மூலம் தினமும் புதுப்புது விடயங் கள் கண்டுபிடிக்கப்பட்டு அவை மனிதர்களின் தேவைகளை மிகவும் எளிதாக்கி வருவதோடு அவர்களையும் ஓர் எந்திர வாழ்க்கை வாழும் நிலைக்கு கொண்டுவந்துவிட்டது. அன்றைய காலகட்டத்தில் ஆண்டான் - அடிமை, ஆசிரியன் - மாணவன், முதலாளி - தொழிலாளி, அறிஞன் - அறிவிலி, உரைப்போன் - கேட்போன் என்ற பேதங்கள் பூரணத்துவமானவையாக, சிலருக்கு மட்டுப்படுத்தப்பட்டவையாக அமைந்திருந்த சூழல் மாறி, சமூகத்தில் அங்கம்வகிக்கும் ஒவ்வொருவரும் அதன் செயற்பாடுகளில் நேரடியான வகிபாகம் மேற்கொண்டுவரும் நிலை தோன்றியுள்ளது. இதனையே சமூக மயமாதல் என்று கூறப்படுகின்றது.

பண்டைய வாழ்வியல் முறை யோடு தற்கால சமூக வாழ் கையை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது நம்பமுடியாதளவிற்கு அதன் வியாபகம் பன்மடங்காக விசாலித் துள்ளது. இதனால் ஓய்வு, பொழுதுபோக்கு, அரட்டை என்ற செயற்பாடுகளுக்கு ஒதுக்கப் பட்ட நேரம் மிகக் குறுகி இருபத்துநான்கு மணிநேரமும் தான், தன் குடும்பம், தன் சமூகம் என்ற இலக்கை நாடி உழைத்து உலகியல் அந்தஸ்துக்கு உயர்வடையவே ஒவ்வொருவரும் பாடுபட்டுக்கொண்டிருக் கிறார்கள். இதனால் சமூகமட்டத்தில் அன்று நிலைத்து செழித்திருந்த பெரும்பாலான சமூகப்பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், காலப்போக்கில் வேரோடு சாய்ந்துவிட்ட நிலை உருவாகியுள்ளது.

வீதியில் ஒருவர் நோய்வாய்ப்பட்டு வீழ்ந்து கிடந்தாலும் அவரை அணுகி முடிந்த உதவிகளை செய்கின்ற மனப்பாங்கும் அவகாசமும் கூட இன்று எம் சமூகத்தில் இல்லை. அன்று அமெரிக்கா அல்லது ஐரோப்பிய நகரமொன்றில் மக்கள் நடந்து கொண்ட அதே மனப்பான்மை இன்று நம் சந்ததியினருக்கும் ஏற்பட்டு இருக்கின்றது. அன்று அன்போடு அணைத்து பரிமாறிய கைகள் இன்று ஓய்வு நிலைக்குச் சென்று விட்டன. சுயபரிமாற்றம் (Self Service) என்ற ஒரு புதிய கலாசார நடைமுறை எம் சமூகத் தில் தோன்றி அது இயல்பாகவே எம்மி டையே நிலைபெற்றிருந்த அன்பு, இரக்கம், ஈகை என்ற அரும் குணங்களை அப்படியே நீக்கிவிட்டது. சுயபரிமாற்றமானது விருந்து வழங்குவோர், விருந்தாளி, விருந்தோம்பல் என்ற முத்தொடர்களையும் வெட்டி அன்னியப் படுத்தி நிற்கின்றது.

அருகி வரும் எம்விருந்தோம்பல்ப் பண்பாடு மனிதனை ஒரு சமூக அந்தஸ்திலி ருந்து மாற்றி சுயநலமும், சுறுசுறுப்பும் அற்ற ஒரு வகையான மிருகவாழ்விற்கு மாற்றிவிட அதிக வாய்ப்புக்கள் உள்ளன. இதனை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து அதற்கான நலனைக் காண மீண்டும் விருந்தோம்பல்ப் பண்பாட்டினைக் கட்டியெழுப்ப வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டார் உருவாக்கிய நாட்டுக்கூத்து

● கலைக் கவிஞன்
பருத்திச்சேனை,
கன்னன்குடா.

ஓங்கார ஒடுக்கத்தில் உலகம் உருவானது என்று வேதங்கள் விளம்பின. அந்த ஓம் என்ற நாதமே இசையாகின. அந்த அசைவுச் சொல்லின் இசைகளே தாளம், இராகங்களாகின. அனைத்தும் ஒன்றுபட்டதே ஆட்டக்கலைகளாகின. சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாகிய உருத்திரனின் ஆட்டமே இன்றைய நாட்டுக்கூத்தின் தாளக்கட்டுக்களாக நாம் காண்கின்றோம். பரத முனிவரின் படிப்பிலிருந்து தான் பரதநாட்டியம் ஆரம்பமானது என்றால் நாட்டுக்கூத்தின் ஒரு பகுதியே பரதநாட்டியம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அப்படியானால் ஆதிசிவன் ஆடியதும் நாட்டுக்கூத்துதான். ஏனென்றால் சிவனுக்குக் கூத்தன் என்று ஒரு பெயர் வழக்கிலுண்டு.

சந்திர குலத்தோன்றல் யயாதியின் மகன் பரதச் சக்கரவத்தியின் ஆட்சியினால் பரதநாடு, பரதகண்டம் என்று பெயர் பெறுகின்றது. அந்த மன்னனின் ஆட்சியில் உருப் பெற்ற நாட்டியம் பரதன் நாட்டியமானது அதுவே பரத நாட்டியம்.

ஆதிசிவன் உருத்திரனாக சுடலையில் ஆடும் பொழுது அவரின் அதே ஆட்டத்தைச் சகிக்க முடியாத கணங்கள் சிதறி ஓட்டம் பிடித்தன. அந்த ஆட்டத்தினால் அலைந்து, கலைந்து ஓடிய பேய்க்கணங்கள் தமது எல்லைகளை மீறி ஓடிவிட்டனவா? என்று சிவன் எட்டிப்பார்த்த இடமே "தா தாம் தகதிந் தத்தகதிமி" என இன்றும் தென்மோடிக் கூத்தின் தாளக் கட்டுக்களாகத் தோன்றுகின்றது. அப்படியானால் கூத்தின் நாயகன் உருத்திரனென்றால் நாட்டுக்கூத்தின் தலைவனும் அவனே.

தமிழ் நாட்டில் காமன்கூத்து, கம்பம் கூத்து, வசந்தன்கூத்து, தெருக்கூத்து என பல்வகைக் கூத்துக்களின் ஆற்றுகை இடம் பெறுகின்ற போதிலும் நாட்டுக்கூத்து என்பது மட்டும் இல்லாதிருக்கின்றது. அதேபோன்று பிரதேசத்திற்கு ஏற்ப தாளக்கட்டுக்களும் மாறுபடுகின்றன. எமது மட்டக்களப்பு பிரதேச தாளக் கட்டுக்கள் தமிழ் நாடு, யாழ்ப்பாணம், வாகரை போன்ற இடங்களில் இல்லாது வேறுபட்டுக் கிடக்கின்றன. இம்மாற்றத்திற்குரிய விடயங்களை நோக்குவோம்.

மேலே கூறிப்பிட்ட கூத்து வகைகள் எமது பிரதேசத்திலும் வழக்கிலுண்டு. ஆனால் நாட்டுக்கூத்து மட்டும் எமது கிராமத்தில் ஒப்பனவாகவே இன்று மிளிர்கின்றது. எமக்கு தேவையானவைகளை நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்னும் தாரக மந்திரமாகக் கொண்டவர்களே தான் கிராமிய மக்கள். காடுகளை அழித்தனர், களனிகளை உருவாக்கினர். வீடுகள், மாடுகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டிருந்த கிராமியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுக்கென்று ஒரு கலையையும் உருவாக்கினர். அதுவும் காலத்தால் அழியாத, அழிக்க முடியாத நாட்டுக் கூத்தே தான் அது. இப்படிப்பட்ட நாட்டுக்கூத்துக் கலை இன்று நகரக் கூத்தாக மாறி வடிவங்கள் வழிதவறியுள்ளமை வேதனைக்குரிய விடயமே.

நாட்டுக்கூத்து என்பது எமது நாட்டாரால் கட்டியெழுப்பப்பட்ட அரும் பொக்கிஷம். அந்த பொக்கிஷத்தை நாங்கள் முழுமையாக திறந்து வைத்திருக்கின்றோம். யாரும் எப்படியும் படித்து விடலாம். ஆனால் நாட்டுகூத்து வெறும் கூத்தாக மாறி எக்காலத்திலும் அது நகரக் கூத்தாகி விடக்கூடாது என்பதே கலையார்வலர் களின் அவா! இன்றைய நகர மோகமும், நகர எழுத்தாளர்களின் பாணியும் அப்பாவின் பெயரை நீக்கிவிட்டு தன் பெயரை மட்டும் எழுதும் மகனின் கதை போல் மாறி வருகின்றது. இப்படியான நிலை தொடருமானால்ப் பல வருடங்களுக்கு பின்பு நாட்டுக்கூத்து கிராமிய கலையா? நகரக்கலையா? என்ற கேள்விக்கு இடமாகி அது எங்கு உருவானது என்று உருக் குலைந்து நகரத்திற்கே சொந்தமாகிவிடும். எனவே நாட்டுக்கூத்து, நாட்டுக்கூத்தாகவே இருக்கட்டும்.

ஈழத்தில் சோழர் ஆட்சி பரவியிருந்த காலம் அது தமிழும், சைவமும் தலை விரித்து தாண்டவமாடிய காலம். மட்டக்களப்பைப் பல தமிழ் மன்னர்கள் ஆண்டிருந்தாலும் சோழர் ஆட்சியுடன் ஒன்றிணைந்து கதிர்சுதன் ஆண்டிருந்த 1019ஆம் ஆண்டு காலம் இதுவே மட்டு நகருக்கு ஒரு மகத்தான காலம். தனக்கு வாரிசு இல்லாத காரணத்தால் பிள்ளை வரம் கேட்ட கதிர்சுதன் பல ஆலயங்களைக் கட்டியும், சில ஆலயங்களை செப்பனிட்டும் கொண்டிருந்தான். அவற்றுள் எமது மண்முனை மேற்கு பிரதேச வெட்டயச்சேனை பிள்ளையார் ஆலயம், புளியடிமடு காளியம்மன் ஆலயம் என்பன அடங்கும். இவனுடைய ஆலயப்பணியால் பிள்ளை வரம் கிடைத்ததால் சந்தோஷித்த மன்னன் தமிழ் நாடு தஞ்சாவூரில் இருந்து பல கட்டிடக் கலைஞர்களை ஈழத்திற்குக் கொண்டு வந்தான். தஞ்சாவூரில் இருந்து இவனால் கொண்டுவரப்பட்ட கலைகளில் ஒன்றுதான் நாட்டுக் கூத்துக்கலையும்; இன்று 993

## அன்னையே என் தெய்வம்



ஐயிரண்டு மாதங்கள்
அன்புடனே எனை வயிற்று - கரு
பையினுள்ளே தான் சுமந்து
பாதுகாத்து வந்திட்டாள்
துயில் கொண்டேன் நானங்கே
துயரேதும் இன்றியே
வெயில் கூடத் தீண்டாமல்
வெண்ணிலவாய் காத்திட்டாள்

பத்து மாதம் சென்ற பின்
பாலகி எனைப் பெற்றெடுத்து
நித்தம் துயரில்லாமல்
நிழல் மரமாய் காத்திட்டாள்
புத்தி பலதான் எனக்குரைத்து
புகழோடு மகள் வாழ
சத்துணவு ஊட்டியே
சாந்தமோடு வளர்த்திட்டாள்

சுற்றி வரும் சொந்தங்கள்
சுகம் வழங்கும் பந்தங்கள்
வற்றி விடா பாசங்கள்
வாழ்வதற்கு வீரங்கள்
பெற்றுத்தந்த அன்னையே - உன்
பிள்ளை போற்றும் தெய்வம் நீ
ஒற்றுமையை வளர்த்து உலகுக்கு
ஒளி கொடுத்த அன்னையே என் - தெய்வம்!

ரெ.மிதுஷா, தரம் - 10M, மட்/ கன்னன்குடா மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வருடங்களைக் கடந்து கிராமியக் கலையாக நிற்கும் நாட்டுக்கூத்துக் கலையை வணங்குவோம்.

993 வருடங்களுக்கு முன்பு கலைகள் மலிந்திருந்ததே தவிர நகரங்கள் மலிந்திருக்கவில்லை. நாட்டார், நகரத்தார் என்ற வேறுபாடில்லை. பாடுவான்கரை, எழுவான்கரை என்று பகுத்துப் பார்க்கும் பழக்கமும் இருக்கவில்லை. அப்போது உருவானதே இந்த நாட்டுக் கூத்து. களனியில் அறுவடை முடிந்ததும் சித்திரை புத்தாண்டைக் கொண்டாடிய எமது மக்கள் ஆலயங்களில் திருவிழாக்களை எதிர்பார்த்தனர். அந்தத் திருவிழா சுவை பெற வேண்டும் என்பதினால் இரவு நேரங்களில் கலை நிகழ்வாக நாட்டுக்கூத்துக்களை ஆடினர். அப்படி நாட்டாரால் இயற்றப்பட்டு, ஆடப்பட்டு உருவான நாட்டுக்கூத்தை நாட்டுக் கூத்து என்று கூறுவதில் என்ன தப்பு?

கதிர்சுதனால் கொண்டுவரப்பட்ட நாட்டுக்கூத்து திருக்கோவில், அக்கரைப்பற்று போன்ற இடங்களில் தான் முதலில் காலூன்றியது. இருப்பினும் உலகநாச்சியின் வருகைக்குப் பின்பு இது மண்முனை வழியாகக் கொண்டு வரப்பட்டு தாளங்குடா சாதித்தொழில் செய்யும் மரபில்தான் திமிலைதீவு, வலையறவில் வாழ்ந்த சீனித்தம்பி என்பவரால் எமது மண்முனை மேற்குப் பிரதேசத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இது 1901ம் ஆண்டு என தகவல்கள் கூறுகின்றன.

நாட்டுக்கூத்துக்களை இயக்கிய புலவர்களும், அண்ணாவிமார்களும், கிராமியர்களாகவே இருக்கின்றனர். அவர்களில் சிலரை நாம் நோக்குவோம். திரு.நோஞ்சிப்போடி (கன்னன்குடா) அண்ணாவியார், இவர் பன்னிரண்டிற்கு மேற்பட்ட நாட்டுக்கூத்துக்களை இயற்றியும், பழக்கியும் உள்ளார். கலாபூசணம் விருதுபெற்ற திரு.மா.பொன்னம்பலம் (கன்னன்குடா) அண்ணாவியார், இவர் நான்கு நாட்டுக்கூத்துக்களை இயற்றியும், பழக்கியுமுள்ளார். திரு.மா.சிதம்பரப்பிள்ளை (கன்னன்குடா) அண்ணாவியார், இவர் இருபத்தொரு நாட்டுக்கூத்துக்களை எழுதியதோடு கலைமானி விருதும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு.நோ.சண்முகநாதன் (பருத்திச்சேனை, கன்னன்குடா) இவர் நான்கு நாட்டுக்கூத்துக்களை இயற்றியதோடு பல நாட்டுக்கூத்துக்களை பழக்கியுமுள்ளார். மீண்டும் நாம் இங்கே பல அண்ணாவிமார்களை நோக்குவோமாயின் இதிலிருந்து இவர்கள் கிராமங்களைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஊர்சிதப்படுத்தப்படுகின்றது.

இன்று எத்தனை கவிஞர்கள், எத்தனை புலவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டவர்கள், விருதுபெற்றவர்கள் நகரத்தில் இருந்தாலும் ஒரு நாட்டுக்கூத்தை இயற்ற முடியாதது ஏன்? அவர்களுக்கு அது தெரியாதா? அல்லது நாட்டுக்கூத்துக்களை இயற்றுவதில் அவர்களுக்கு விருப்பம் இல்லையா? அல்லது நாட்டுக்கூத்தை இவர்கள் புறக்கணிக்கின்றார்களா? எங்கள் ஆக்கங்களை கொண்டு சென்று இது நாட்டுக்கூத்தல்ல வெறும் கூத்துத்தான் என்று மார்தட்டும் இவர்கள் வெறும் கூத்தையாவது படைக்க விரும்பாத காரணம் என்ன? அப்படி இவர்கள் நாட்டுக்கூத்தை உருவாக்கினாலும் அதற்கு நகரக்கூத்து என்றுதான் பெயரிட வேண்டும். ஏனென்றால் நாட்டுக்கூத்து என்றால் சிலருக்கு நாக்குக் கூசும்.

இரவு பகல் சிந்தித்து பல நாட்களின் உழைப்பின் பயனாக நாம் பெற்றுக்கொள்ளும் அறுபடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் ஒரு நாட்டுக்கூத்து. இதனை எவரும் ஆடலாம், பாடலாம், பார்க்கலாம், எடுத்துக்கொண்டு கூடப் போகலாம். ஆனால் எம்மைக் கொச்சைப்படுத்துவதானது திரும்பி நின்று குதிகால் வெட்டுவதற்கு நிகரானது.

கூத்து என்று கூறுவதை விட நாட்டுக் கூத்து என்றால் என்ன? ஒரு பொருளை உருவாக் கும்பொழுது அதனை உருவாக்கிய இடத்தை யும், அது வந்த வழியையும் தட்டிக்கழிப்பது சரிதானா? நாட்டாரால் உருவாக்கம் பெற்ற நாட்டுக்கூத்து நாடு விட்டுப் போனாலும் நாட்டுக் கூத்துதான். கிராமங்கள் உள்ளவரை கிராமிய கலைஞர்களின் பேனாமுனை சுழன்று கொண்டி ருக்கும் வரை, கிராம அண்ணாவிமார்களின் ஆவி போகும் வரை நாட்டுக்கூத்து, நாட்டுக் கூத்தா கவே எம்மிடம் மிளிரும். எம்மை சீர்படுத்த நினைக்கும் சீர் திருத்தவாதிகள் தம்மை முதலில் சீர்படுத்திக் கொள்ளட்டும்.

ஒரு நாட்டின் முதுகெலும்பு கிராம மக்களே! என்ற மகாத்மாகாந்தியின் பொன் மொழிக்கு அமைய ஒரு நாட்டார் கலையான நாட்டுக்கூத்துக்கு முதுகெலும்பு கிராமமக்களே என்றால் அது மிகையாகாது. இன்று பிரதேச ரீதியாக, மாவட்ட ரீதியாக, மாகாண ரீதியாக, அகில இலங்கை ரீதியாக வெற்றிபெறும் நாட்டுக் கூத்துக்கள் கிராமியர்களின் படைப்புக்களே! எனவே, நாட்டுக்கூத்தினை வெறும் கூத்தாக மாற்றுவதை இனியாவது நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பது கிராமியக் கலைஞர்களது அவாவாகும்.

---

# அழிவின் ஆசை



நெல்லை விற்று அரிசி வாங்க ஆசை
பசும் பாலை விற்று பால்மா பக்கட் வாங்க ஆசை
உயிர் மீனை விற்று டின்மீனை வாங்க ஆசை
விறகை விற்று சமையல் வாயு வாங்க ஆசை
மண்ணில் விளையும் மரக்கறிவிற்று மாற்றான்
மரக்கறி வாங்க ஆசை

இளநீர் விற்று சோடா வாங்க ஆசை
தோடம் பழம் விற்று வெளிநாட்டு ஒரேஞ் வாங்க ஆசை
பன்பாயை விற்று இறப்பர் பாய் வாங்க ஆசை
மாட்டின் எருவை விற்று யூரியா வாங்க ஆசை
பனம்பழம் விற்று ஒடியல் வாங்க ஆசை
தேனை விற்று நோயை வாங்க ஆசை
தயிரை விற்று யோக்கட் வாங்க ஆசை
கச்சான் விற்று பீனட் வாங்க ஆசை
ஆசை ஆசை இவை எல்லாம் அழிவின் ஆசை.

கதிரேசன் சத்தியநாதன்,
ஆயித்தியமலை வடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




● திரு.பி. குருபரன்,
கிராமசேவை உத்தியோகத்தர்,
கன்னன்குடா.

"வயல்களும் வற்றாத ஆறும் நிறைந்த மட்டக்களப்பு நன்நாட்டை.........." ஆசிரியர் போற்றும் அணிசார் இலங்கையிலே "சீரார் குணதிசையை சேர்த்து வளர் புகழும் ஏரால் இயன்ற செந்நெல் இன்சுவையைத் தீங்கன்னலொடு தெங்கிளநீரும் தீம் பலவினள்ளமிர்தம் எங்கும் குறையா இயலுடைய நன்னாடு மட்டக்களப் பெனும் மாநாடு......" என யாழ் நூல் சிறப்பித்துக் கூறும்.

சங்க இலக்கியங்கள் போற்றும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நிலச் சிறப்புக்களோடு கூடிய மட்டக்களப்பு மாநகரின் தென்மேற்கு திசையில் நீரரா மகளிர் என சிறப்பித்துப் பேசும் பாடும் மீன்களும், அவ் விசைக்கேற்பத் துள்ளியாடும் கயலினங்களும், நிறைந்த கடனீரேரியும், செந்நெல் குவிந்து பின்னர் ஆவிற்கு உணவிடும் வயல் நிலங்களும், அவ்வயல் நிலங்களில் உண்ட சுவை மாறும் முன் சுரக்கும் பாலும், தயிரும், நெய்யும், சோலை வனங்களில் பாடும் குயிலும், ஆடும் மயிலும், பூவின் தேனும், மாரியில் பொங்கும் நீரோடைகளும் நிறைந்து விளங்கும் எம்மினிய பிரதேசம் மண்முனை மேற்காகும்.

இம்மண்முனை மேற்குப் பிரதேசத்தில் வவுணதீவு, கன்னன்குடா, மண்டபத்தடி, வெட்டையச்சேனை, ஊராசேரி, கொத்தியாபுலை, புளியடிமடு, மங்கிக்கட்டு, கரவெட்டி, விளாவெட்டுவான், நரிப்புல்த்தோட்டம், சின்னத்தோட்டம் போன்ற வரலாற்றுடன் தொடர்புடைய பழந்தமிழ்க் கிராமங்கள் எல்லாம் நெற் பயிருடன் தொடர்புபட்ட வேளாண்மைச் செய்கையைப் பிரதானமாகக் கொண்ட வயல் நிலங்கள் நிறைந்த கிராமங்களாகும். இக்கிராமங்களில் வாழும் மக்கள் தொன்றுதொட்டு நெற்பயிர்ச் செய்கையைப் பாரம்பரிய முறைப்படி செய்து வந்தனர்.

இப்பிரதேசத்தின் நெற்செய்கையானது மழையை நம்பி செய்யும் பெரும் போகம் (மானாவாரி) மற்றும் குளத்து நீர்ப்பாய்ச்சலை நம்பிச் செய்யும் சிறுபோகம் (காலபோகம்) என இரு நிலைகளில் பிரதானமாகச் செய்யப்பட்டு வந்தாலும் சில இடங்களில் இடைப்போகம் என்னும் முறையிலும் நெல் பயிரிடப்படுகின்றது. இவற்றிலே பெரும்போகம் ஆவணி தொடக்கம் மாசி மாதங்களிலும், சிறுபோகம் பங்குனி தொடக்கம் ஆடி மாதங்களிலும், இடைப்போகமானது இவை இரண்டிற்கும் இடைப்பட்ட காலங்களில் மேற்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்ட காலத்திற்கு முன்பே முற்குக வன்னிய அரசர்கள் ஆட்சி செலுத்தினர். அவர்களின் பின் போடிகளின் ஆதிக்கம் ஏற்பட்டிருந்தது. வேளாண்மையிலிருந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் முற்காலத்தில் முக்கியமான உணவினையும், வருமானத்தினையும் பெற்று வந்தனர் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும். தொடக்கத்தில் ஆட்சி செய்த முற்குக வன்னியர்களுக்கே நிலங்கள் எல்லாம் சொந்தமாக இருந்தன. இவற்றை அவர்கள் தம் கீழுள்ள பிரதானிகள் மற்றும் குடிகளுக்கு கொடுத்து பழைய முறைகளுக்கிணங்க அவர்களிடமிருந்து விளைச்சலின் ஒரு பகுதியைப் பூமிக் குத்தகையாகப் பெற்று வந்தனர். வன்னிய அரசர்களுக்குப் பிற்பட்டதாக ஆதிக்கம் பெற்ற போடிகளும் இம்முறையையே கையாண்டனர்.

மட்டக்களப்பிலிருந்த நிலங்களெல்லாம் முற்குக குலத்தலைவர்களான போடிகளுக்கு பிற்காலத்தில் சொந்தமாக வந்த போது அவர்களும் பண்டைய வழமைகளுக்கு ஏற்ப செய்கை பண்ணிவித்து, தமக்குரிய வருமானத்தையும் பெற்றுக் கொண்டனர். பிரித்தானியர் ஆட்சியின் ஆரம்ப காலம்வரை மட்டக்களப்பின் எல்லா நிலங்களுமே முற்குகர் குலப்போடிகளுக்கு மட்டுமே சொந்தமாக இருந்தன. 1803ஆம் ஆண்டில் முற்குகப் போடிகளுக்கும் பிரித்தானியருக்கும் இடையே ஏற்பட்ட பெரும் சண்டையின் போது பிரித்தானியர் தமது மேலாதிக்கத்தின் மூலம் போடிகளிடமிருந்த பெரும்பாலான பூமிகளையெல்லாம் பறித்தெடுத்தனர்.

மட்டக்களப்பு வன்னிய இராசாக்களும், போடிகளும் தமக்கிருந்த நிலங்களுக்கேற்ப அவற்றில் உழுவதற்குரிய மாடுகளை வைத்திருந்தனர் என்பதை ஊகித்து அறிந்து கொள்ள முடிகின்றது. மட்டக்களப்பில் வேளாண்மைச் செய்கை பற்றிய பல வழமைகள் இவர்களின் காலத்திலேயே ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. பிரித்தானியர் நிலங்களை வேறு இடங்களில் இருந்து கொண்டுவந்த தமது அடிவருடிகளின் உதவியுடன் பறித்தெடுத்து பிரித்தானிய அரசுக்குரிய (crown) நிலமாக ஆக்கிக்கொண்டனர். இவ்வாறு செய்து பல வருடங்களின் பின்பே மட்டக்களப்பில் இருந்த வேறு சாதியினருக்கும் நிலங்கள் விற்கப்பட்டிருப்பதை இன்று தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

நெற்செய்கை சம்பந்தமாக முற்குகப் போடிகளினால் கடைப்பிடிக்கப்பட்டுவந்த வழமைகளே வேற்று சாதி மக்களாலும் கடைப்பிடிக்கப்பட்டன. அத்துடன் நிலங்களைப் பெற்ற வேற்றுச் சாதியினரும் "போடிகள்" என்ற பட்டப் பெயராலே அழைக்கப்படலாயினர். இது சம்பந்தமாகப் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் "மட்டக்களப்பில் முற்குகருக்குரிய வழமைகளே மற்ற எல்லாச் சாதியினராலும் கடைப்பிடிக்கப்பட்டது" என்று கூறியிருப்பதை இங்கு எடுத்துக்காட்டலாம்.

போடிகளின் காலத்திலேதான் அவர்களுக்குரிய வயல்களைச் செய்கை பண்ணும் முன்னிலைக்காரர்கள் (முல்லைக்காரர்கள்) மற்றும் செய்கைக்காரர்கள் முறைமை ஏற்பட்டதா? அன்றி வன்னிய அரசர்கள் காலத்திலே ஏற்பட்டதா? என்பதனையிட்டுத் திடமாகக் கூறமுடியாதுள்ளது. ஆயினும் நீண்ட காலத்திற்கு முன்பே இது ஏற்பட்டுவிட்டது எனக்கூறலாம்.

ஆங்கிலேயரின் காலத்திலேயே பூமியின் பரப்பைக் குறிக்கும் ஏக்கர் எனும்சொல் பாவனையில் இருந்தது. இந்த ஏக்கர் அளவு ஆங்கிலேயரிடதிலும் பார்க்க சிறிது கூடியது. அதற்கு முன்பு பரப்பைக் குறிப்பதற்கு அவணைத்தரை (தறை) என்று கூறுவதே வழக்கமாக இருந்தது. கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலும் பின்னும் எழுதப்பட்ட உறுதிகள் பலவற்றில் சரியான ஏக்கர் தொகை குறிப்பிடப்படாது இத்தனை அவணம் விதைப்புத் தரை என்று கூறப்பட்டுள்ளதை நோக்கினால் இது புலனாகும். (ஒரு அவணத்தரை என்பது மூன்று ஏக்கர் நிலத்தைக் குறிக்கும்) போடி ஒருவர் அவருக்குரிய ஐம்பது ஏக்கர் பூமியை செய்கைபண்ணுவதற்கு ஒரு முல்லைக்காரனையும் அவனின் கீழ் எட்டுச் செய்கைக்காரனையும் வைத்துக் கொள்வதே முன்புவரை வழக்கமாக இருந்தது. இம்முறையே இந்த நூற்றாண்டின் (21ம் நூற்றாண்டில்) சமீபகாலம் வரையும் பெரிய போடிகளால் பின்பற்றப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண்மைச் செய்கை ஆரம்பிப்பதற்கு முன்பதாக வேளாண்மை பற்றிய ஆரம்பக் கூட்டம் நடைபெறும். பிரித்தானியரால் ஏற்படுத்தப்பட்ட நீர்ப்பாய்ச்சல் சட்டத்திற்கு அமைவாக குறிப்பிட்ட பல கண்டங்களின் வயல் சொந்தக்காரர்களையும், குத்தகைக்காரர்களையும் உள்ளடக்கியதாக மாவட்ட அரசாங்க அதிபரினால் அழைக்கப்படும் கூட்டம் பொதுவான ஒரு இடத்தில் நடத்தப்படும். இக்கூட்டத்தில் பயிர்ச் செய்கை தொடங்குதல், முடிவுறுதல், இடைப்பட்ட காலத்தில் செய்ய வேண்டிய பொது வேலைகள் பற்றிய தீர்மானங்கள் குடியிருப்பாளர்களால் தீர்மானிக்கப்படும். முற்காலத்தில் மட்டக்களப்பிலிருந்த எல்லா நிலங்களுக்கும் சொந்தக்காரர்களாக இருந்த முக்குகக்குலத் தலைவர்கள் தமக்குள் ஒன்றுகூடிப் பயிர்ச் செய்கை பற்றிய தீர்மானங்க்களை எடுத்தனர். இவ்வாறு பாரம்பரியமாக நடந்துவந்த கூட்டங்களே பிற்காலத்தில் மாவட்ட அரச அதிபரால் நடத்தப்படும் ஆரம்பக் கூட்டங்களுக்கும் முன்னோடியாக அமைந்திருந்தது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

பயிர்ச்செய்கை ஆரம்பக் கூட்டத்தில் மேற்க்கொள்ளப்படும் தீர்மானங்கள்.

1. விதைப்பு ஆரம்பிக்கும் திகதி
2. நெல்லினம்
3. நீர்ப்பாய்ச்ச உதவும் வாய்க்கால்களைத் துப்பரவு செய்தல்
4. விதைப்பு முடிவடையும் திகதி
5. வயலுக்கு அருகில் உள்ள பற்றைக் காடுகளை வெட்டி வெளியாக்குதல்
6. வேலி கட்டுதல் முடிவடையும் திகதி
7. வட்டையில் காவல் வேலை ஆரம்பிக்கும் திகதி
8. சூடு அடித்து நெல்லை வட்டையிலிருந்து அப்புறப்படுத்துதல் பற்றிய தீர்மானம்
9. வேளாண்மை வெட்டு முடிந்து வட்டைக் காவல் முடிவுறும் திகதி (வட்டை வேலைகளை முடிவுக்கு கொண்டு வரும் திகதி)

ஆரம்பத்தில் பயிர்ச்செய்கை ஆரம்பக் கூட்டம் மானாவாரிக் காணிகளுக்கு வேறாகவும், குளங்களிலிருந்து நீர் பெற்ற நீர்ப்பாசல் காணிகளுக்கு வேறாகவும் நடத்தப்பட்டு வந்தது. இன்றும் அவ்வாறே வேறு வேறாக நடத்தப்பட்டு வருகின்றது. ஆரம்பக் கூட்டத்தில் மேலே கூறப்பட்ட தீர்மானங்களைத் தவிர காணிகளுக்கு இடாப்பு வைக்கும் முறை பற்றியும் இடாப்பு வைப்பதற்குரிய கடைசித் திகதி பற்றியும் தீர்மானிக்கப்படுவது வழக்கமாக இருந்தது. இந்த இடாப்பு வைக்கும் முறை 1917ஆம் ஆண்டு உண்டாக்கப்பட்ட 45ஆம் இலக்க நீர்ப்பாய்ச்சல் கட்டளைச் சட்த்தின் 19ஆம் பிரிவின் கீழ் கிழக்கு மாகாணத்திற்கென உண்டாக்கப்பட்ட 9ஆம் இலக்க உப பிரிவின் படி செய்யப்பட்டு வந்தது. முன்பு கூறப்பட்ட மானாவாரிக் காணிகளுக்கான ஆரம்பக் கூட்டம் முன்பு நீர்ப்பாய்ச்சல் சட்ட பிரிவின் கீழ் நடத்தப்பட்டு வந்தது. பின் மானாவாரிகளுக்கான 1941ஆம் ஆண்டிலிருந்து கிராம சபைச் சட்டத்தின் 198ஆம் அத்தியாயத்தின் கீழ் உள்ள பிரிவு 49(2) (xxii)இன் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்திற்கென ஆக்கப்பட்டு இலங்கையின் ஆளுனரால் (Governor) அங்கிகரிக்கப்பட்டு 15.8.1941இல் 8781ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பிரமாணங்களுக்கமைய அரசாங்க அதிபரால் அல்லது அவரின் பிரதிநிதியால் அழைக்கப்பட்டு நடத்தப்பட்டது.

வட்டை விதானை என்பவர் ஒவ்வொரு வட்டையிலும் பயிர்ச்செய்கைக் கடமைகளை மேற்பார்த்து நடத்துவதற்காக வட்டையில் உள்ள போடிமார், குத்தகைப் போடிமார் ஆகியோரால் நியமிக்கப்படும் ஒருவரேயாவர். இவரது நியமனம் பற்றியும் சிறிது விளக்கிக் கூறவேண்டியுள்ளது. இந்நியமனமும் நீர்ப்பாய்ச்சல் சட்டத்தின் கீழ் நடைபெற்றது. அதற்கு முன் 1906ஆம் ஆண்டின் நெற்பயிர்ச் செய்கைக் கட்டளைச் சட்டத்தின் (Paddy Cultivation Ordinance) கீழாக்கப்பட்ட பிரமாணத்தின்படி நீர்ப்பாய்ச்சல் தலைமைக்காரன் (Irrigation Headman) எனும் பெயரில் நியமிக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நியமனம் அப்போது நீர்ப்பாய்ச்சல் பணிப்பாளரின் கிழக்கு மாகாண அலுவலகம் திருகோணமலையில் இயங்கியதால் அங்கிருந்தே தலைமைக்காரனுக்குரிய நியமனக் கடிதம் பணிப்பாளரினால் வழங்கப்பட்டது. முன்பு கூறப்பட்டுள்ள அரச வர்த்தமானி பிரமாணங்களின் கீழும் பின் கொண்டுவரப்பட்டு சட்ட பூர்வமாக்கப்பட்டது.

மாவட்டத்தின் அரசாங்க அதிபர் ஒரு வட்டையில் உள்ள போடிகளையும் குத்தகைக் காரர்களையும் குறித்த ஒரு தினத்தில் ஓர் இடத்தில் கூடும்படி அறிவிப்பார். அப்படியான ஒரு கூட்டத்தில் சமூகமளிப்போரில் அதிகமான வர்களால் தெரிவு செய்யப்படுபவரே வட்டை விதானையாவார். இவரது நியமனம் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை நடைபெற்று வந்தது. தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு அரசாங்க அதிபரால் நியமனப்பத்திரம் வழங்கப்படும். வட்டவிதானை தமக்கு உதவியாக ஒரு வட்டைக்காவலன் (அதிகாரி) ஒருவரை அரசாங்க அதிபரின் ஒப்புதலுடன் நியமித்துக்கொள்வார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கூறப்பட்ட வர்த்தமானியின் விதிகள் அமுலில் இருந்த பிரதேசங்களில் மண்முனை பற்று மேற்கு (மண்முனை மேற்கு) அடங்கும். இப்பகுதி அப்போதைய கிராம ஆட்சிமன்ற பிரதேசமாகும். பண்டைய வேளாண்மைச் செய்கைக்கு மாடுகளே (பசு, எருமை) உழவு, சூடு அடிப்பு வேலைகளுக்குத் தேவையாக இருந்தமையினால் மட்டக்களப்பினை ஆட்சி செய்த முக்குக வன்னியர்களும் அவர்களின் பின் செல்வாக்குப் பெற்ற போடிகளும் தமது வயல் வேலைகளுக்குத் தேவையான மாட்டுப் பட்டிகளை வைத்திருந்தனர்.

பிரித்தானியரின் ஆட்சியில் பெரும் போடிகளின் வயல்கள் அரசுடைமையாக்கப்பட்டு 1815ஆம் ஆண்டின் பின் மட்டக்களப்பில் இருந்த மற்றய சாதியினருக்கும் நிலங்கள் விற்கப் பட்டன. இவர்களும் ஆங்கிலேயரோடு 1803ஆம் ஆண்டு சண்டையின்பின் சமரசம் செய்து கொண்ட போடிகளும் சண்டையில் ஈடுபடாத சில போடிகளும் ஆங்கிலேயரால் வன்னிமைகளாக நியமனம் பெற்றவர்களும் மாட்டுப்பட்டிகளை வைத்திருந்தனர். இவர்களின் சந்ததிகளுக்கு இந்த நூற்றாண்டிலும் மாட்டுப்பட்டிகள் உள்ளன. 1960க்கு முற்பட்ட காலத்தில் போடிகள் எல்லாம் தமது வயல்களை மாடுகளைக் கொண்டே உழவு செய்தனர். உழவு இயந்திரங்கள் பெருமளவில் 1960களின் தொடக்கத்திலிருந்தே இப்பிரதேசத்திற்கு பாவனைக்கு வந்தன.

முன்பெல்லாம் ஆடி மாதத்தில் மழை பெய்து வந்தது. உழவினைப் பொறுத்தவரையில் ஆடி மாதத்தில் உழவு செய்வதை இங்கு குறிப்பிட வேண்டும். "ஆடி உழவு தேடி உழு" என்பது மூதுரை. முதலாவதான உழவை "நிலையெடுப்பு" என்றும் பின் ஆவணியில் நடைபெறும் இரண்டாம் உழவினை "இரட்டிப்பு" என்றும் கூறுவர். அடுத்து புரட்டாதியில் மழை பெய்ததும் உழவு வேலை தொடர்ந்து நடைபெறுவதுடன் வரம்புக்கு மண்வைத்து வரம்பு கட்டுதல், வரம்பு திருத்துதல், முறிவு கட்டுதல் போன்ற வேலைகள் நடைபெறும். அந்நாட்களில் வசதியைப் பொறுத்து ஏழு உழவுகள் உழுவதுண்டு.

**நாளுக்கு நெல் கொத்தும் நிகழ்ச்சி:**

படி கொடுத்து மேற்கூறியவை நடந்து கொண்டிருக்கும்போது மங்களகரமான நாளில், சுபநேரத்தில் நாளுக்கு நெல் கொத்துதல் நடைபெறும். ஒரு காணியில் சூட்டுக் களம் வைக்கும் வரவை "களவட்டி" வரவை என்று அழைக்கப்படுவதே வழக்கமானதொன்றாக இருந்து வந்தது. அப்படியான ஒரு வரவைக்கு பொங்கல் பொங்கி வரவையின் வடகிழக்கு மூலையில் படைத்து கடவுள் வழிபாடு நடைபெறும் இந்த மூலையில் ஒரு சிறு மண்பாத்தி போல் அமைத்து அதன் மீது போடியார் வீட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட விதை நெல்லை தலையில் வைத்தவாறே இரு கைகளாலும் பாத்தியில் தூவுவார்கள். பின்னர் மண் வெட்டியால் கொத்தி நெல் தானியங்கள் மண்ணுக்குள் மூடப்படும். நெல் தூவுதலை போடியார் செய்வார். சிறுபெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் எடுத்து வரப்படும் நெல் தானியத்துடன் காசு, நவதானியங்கள் வைக்கப்பட்டிருப்பது வழக்கமாகும். போடியாரைத் தொடர்ந்து முல்லைக்காரனும் மற்றைய வேளாண்மைக் காரர்களும் நெல்லைத் தூவிய பின் பாத்தியில் தண்ணீர் ஊற்றப்படும். தொடர்ந்து போடியாரும் அதன்பின் முல்லைக்காரனும் நெல் மண்ணுடன் கலக்க மண்வெட்டியால் கொத்தி பதப்படுத்து வார்கள். நாளுக்கு கொத்திய நெல் முளைத்த பின், பயிர் கவனமாக பாதுகாக்கப்படும். புதிர் எடுத்தல், புதிர் சாப்பிடுதல் என்பன நடைபெறும் போது இந்த நெற்கதிர்களும் பாவிக்கப்படுதல் வழக்கமாக இருந்தது.

**ஏர் நாள் வேலை செய்தல்:**

தலை மழை பெய்ததும் உழவு தொடங்குவதற்கான ஒரு சுபநேரத்தில் "ஏர் நாள்" வேலை செய்யப்படும். அன்றைக்கு உழவு மாடுகளுக்கு மாலைகள் சூட்டி, சந்தணம், திருநீறு கொண்டு நெற்றியில் பொட்டுக்கள் வைக்கப்படும். உழவு கலப்பையின் நீண்ட தடியான ஏர்க்காலிலும், நுகத்திலும், மேழியிலும் மாலை சூட்டி அலங்கரிக்கப்படும். கலப்பையில் அலங்கரிக்கப்பட்ட மாடுகள் பூட்டப்பட்டதும் நுகத்தில் அடித்துத் தேங்காய் உடைக்கப்பட்ட பின் உழவு வேலை ஆரம்பிக்கப்படும். குறிப் பிட்ட ஒரு களவெட்டி வரவையிலேயே இது நடைபெறுவது முன்பு வழக்கமாகும். இதன்பின் தொடர்ந்து உழவு வேலை நடைபெறும். "ஏர் நாள்" வேலை நிகழ்ச்சியினைப் பலர் சித்திரை வருடம் கழித்து ஒரு சுபதினத்தில் செய்வத னையும் கைக்கொண்டனர். நேரகாலத்திற்கு (ஆடி) உழவு வேலை செய்ய இது உதவும் என்பதும் அவர்களின் கருத்தாகும்.

**நெல் விதைத்தல் :**

தமிழ்ப் பஞ்சாங்கப்படி புரட்டாதி மாதத் தில் நெல் விதைப்பு ஆரம்பமாகும். முதலில் நாலரை மாத இனமான வாணன் நெல் விதைப்பதே வழக்கமாக இருந்தது. (தற்போ தைய புது இனங்களெல்லாம் முப்பது ஆண்டு களுக்கு பிற்பட்டவையே என்பதை ஞாபகப் படுத்துதல் அவசியமானதாகும்) விதைக்கப்படும் முக்கிய நெல்லினங்களாக உதஞ்சம்பா, அழகுச் சம்பா, சின்னச்சம்பா, முத்துச்சம்பா, முருகன் சம்பா, முருங்கைக்காயன், முந்திரியன், கறுப்பன், கல்லுருண்டை, சீனட்டி என்பன பிரதானமான தாகும். கறுப்பன், சீனட்டி என்பன இரண்டரை மாத இனங்களாகும். இன்னும் சில இனங்களும் மட்டக்களப்பில் பழக்கத்தில் இருந்தன.

முன்பெல்லாம் வயல் விதைப்பு கார்த்திகை (தமிழ்) மாதம் வரை நீடிக்கும். விதைப்பு ஆரம்பிக்கப்பட்டு வட்டையில் எங்கும் உழவு வேலை நடைபெறும் போது உழுவோர் மாடுகளுக்கு "வரம்போரம்" (வரம்போரம் போகும் படி) "செவ்வை" (நேராகப் போகப் பணித்தல்) "வளைந்துவா" போன்ற வார்த்தைகளை பல் பக்கங்களில் இருந்தும் உரக்கக்கூறுவதைக் கேட்டுக்கொண்டிருப்பது கேட்போருக்கு இனிமை யளிப்பதாகும். விதைப்பு வேலை முடியும் மட்டும் வட்டைகளெல்லாம் ஒரே கலகலப்பாக இருக்கும். நெல் விதைத்த பின் வயல் உழும்போது இரண்டு உழவு உழுவதே வழக்க மாகும். இதனை "நெல் மறுத்தல்" என்று கூறப்படும். ஆனால் முன்னர் வசதியைப் பொறுத்து விதைக்கும் முன் பல உழவுகள் உழுதல் வழக்கத்தில் இருந்தது. விதைக்கப் படும் ஒரு வயலில் போடியாருக்கு இலவசமா கவும் ஒரு சிறு பகுதி விதைக்கப்படும். இது "முத்தெட்டு" என அழைக்கப்பட்டது. அதேபோல் முல்லைக்காரனுக்கு விதைத்து கொடுப்பது "முல்லை இலவசம்" என்று கூறப்படுகிறது. உழவின் போது களைப்பைப் போக்க பல இனிமையான பாடல்கள் உழவர்களால் இசையுடன் பாடப்படும். இவை கேட்போருக்கு மிக இனிமையயப்பதாக இருக்கும். இவற்றில் சில பாடல்களை இங்கு பார்ப்போம்.

**ஏர்ப்பாடல்**

ஓரம் போ '...சார் பார்
ஏஎஎ............எஎ
சார் பார்த்த கள்ளனடா – செல்லன்
தாய் வார்த்தை கேளாண்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரக் கலப்பையடா செல்லனுக்கு
பார மேத்தத் தோணுதடா

வரம்போ தலைகாணி – செல்லனுக்கு
வாய்க்காலோ பஞ்சு மெத்தை

செல்லன் நடந்த நடை - இன்று
சொல்லொண்ணா அன்ன நடை

இந்த நடை தானோ – செல்லனுக்கு
இன்னமுண்டோ அன்னநடை

இந்த நடை நடந்து – செல்லாநாம்
எப்போகரை சேர்வமடா

வெள்ளி மதியாணி – செல்லனுக்கு
வெண்கலத்தால் சுள்ளாணி

வெள்ளியினால் சுள்ளாணி – என்தம்பி
சொல்லா உந்தனுக்கு வெண்கலத்தால்
மதியாணி

சுள்ளானுக்கு ள்ளே – சொல்லா ஒரு
சூத்திரத்தை வைத்தான்டா

முதிரை பாட வாளாம் - தம்பி செல்லா
நமக்கு
முற்றிய நல்லமரம்

கரையாக்கன் சோலையிலே - தம்பி
செல்லா
கன்னிமார் காவலாண்டா

சாரை அறிவாண்டா – செல்லன்
சார்ப்பலகை தப்பாண்டா

மூலைவரம் போரம் _ செல்லா நீ
முதுகி வளை நல்ல கண்டே

ஓடி நட கண்டே செல்லா நீ
உறுதியுள்ள காலாலே

தள்ளாடித் தள்ளாடி – செல்லன்
சாய்ந்தாடிப் போறாண்டா

தள்ளாதே கண்டே – நீ
சலியாதே நல்ல கண்டே

முன்னங்கால் வெள்ளையல்லோ –
செல்லனுக்கு
முகம் நிறைந்த சீதேவி

எட்டுக்காலோடே செல்லா – நமக்கு
இருகால் தலை மூன்று

வானம் குடையாமோ – செல்லனுக்கு
மல்லிகைப்பூச் செண்டாமோ

ஆழியிலே போய் முழுகி – செல்லா
நீ
அன்பு வந்த தீரனடா

கறுப்பாய் இருண்ட மலை – தம்பி
செல்லா அங்கே
காலுமுந்து போகுதடா

ஓரம் போ '....சார் பார்
ஏ எ எ........எ எ எ

"செல்லன்" என்ற சொல் உழவு செய்யும் எருதுகளைக் குறிக்கிறது.

இது போன்ற பல பாடல்கள் பாடப்படும் போது மாடுகளும் அவ்விசையில் இறங்கியவாறு நடப்பது போல் பார்ப்போருக்குத் தோன்றும். உழவு வேலைகள் முடிந்ததும் உழவு மாடுகள் போடியாரின் பட்டியில்ச் சேர்க்கப்படும்.

தற்போது பாவிக்கப்படும் இரசாயணப் பசளைகள் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு பாவனையில் இருக்கவில்லை. அக்காலத்தில் மாட்டெரு, குப்பை கூழங்கள் மற்றும் நிலத்தின் பசளைத் தன்மையை நம்பியே பயிர் செய்யப்பட்டு வந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலில் விதைப்பு வேலைகள் முடிந்ததும் நாகதம்பிரானுக்கு பொங்கல் செய்யும் நிகழ்ச்சி நடைபெறும். விஷப் பாம்புகளிடமிருந்து சிக்கல்கள், கஷ்டங்கள் ஏற்படாது இருக்கச் செய்யப்படும் நேர்த்தியே இதுவாகும். களை நாசினிகள் இல்லாத முற்காலத்தில் வயல்களில் களைகள் போடப்படும் உழவுகளாலேயே கட்டுப்படுத்தப்பட்டன. ஆரம்ப உழவு காலத்தின்போது பிடுங்கப்படும் புற்கள் எரிக்கப்பட்டு அழிக்கப்படுவது வழக்கமாய் இருந்தது.

**பயிருக்குத் தண்ணீர் கட்டுதல்**

மழையை நம்பிப்பயிர் செய்யும் பூமிகளிலும் பயிர் முளைத்து ஒரு மாதம் சென்ற பின்னரே வயலில்த் தண்ணீர் கட்டப்படும். விதைத்த பின் முளைக்கும் சில களைகள் வயலில்க் கட்டப்படும் தண்ணீரில் மூழ்கடிக்கப் படுவதாலேயே அழிக்கப்படுகிறது. முன்பு கூறப்பட்டவை முடிந்து பயிர் வளர்ந்துகொண்டிருக்கும்போது மார்கழி மாதம் அளவில் வட்டைப் பாதுகாப்புக்குரிய வேலி வட்டை விதானையால் வட்டையை (கண்டத்தைச் சுற்றிவர) அளந்து ஒவ்வொருவருக்கும் ஏக்கருக்குரிய விகிதத்தில் அளவு பிரித்துக்கொடுக்கப்படும். 1952களுக்கு முன்பு வரை (முட்கம்பி இல்லாமையால் ) தடிகளாலேயே வேலிகள் கட்டுவது வழக்கமாக இருந்தது. இதற்கான தடிகளைக் காடுகளில் வெட்டி எடுப்பதற்காக அரசாங்க அதிபர் காசு பெறாத உத்தரவு பத்திரங்களை வட்டை விதானைக்கு வழங்குவார். தடிகளை நாட்டி ஐந்து மாவரைத் தடிகள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக இடைவெளிவிட்டு வைத்து பாற்கொடி எனும் கொடியினால் வரிந்து உறுதியான வேலியாக்குவதே வழக்கமாக இருந்தது. இதனைக் கண்டத்தின் வட்ட விதானை பார்த்துத் திருப்தி தெரிவிக்க வேண்டும்.

**காவல் பரண்கள் அமைத்தல்**

கண்டத்தில் உள்ள பயிர்களின் பாதுகாப்பு கூட்டு பாதுகாப்பாகவே இருக்கும். வட்டை விதானை இத்தனை ஏக்கருக்கு ஒரு காவல் பரண் என்ற ஒழுங்கில் (சுமாராகப் பத்து ஏக்கருக்கு ஒன்று) அமைக்கும்படி போடியாருக்குத் தெரிவித்ததும் வயல் செய்கைக்காரன், முல்லைக்காரன் ஆகியோர் பரண்களை அமைப்பர்.

வேளாண்மை தண்டு திரளும் பருவத்திலேயே காவல்ப் பார்க்கும் வேலை தொடங்கும். ஐந்து மாதத்தின் தைப்பூச நாளிலிருந்து காவல் தொடங்குவது வழக்கத்தில் இருந்தது. ஒவ்வொரு பரணிலும் காவல் பார்க்கும் வயல் செய்கைக் காரன் இரவு ஏழு மணியளவிலேயே வந்து விடுவர். காவல் பார்ப்பவர்கள் பிரம்பு மணி கொண்டு சத்தம் எழுப்பிக்கொண்டு தீப்பந்த வெளிச்சத்துடன் தனது பரணிலிருந்து அடுத்த பரண்காரனிடம் கொண்டுகொடுப்பார். அவர் அடுத்ததற்கு கொண்டுகொடுப்பார். இப்படி கண்டத்தைச் சுற்றிவரும் வேலை ஓர் இரவுக்கு பல தடவைகள் நடைபெறும். இது மணிப்பிரம்பு நடத்துதல் என்று கூறப்படும். இவ்வேலை ஒழுங்காக நடைபெறுகிறதா? என்று சென்று பார்ப்பதற்கும் வட்டை விதானை, வட்டைக் காவலன் (அதிகாரி) ஆகியோர் ஒருமித்தும் தனித்தும் வட்டையைச் சுற்றிவருவர். முறையாகக் காவல் வேலை செய்யாதவர்கள் மணிப்பிரம்பு நடத்தாமல் நித்திரைகொள்வோர் ஆகியோருக்கு தொடர்ந்து கண்டத்தில் கிழமைக்கொருதரம் நடக்கும் வட்டையைக் கூட்டத்தில் பிரம்படி கொடுப்பதன் மூலம் தண்டனை வழங்கப்படும். கிராமக் கோட்டில் வழக்கு வைக்கப்படுவதும் உண்டு.

இரு காவல் பரண்களுக்குமிடையில் "சுடுவான்" என்னும் நெருப்புப் பற்ற வைக்கும் சிறு பந்தல் போன்றதொன்று அமைத்து அதனில் கொள்ளிகள் கொண்டு நெருப்புப் பற்ற வைத்தலும் கட்டாயமானதொன்றாக இருந்தது. இதன் மூலம் பயிருக்குத் தீங்கிளைக்கும் பூச்சிகள் அழிக்கப்படுவதுடன் வெளிச்சம் கண்ட பன்றிகளும் வயலை அழிவு செய்யவராமல்த் தடுக்கப் படும். மேலே கூறப்பட்டுள்ள வேலி கட்டல் காவல் கடமைகளைச் சரியாகச் செய்யாதவர்களுக்கு எதிராக வட்ட விதானை வழக்கு வைத்து கிராமக் கோடுகள் மூலம் தண்டனை விதிப்பது 1973ஆம் ஆண்டுவரை வழக்கத்தில் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முடிப்புக் கட்டுதல்**

வேளாண்மை வளர்ந்து முதற்கதிர்கள் பறிந்ததும் (வெளிவரும் காலத்திலேயே) இந்த முடிப்புக் கட்டுதல் என்னும் நிகழ்ச்சி நடைபெறும். வயலில் உள்ள களவட்டி வரவையில் இது செய்யப்படும். முன்பெல்லாம் ஒரு குறிப்பிட்ட வரவைக்குள் இது நடைபெற்றதால் அருகாமையில் வைரவ சாமிக்கு பந்தலிட்டு பழம், பாக்கு, வெற்றிலை, பூக்கள் கொண்டு மடை வைத்து ரொட்டி, பலகார வகைகளும் கட்டுப் பந்தலில் வைத்து வணக்கம் செலுத்துதலும் கடைப் பிடிக்கப்பட்டது. பின் இதற்கென வெட்டியெடுத்த முதிரை மரத்திலான சுமார் மூன்று முழ நீழமான தடியை பட்டை நீக்கி, மஞ்சள் நீரால் கழுவி, சந்தணம், திருநீறு பூசி களவட்டி வரவையில் நாட்டப்படும். அதன் மேல்பாகத்தில் சிறிய குருத்து கட்டப்பட்ட பின் மஞ்சள் நீரால் நனைத்த வெள்ளைத் துணியில் சில்லறைக் காசு வைத்து முடிந்து அச்சீலையை கம்பில் கட்டப்படுதலே முடிப்புக்கட்டுதல் என்று கூறப்படுகிறது. நெற் கதிர்கள் பூச்சி, புழுப் பாதிப்பு சேதமின்றி நன்றாக வரவேண்டும் என்ற நேர்த்தியோடு செய்யப்படுவதே இந் நிகழ்வாகும்.

**நோய்த்தாக்கத்திற்கு மருந்தும் பாதுகாப்பும்:**

வேளாண்மையில் "மடிச்சிக்கட்டி" நோய் தாக்கும்போது முன்பெல்லாம் கிருமி நாசினி தெளிக்கும் பழக்கம் இருக்கவில்லை. அப்படியான தாக்கத்தை நீக்குவதற்காகத் தாக்கம் தெரியும் இடங்களில் எருக்கு இலை, ஆமணக்கு, ஒருவகைக்கள்ளி என்பன போடப்படுதலே வழக்கமாக இருந்தது. மேலும் வேளாண்மை சிவந்து நோய் காணப்பட்டால் (எரிபந்தம்) பழைய சுளகை, ஒரு வாருகல் கட்டுடன் (கையால் வீடு கூட்டப் பயன்படுத் தப்படும் ஒருவகைப் புல்லாலான கட்டு) ஒரு கம்பியில் கட்டி நோய் காணப்படும் இடத்தில் வயலில் நாட்டி விடுவர். இதனால் எரிபந்த நோய் நீங்கிப் போகும் என்ற நம்பிக்கை இருந்தது.

**தீர்த்தம் எடுத்தல்**

இந்நிகழ்வு மண்முனை பிரதேசத்திலே முன்பெல்லாம் கட்டாயமாக மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும். வேளாண்மைக்கு நெற்பூச்சித் தாக்கம் ஏற்படாமல் இருப்பதற்காகவே தீர்த்தம் எடுத்தல் நடைபெறும். ஒரு வயலின் முன்னிலைக்காரன் முழுகி உடலை சுத்திகரித்துத் தோய்த்து உலர்ந்த வேட்டி அணிந்து அன்று பின்னேரமே தனது செய்கைக்காரன் ஒருவருடன் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலுக்கு ஒரு சிறிய முட்டியுடனும் சிறிது மிளகுடனும் சென்று அன்று மாலை பூசையின்போது இறைவனை வணங்குவர். பின் முட்டியைக் குருக்களிடம் கொடுத்து அது நிரம்பக் கோயில்க் கிணற்றுத் தீர்த்தத்தினைப் பெற்றுக்கொள்வார். அன்றிரவு அங்கு தங்கியிருந்து அதிகாலை நேரத்தோடு தீர்த்த முட்டியைத் தலையில் வைத்துச் சுமந்தவாறு மிளகினை ஒவ்வொன்றாக வாயில் போட்டுச் சாப்பிட்டவாறு வயலை நோக்கி வரத் தொடங்குவர். அவரது உதவியாளும் கூட வருவார். வயலை அடைந்ததும் தீர்த்த நீரை வயலைச் சுற்றிவரத் தெளித்துவிட்டு எவரது கண்ணிலும் படாது அருகில் உள்ள காட்டில் சென்று தங்குவார். அவருடன் சென்ற உதவியாளர் நேரத்துக்கு உணவு கொண்டு கொடுப்பார். இப்படியாக மூன்று நாட்கள் அங்கு தனியாகத் தங்கியிருப்பார். மிளகு சாப்பிட்ட வயிறு எரிவதைப் போல் பூச்சிகளும் எரிந்து போக வேண்டும் என்பதே மிளகு சாப்பிடுவதன் நோக்கமாகும். மண்முனைப் பகுதிக்கு கொக்கட்டிச்சோலை கோயிலைப் போல மற்றப் பிரதேசங்களிலுள்ள பிரசித்தமான கோயில்க ளிலும் இருந்து தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு மட்டக்களப்பு தமிழ் சைவர்களால் சுமார் 40 வருடங்களுக்கு முன்புவரை நடைபெற்றது. தீர்த்தம் வயலில் தெளிக்கப்பட்டதும் வயலில் பூச்சிகள் இல்லாமல் போவது தெய்வத்தின் அனுக்கிரகத்தால் தான் என்பது நம்பிக்கை.

**புதிர் எடுத்தல்**

புதிதாக வயலில் விளைந்துள்ள நெல்லை போடியார் தமது வீட்டுக்கு முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவையாக எடுத்துச் செல்லுதலே புதிர் எடுத்தல் என்று கூறப்படுகிறது. பஞ்சாங்கத் தின்படி ஒரு சுபதினத்தில் சுபநேரத்தில் வயலில் இருந்து பிடிகளாக எடுக்கப்பட்ட நெற்கதிர்கள் சொந்தக்காரரது வீட்டுக்குள் கொண்டு செல்லப் படும். முதலில் சுபநேரம் வருவதற்கு முன் நெற்கதிர்கள் வயலில் இருந்து கையால் அறுத்தெடுக்கப்பட்டு வீட்டுக் வாசலில் (கடப் படியில்) கொண்டு வைக்கப்படும். சுபநேரம் தொடங்கியதும் வீட்டுக்குள் விளக்கேற்றி நிறைகுடம் வைத்து சிறிய ஓலைப் பெட்டிகளில் வீட்டில் இருக்கும் பழைய நெல்லை நிரப்பி அதனுள் வெற்றிலை, பாக்கு, பழம் முதலியன வைக்கப்படும். அத்துடன் பொன், தங்கம், வெள்ளி முதலியனவும் சில்லறைக் காசும் வைக்கப்பட்டு ஒரு வெள்ளைத் துணியினால் மூடி கணவன் தலைப்பாகை கட்டியவாறு மனைவியுடன் பெட்டிகளை வாசலிற்கு (கடப் பிற்கு) எடுத்துச் செல்வார். அங்கு பெட்டிக்குள் கதிர்ப் பிடிகள் வைக்கப்பட்டு மூடப்பட்டவாறு தலையில் வைக்கப்பட்டு நெற்கதிர்கள் வீட்டுக் குள் கொண்டு வரப்படும். அங்கு கற்பூரம் கொழுத்தி இறைவனை வணங்கி என்றும் குறைவில்லாது நெல்லால் நிறைவிடமாக வீடு இருக்கவேண்டுமென பிராத்திப்பதுடன் இந் நிகழ்ச்சி நிறைவுபெறும்.

**வேளாண்மை வெட்டுதலும், சூடு வைத்தலும்**

வயலில் கதிர்கள் முற்றி, வேளாண்மை மாசி மாத பிற்பகுதியிலேயே வெட்டுவதற்குரிய நிலையை அடையும். விளைந்த வேளாண் மையை வெட்டுவதற்காக வயலில் இருக்கும் நீரை வெளியேற்ற வேண்டும். இம்மாதத்தில் வரும் சிவராத்திரி நிகழ்வு நடந்து ஏழாம் இருத்தை முடிந்த பின் (ஏழு நாட்கள் சென்ற பின்) நீர் வெளியேற்றுவதே முன்பெல்லாம் வழக்கத்தில் இருந்தது. இதன் பின் வரும் காலம் பருவமழை குறைந்த காலமாக இருப்பதால் வெட்டு வேலைக்கு வசதியாக இருக்கும். சுமார் நாற்பது ஆண்டுகளின் முன்பெல்லாம் போடியா ரின் வயல்கள் வெட்டும் வேலை, பல கூட்டத் தைச் சேர்ந்த வெட்டுக்காரரால் செய்யப்படும். இவர்கள் அதிகமாக மட்டக்களப்பின் தென் பிரதேசம் (அம்பாறை மாவட்டம்), எழுவான்கரைப் பிரதேசம் போன்றவற்றிலிருந்து வெட்டு வேலைக்காக வருகின்றவர்களாக இருப்பார்கள். வெட்டிய உப்பட்டிகள் நன்றாகக் காய்ந்த பின் மூன்றாவது நாள் போடியாரின் வேளாண்மைக் காரர்கள் ஒன்று சேர்ந்து உப்பட்டிகளைக் கட்டி எடுத்துச் சென்று களத்திலே சூடு வைப்பார்கள். வெட்டு ஆரம்பித்தல், சூடு வைத்தல் என்பன சுபநேரத்தில் தொடங்குவது தமிழர்களிடத்தில் நீண்ட காலமாக இருந்து வருகின்ற வழக்க மாகும். ஒரு வயலின் களவெட்டியில் (வயலின் பரப்பு 15 ஏக்கருக்கு குறையாத போது) நான்கு "அடி" நிலத்திலப்படும் கதிர்கள் மழை நீராலும், ஏனையவற்றாலும் பாதிக்கப் படாதிருப்பதற்காகச் சத்சதுரமாகக் களத்தில் வட்ட வடிவில் மண்ணி னால் அமைக்கப்படும் மேடை போன்ற அமைப்பே "சூட்டடி" எனப்படுகிறது. அது கூட்டப்பட்டு அவற்றில் நான்கு சூடுகள் வைக்கப்படும். சூடு வைத்து முடிந்ததும் அதனை விலங்குக ளிலிருந்து பாதுகாப்பதற்காகச் சதுரமாக வேலிகட்டி பாதுகாக்கப்படும். வேளாண்மைக் காரர் இவ்வேலைகளைக் கவனமாகச் செய்வர்.

**சூடு அடித்தல்**

வெட்டு முடிந்து சூடுகள் வைக்கப்பட்டு நில ஈரம் காய்ந்து உறுதியான பின்பே சூடு அடிப்பு வேலை ஆரம்பமாவதே பண்டைய கால வழக்கமாகும். சித்திரை மாதம் கழித்து வரும் அக்கினி நாட்கள் கழிந்த பின்னர் வரும் சுபதினத்தில் சூடு அடித்தலை ஆரம்பிப்பது எல்லாப் போடிகளாலும் மற்றும் குத்தகை போடிகளாலும் கட்டாயமாகக் கடைப்பிடிக் கப்பட்டு வந்தது. இதனை சூடு மிதித்தல் என்று கூறுவர்.

**வட்டமான களமும், அரக்குத் தாக்குதலும் :**

சூடுகளுக்கு அருகாமையில் வட புறத்தில் "களவட்டி" புல், பூண்டுகள் எதுவும் இல்லாது துப்பரவு செய்யப்படும். மணலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்கான தரையாய் இருந்தால் களவெட்டியில் தண்ணீர் ஊற்றி சிறிது கெட்டிப்படுத்துவர். களவெட்டியில் வாரிகுறைவதற்குத் துஷ்ட தேவதைகள் பூதம் என்பன காரணம் என்ற ஒரு எண்ணம் முன்பெல்லாம் இருந்தது. இதனைத் தடுப்பதற்காகக் களத்தை காவல் பண்ணி சூடுபோடும் முறையும் கடைப்பிடிக்கப் பட்டு வந்தது. களத்தின் மேற்புறத்தில் சூடுகளுக்கு அருகாமையில் வைரவருக்குத் தடிகளைக் கொண்டு ஒரு சுவாமி பந்தல் போடப்படும். இதன் சிறிய கூரை வைக்கோலால் வேயப்படும். மேற்பக்கமும் (உட்புறம்) மற்ற மூன்று பக்கமும் வெள்ளைத் துணியால் மறைக்கப்படுவதுடன், முன் பக்கமும் ஒரு திரைச் சீலையால் மறைக்கப்பட்டிருக்கும். இப்பந்தலில் விடி விளக்கு வைப்பது வழக்க மானதாகும். சூடு போடப்படும் களத்தின் மத்தியில் ஒன்றையொன்று நடுவால்ச் செல்லக் கூடியவாறும் நடுவில் பள்ளமாக வரக்கூடிய வாறும் தோண்டப்படும். இதன் நான்கு முனைக ளும் பூமி மட்டத்திலே இருக்கும். சூட்டிலிருந்து நான்கு பிடிகள் எடுக்கப்பட்டு இரண்டு பிடியின் கதிர்கள் எதிர் எதிராகத் தொட்டுக் கொண்டு இருக்கக்கூடியவாறு ஒன்றுக்குக் குறுக்காக மற்றையதை வைத்து அத்துடன் ஒரு மண்வெட் டியை மத்தியில் வைத்துக் கொடியினால் இறுகக் கட்டப்படும். இதனை முன்சொன்ன நான்கு முனைகளையுமுடைய பள்ளத்தில் வைத்துக் கட்டை நீக்கப்பட்டு கூராக்கப்பட்ட முதிரைத்தடி ஒன்றினை மண்வெட்டியின் குளச்சி (பிடி போடுவதற்கான ஓட்டை)க்குள்ளால் நிலத்தில் மண்வெட்டி குளச்சி மட்டத்திற்குத் தடி மட்டும் வருமாறு அடித்து இறுக்கப்படும். இன்னும் ஒரு தடியினை (சுமார் 9 அடி நீளமான) நன்றாக பிளந்து கதிர்ப்பிடியின் நான்கு முனைகளுக்குக் கீழும் வைக்கப்படும். பள்ளத்தின் ஆழமான பகுதியின் நடுவில் தங்கம், பொன், வெள்ளி, நாணயக்காசு முதலியவற்றின் ஒரு முடிச்சும் வைக்கப்படுவது வழக்கமாக இருந்தது. சிலர் மந்திரிக்கப்பட்ட இயந்திரத் தகட்டையும் இதனோடு வைப்பதுண்டு. இதனையே அரக்குத் தாக்குதல் என்று அழைப்பர். மேலும் நான்கு சிறு முதிரைக் கம்புகள் நான்கு பக்க வாட்டுகளிலும் (கள விளிம்புக்கருகாமையில்) ஒவ்வொன்றாகப் புதைத்து வைக்கப்படும். அரக்குத் தாக்கும் களத்தல் நேரத்துடனேயே பொங்கலிட்டு களத்தில் அரக்குத் தாக்கப்படும். அரக்குத் தாக்கப்படும் இடத்திற்கு அருகாமை யில் வெள்ளை விரித்து விளக்கேற்றிப் படையல் செய்து வணக்கம் செலுத்தப்பட்ட பின்னரே அரக்குத் தாக்குதலை மேற்கொள்ளல் வழக்க மாக இருந்தது.

பின் போடியார் சூட்டிலிருந்து ஒரு உப்பட்டியினை எடுத்துத் தலைப்பாகைக் கட்டி தலையில் வைத்து இரு கரங்களாலும் பிடித்துக் கொண்டு அரக்குக் கதிர் கற்றையினை மும்முறை வலம் வந்து வடபக்கம் பார்த்தவாறு அரக்குத் தாக்கிய கதிர்களின் மேல் வைப்பார். பின் இரு கைகளிலும் (கதிரைத் தலையில்ப் பிடித்தவாறு கதிர்கள் களத்தில் விழும்படி) உதறிக் கொண்டு களத்தில் வலம் வந்து மிகுதிக் கதிர்களையும் நடுவில் வைப்பார். இதனோடு அரக்குத் தாக்குதல் நிகழ்ச்சி முடிவுறும்.

**களத்தில் போர் ஏற்றுதல் :**

அதன் பின் வயலில் முல்லைக்காரன் அல்லது செய்கைக்காரன் சூட்டில் ஏறி கடவுளை நினைத்துத் தேங்காய் ஒன்றை சூடு தள்ளும் வேலைக்காரன் தடியினால் அடித்து உடைப்பார். தொடர்ந்து உப்பட்டிகளை கீழே தள்ளிவிட சூடு போடும் வேலையைச் செய்யும் மற்றய ஐவரும் (ஆறு பேரே முன்பு சூடு அடித்தலை செய்வது வழக்கமாக இருந்தது) உப்பட்டிகளை வேலைக்காரன் தடியினால் தூக்கி களத்தின் மையப்பகுதியில் உயரமாகக் குவிப்பார். இது "போர் ஏற்றுதல்" என்று கூறப்படும். இப்படி நடுவில் உயர்ந்ததாகப் போர் ஏற்றப்பட்ட பின் மூன்று பிணையல் எருமைக் கடாக்களை போர்க் குவியலின் ஓரமாக முதலில் மூன்று தரம் அதனை சுற்றி வந்த பின் அவற்றைப் போர் மீது ஏற்றுவார். பிணையல்களின் ஒரு பக்கத்தில் தொடுக்கப்பட்டிருக்கும் இதற்கென பழக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரக்கு மாடு" ஒன்று மற்றவைகளையும் இழுத்துக் கொண்டு போர்க் குவியலின் மீது ஏறிச் செல்லும். ஒரு பலம் வாய்ந்த கடா ஒன்று அரக்கு மாடாக பழக்கப்பட்டிருப்பதே வழக்கமாக இருந்தது. மேற்கூறப்பட்டவாறு வாரிக்காலிகள் (சூடு மிதிக்கும் கடாவினை வாரிக் காலன் அல்லது வாரிக்காலி என்றழைப்பதே வழக்க மாகும்) போர்க் குவியல் மீது ஏறியதும் முல்லைக்காரன் அவற்றின் பின்னால் நின்று முதலப் பொலிப்பாட்டினை மூன்று முறை உரத்த குரலில் படிப்பார். மாடுகள் போர்க் குவியலை மிதித்தபடி வளைய வந்து கொண்ருக்கும் போதிலே பின்னால் நின்று அவற்றை வளைய வரச் செய்வார். சிலர் பொலிப்பாட்டுக்களை பாடிக்கொண்டேயிருப்பர். ஆரம்பப் பாடலில் இருந்து சில பொலிப்பாட்டுக் களை இங்கே பார்ப்போம்.

(சூடு போடும் பாடல்)

**பொலிப் பாடல்**


தாயே பொலி தம்பிரானே பொலி
பொலி பூமி பூமாதேவி அம்மா
மண்ணின் களமே மாதாவே தாயே
பொலி வளர்பூமி நிறைகளம்
பொன்னின் களமே பொலி பொலி
பொலியம்மா பொலி பொலியே
யானை முகத்தைங்கரனே விகட தடங்கட
வயிறானே பொலி
அரிதிருமருகா பொலி சரவணபவா
பொலி
சயனொளிபவா பொலி
திரிபுரபவா பொலி சிவனொளிபவா
பொலி பொலியம்மா
பொலி பொலி பொலியோ

போரேறப் பொலிவளரப் பொலி
தர்மதாயே பொலி
பூமியில் உள்ளோர் ஈடேற – பொலி
பொலி பொலியே
வரிட்டி பாலமாக – பொலி தர்ம தாயே
பொலி
வலம்புரிகள் சங்காக – பொலி பொலி
பொலியே
வாரி சொரிய – பொலி தாம தாயே
வளநாடு பொன் சொரிய – பொலி
பொலி பொலியே
ஓடும் குழுக் காலி – பொலி தர்ம தாயே
உலாவி வரும் பால்மாடு – பொலி
பொலி பொலியே
பால்மாடு ஈன்ற கன்றே – பொலி தர்ம
தாயே
பசித்தழுத கண்மணியே – பொலி பொலி
பொலி
கந்தன் தேரோடே – பொலி தர்ம தாயே
கணபதி தேர் முன்னடக்க – பொலி
பொலி பொலியே

இப்படியாக இனிமையான பல பாடல் கள் இனிய ஓசையுடன் படிக்கப்படும். மாட்டுத் தொடுவையும் களத்தில் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும். கதிர்களின் மேற்பகுதியில் உள்ள நெல்மணிகள் உதிர்ந்த பின் பொலிக் கொடி (வைக்கோல்) வேலைக்காரன் கம்புகளால் களத்திலிருந்து வெளியேற்றப்படும். இதற்கு முன் இடையிடையே பொலிக்கொடி கிளறிவிடப்படும். இதனை "மிதிகல்லுதல்" என்றும் அழைப்பர். (வாரிக்காலியால் மிதிக்கப்பட்டு அண்டியதைக் கிளறிப் போடுதல்) வெளியேற்றுதலை "வாட்டுதல்" என்றும் கூறுதல் இன்றும் வழக்கமாக உள்ளது. இப்படி இரவு முழுவதும் சூடு போடப்பட்டுக் கடைசி வாட்டுதல் விடியுமுன் நடைபெற்றபின் வட்டமான களத்தில் நிரம்பிக் காணப்படும் பொலி நடுக்களத்திற்கு எடுக்கப்படும். இப்படி பொலியை இழுத்துப் பொலி நெருக்கிப் (இது சுமார் ஐந்து அடி நீளமும் மத்தியில் ஆறு அங்குலமுமானது) பலகையின் இரு முனைகளிலும் இரண்டு பேர்பிடித்து இழுக்க ஒருவர் பிடித்துத் தள்ள பொலி நடுமையத்திற்கு எடுத்துக் குவியலாக்கப்படும். போலிக் குவிய லின் மேற்பக்கத்தினை சிறிது தட்டையாகப் பரவிவிட்டு வேலைக்காரன் கம்புகளை நட்டு விடுவார். அத்துடன் பொலிக் கும்பத்தைச் சுற்றி நிலத்தில் வைக்கோல் புரி ஒன்றினை இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முனைகளும் தொட்டுக்கொண்டிருக்கக் கூடிய வாறு வைப்பர். இதனை "காவற்புரி" என்ற ழைப்பர். ஒருவர் மட்டும் களத்தில் நிற்க மற்ற வர்கள் வீட்டுக்குச் சென்று அன்று மதியம் சாய்ந்த பின் திரும்பி நெல்லிலிருந்து பதரினை வேறுபடுத்தும் "தூற்றும்" வேலைகளை ஆரம்பிப்பர். இதற்காக அவுரி என்னும் நாற்காலி நான்கு கம்பிகளினாலும் வைக்கோல் புரியினா லும் கட்டப்பட்டு அதன்மேல் நின்று பொலியைத் தூற்றும் வேலையைச் செய்வர். தூற்றிய பொலி முன்பெல்லாம் வைக்கோலினால் களவெட்டிக் குக் கிழக்குப் பக்க வாட்டில் அமைக்கப்படும். பட்டறையில் நெல் போடும் முன் முல்லைக்காரன் வைக்கோலால் ஒரு முடிச்சுக் கட்டி பட்டறை யின் அடிப்பக்கம் போடுவான். பின் நெல் அளக்கும் போது முடிச்சினைக் கண்டதும் அளப்பதை நிறுத்திவிடுவான். பட்டறையிலிருந்து இறங்கி விடுவார். ஒரு இரவுக்கு ஒரு பட்டறை அமைத்து நெல்லைப் போடுவதே முன்பெல்லாம் வழக்கத்தில் இருந்தது. ஒரு களச் சூட்டடிப்பு முடிந்ததுமே நெல்லைக் களத்திலிருந்து வீட்டுக்குக் கொண்டு செல்வதே முன்பு வழக்கத் திலிருந்தது. இப்படி சூடு அடிக்கக் கூலியா ளுக்கு ஒரு இரவுச் சூட்டுக்கு கூலியாக இரண்டு மரைக்கால் நெல்லும், மாடுகளுக்கு (ஒரு தொடுவையில் ஆறு கடாக்கள் பிணைக்கப்பட்டி ருக்கும்) மூன்று மரைக்கால் நெல்லும் வழங்கப் பட்டது. சுமார் 1950ஆம் ஆண்டுகள் வரையும் (1960 க்கு முன்) இவ்வாறு கூலிகள் வழங்கப்பட்டன.

**காவற்பண்ணி சூடுபோடுதல் :**

முன்பெல்லாம் காவற்பண்ணி சூடு போடும் முறை அதிகமாக வழக்கத்திலிருந்தது. ஒரு களம் சூடு போடத் தொடங்கும் போது குறிப்பிட்ட வயலின் முல்லைக்காரன் முழுகித் தோய்ந்த வேட்டி கட்டி தம்மை ஆயத்தம் செய்து கொள்வார். அரக்குத் தாக்குமுன் களத்தைச் சுற்றி கம்புகள் நாட்டி சூடுகளையும் சேர்த்து வைக்கோல் புரி கட்டி புரியில் வேப்பிலைகள் கட்டி தொங்கவிடப்படும். களத்தினைச் சுற்றி பட்டை நீக்கப்பட்ட முதிரைக் கம்புகளை ஒன்றோடொன்றுபடுமாறு வைத்து முதிரைக் கவரினை (கெப்பு) கொண்டு நிலத்தில் அடித்து ஏற்றி கம்புகள் அசையா வண்ணம் வைப்பதும் துஷ்ட தேவதைகளைக் களத்தினுள் செல்லாது தடுக்கும் ஒரு வழியாகக் கருதப்பட்டது. களம் இருக்கும் வரவையின் நான்கு பக்க வரம்புகளிலும் இருக்கும் வக்கடை களுக்கு வைக்கோல் போட்டு அடைக்கப்படும். இது பொலியினை அள்ளும் பூதங்கள் களத்தி னுள் வராமல் இருப்பதற்காகவே செய்யப்படும் ஏற்பாடுகளாகக் கருதப்படுகிறது. களத்தின் அருகில் மேற்குப் பக்கத்தில் கிழக்குப்புற வாயில் இருக்கக் கூடியவாறு அமைக்கப்பட்ட வைரவர் பந்தலுக்கு விளக்கு, சூடு பொலியும் (முடியும்) வரை அணைக்காமல் வைத்துக்கொள்ளப்படும். ஒவ்வொரு இரவும் ரொட்டி சுட்டு வைரவருக்குப் பந்தலில் வைத்து வணங்குவதுடன் கடைசி இரவுக்குப் பலகாரங்கள் தயாரித்தல் (இவ் வேலை களத்திலேயே நடைபெறும்) நிலத்தில் ஒரு சிறு பந்தல் நாட்டி மேற்புறம் சுற்றி வெள்ளை கட்டி அதற்குள் நிலத்தில் வெள்ளை விரித்து விளக்கேற்றிப் பழம், பாக்கு, வெற்றிலை கொண்டு மடை வைத்துத் தயாரித்த பலகாரங்க ளுடன் சோறு மற்றும் மரக்கறி கூழ் என்பன வற்றோடு பலாப்பழம் போன்ற கனி வகை களையும் பந்தலினுள் படைத்து பத்திரகாளியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனை வழிபடுதலும் இப்பிரதேசத்தில் வழக்கத்தில் இருந்து வந்த ஒன்றாகும். இது பள்ளையச் சடங்கு செய்தல் என்று முன்பு அழைக்கப்பட்டது. இவையெல்லாம் வயலின் வாரி அதிகரிப்பதற்காக இறைவனுக்குச் செய்யும் பிரார்த்தனையாகும். அத்தோடு காவல் பண்ணும் வேலையைப் பார்க்கும் முல்லைக்காரன் சூடு பொலியும் வரை களத்தை விட்டு வெளியேற மாட்டான்.

சூடு அடிக்கும் (போடும்) வேலை நடைபெறும்போது களத்தில் அவ்வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் நித்திரை கொள்ளாது இரவு முழுவதும் கண் விழித்திருப்பதும் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. சூடு மிதிப்பு பொலிந்ததும் களத்தில் உள்ள நெல் மரைக்காலால் அளந்து சாக்குகளில் கட்டப்பட்டு வண்டிகள் மூலம் போடியாரின் வீட்டுக்குக் கொண்டு செல்லப்படும். இவ்வாறாக அளக்கப்படும் போது சூடு போட்ட ஆட்களின் கூலி சூடு மிதிப்பு மாட்டுக் கூலி வேளாண்மைக்காரனின் பொருத்தம் எல்லாம் களத்தில் வைத்துக் கொடுக்கப்படும். சூடு போடுபவர்களால் ஒவ்வொரு இரவும் களத்தில் தேவையான அளவு வைக்கோல் கட்டுகளும் புரிகளும் தயாரிக்கப்பட்டு வண்டிகள் மூலம் போடியாரின் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்படும். சூடு அடித்த நெல்லினை வண்டி மூலம் ஏற்றிச் செல்ல வழியில்லாத இடங்களில் இருந்து பொதி மாடுகள் மூலம் போடியார் வீட்டுக்குக் கொண்டு செல்வதும் கடந்த நூற்றாண்டிலும் வழக்கத்திலிருந்தது. இதற்குப் பல பொதி மாடுகள் (இதனை தாவளம் அல்லது தாவள மாடுகள் என்று சொல்வதும் உண்டு) பாவிக்கப்பட்டு இருபத்தைந்துக்கு மேற்பட்ட மாடுகள் ஒன்றின் பின் ஒன்றாக நீண்ட வரிசையில் பொதிகளைச் சுமந்து செல்வதையும் இவற்றை அதிகமான முஸ்லீம்கள் இயக்குவது வழக்கத்திலிருந்தது. இம்மாடுகள் தங்கிச் செல்லும் இடம் "தாவளப்பளை"என்று சமீப காலம்வரை அழைக்கப்பட்டு வந்தது.

மேலும் சூடு போடும் ஒரு இரவுக்கு ஒன்று என்று வைக்கோலில் நெல்லினை வைத்து (ஒன்றில் சுமார் மூன்று மரைக்கால் அளவு) "கோட்டை" கட்டி போடியார் வீட்டுக்கு அனுப்புவதும் வழக்கத்திலிருந்தது. இது கணக்கில் வராது சுவாமிக்குச் (சடங்கு) செய்யும் செலவுகளுக்கு ஈடுகட்டுவதற்காகவேண்டி எடுத்துக் கொள்ளப்படும். சூடு அடிப்பு பொலிந்ததும் நெல் அங்கிருந்து ஏற்றப்பட்ட பின் அன்றிரவுக்கு அரக்கு கிளப்பும் பொங்கல் நடைபெறும். இவ்வாறு இறைவணக்கத்துடன் அரக்கு கிளப்பப்பட்டதும் பொங்கல் வைக்கோலில் வைத்துக் கட்டப்படும். இதனை "புக்கைக் கோட்டை" என்று அழைப்பர். களத்திலே் பொங்கலின் போது சமூகமளிப்போர் வேளாண்மைக்காரர் மற்றும் உறவினர்களுக்கும் கொடுப்பதே வழக்கமாக இருந்தது.

**பட்டறையில் நெல்கட்டல் :**


முன்பெல்லாம் நெல்லைச் சாக்கில் சேமித்து வைக்கும் பழக்கம் இருக்கவில்லை. வைக்கோலால், அமைக்கப்படும் பட்டறையிலேயே நெல் கட்டப்படும். ஒரு சுப நேரத்தில் போடியார் வீட்டில் கூடும் முல்லைக்காரர்கள், செய்கைக்காரர்கள் பட்டறை அடிப்பாகத்தைத் தயாரிப்பார்கள். இதனை "அடிப்படுத்தல்" என்றும் அழைக்கப்படும். பின் சாக்குகளிலுள்ள நெல் அதற்குள் கொட்டப்பட்டு பட்டறையாகக் கட்டி அழகாக வேய்ந்து தண்ணீர் உட்செல்லாதவாறு அமைக்கப்படும். விதைநெல் ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொன்றும் மற்றைய நெல்லை அவற்றின் தொகைக்கேற்பவும் பட்டறைகள் அமைக்கப்படும். பட்டறைகள் கட்டுபவர்களுக்குப் போடியார் அன்று விருந்துச் சாப்பாடு வழங்குவார்.

மேற்கூறிய நிகழ்ச்சிகள் சம்பிரதாய நிகழ்வாகவே மானாவாரிச் செய்கையின்போது கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக பாரம்பரிய வேளாண்மைச் செய்கை பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வடையும் பல நரிகளும்



கா..... கா....கா..... கா......
1987 இல் காகம் கரைந்தது.
உரிமைப்பசி

இந்தியப் பாட்டி
அப்போது சுட்டவடை
இன்னும் பழுதாகவில்லை.

ஆனாலும் அதன் அருமையை
காகங்களும் அறியவில்லை.

படையை நிறுத்தி
வடையைச் சுட்டுக்கொடுத்த
பாட்டிக்கு முன்புபோல்
காகங்கள் பற்றி அதிகம் கவனம் இல்லை.

ஆண்டுகள் ஓடினும் வடையைத் திருடும்
நரியின் திட்டம் ஓயவில்லை.
ஊழையிடத் தொடங்கின அவை.
'காகங்களுக்கு வடையெதற்கு
காகங்களுக்கு உரிமை வடையெதற்கு'

எலும்புகளை வாசம் காட்டி
நரம்புகளுக்கு வார்த்தை ஊசியேற்றி
'எல்லோரும் நரிகளாவோம்
வடைகளைப்பறிப்போம் வாருங்கள்'
பெரும்பாண்மை தேடி பயணமாகின அவை
தாடி வளர்த்த குழப்ப
நரியின் தலைமையின் பின்னால்

காற்றுத்தந்தி கொண்டு வந்த ஒலியை வாங்கிய
வெண்புறாவொன்று
1956 ஐ நினைத்துப்பார்த்து
உடலைச்சிலிர்த்துக்கொண்டது.
1983 இலும் பின்னரும் நடந்த
உயிர்க்கொலையின் வலியதன்
கண்ணால் ஒழுகியது.

-மேரா

# கண்ணீர்ப் பூக்கள்

மலர்ந்து மடியும் பல பூக்கள்
மலரத் துடிக்கும் பெண் பூக்கள்
பாரதி கண்ட புதுமைப் பெண்ணே
பரிதவிக்கும் விந்தையென்ன?

அன்னை தெரேசா
ஆழ்ந்துரைத்த சிந்தனை
பேதம் இல்லையிங்கு
பெண்ணே நீ ஒளிவிளக்கு

இந்நிலைமை மாறி
இளவயதில் திருமணமென
சுதந்திரப் பட்சியாய்
வலம் வந்த தோழியே
கூண்டுக் கிளியென
ஆனதன் கோலமென்ன

குடி போதை கொண்ட எமன்
குழந்தை உன்னைத் துன்புறுத்த
அரவணைத்த அன்னையை
நினைத்தேங்கி அழுதாயோ?

வெண்முத்தோ! கண்ணீர்த்துளிகள்
வேண்டுகின்றாயே விடுதலையை
இந்நிலைமை உன்தலைமுறைக்கும்
வேண்டாமெனப் போரிடு நீ!

**சுந்தரலிங்கம் ரிசிகரன்**
மலைமகள் கலாமன்றம்
மண்டபத்தடி, கன்னன்குடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைப்பொழுது இனிது விடிந்தது. சங்கரன் மண்வெட்டியை எடுத்துத் தன் தோளில் வைத்துக் கொண்டு வயலிற்குச் சென் றான் என்னடா சங்கரா எங்கே போகிறாய்? என்று கேட்டபடியே சங்கரனுடைய நண்பன் வேலாப்போடி அவ்வழியே வந்தான். நான் வயலிற்குப் போறன்டா நீ எங்க போறாய்? உங்க வீட்டுல எல்லாரும் எப்படி இருக்காங்க? எனக் கேட்டுக் கொண்டே வேலாப்போடியை இறுக அணைத்துத் தனது நட்பினைப் பரிமாறிக் கொண்டான். நான் தேவாவோட வீட்டுக்குப் போறன். அந்த விநாயகரோட அருளால எல்லாரும் நல்லா இருக்காங்க என்றான் வேலாப்போடி. "நாம் இருவரும் பேசிக்கொண்டு வந்ததால் நேரம் போனதே தெரியவில்லை. சரி இன்னொரு நாள் சந்திப்பம். போய் வாடா" என்று கூறி வேலாப் போடியை வழியனுப்பி விட்டுச் சங்கரன் தன் வயலுக்கு வந்தான். காற்றில் பயிர்கள் தலையசைத்துச் சங்கரனை வரவேற்றன.

சங்கரன் அணையைத் திறந்து பயிர்களிற்கு நீர் பாய்ச்சினான். சிறிது நேரத்தின் பின்னர், அவனது மனைவி சகுந்தலா தன்னுடைய குழந்தையை அழைத்துக் கொண்டு வயலிற்கு வந்தாள். சகுந்தலா தனக்கு கட்டுச்சோறு கொண்டு வந்திருக்கிறாள் என்பது சங்கரனிற்கு நன்றாக தெரியும். சங்கரன் மண்வெட்டியை தனது வயலில் உள்ள நிழலில் வைத்து விட்டு மனைவி கொண்ட வந்த கட்டுச் சோற்றை உண்ணத் தொடங் கினான். அப்போது என்னங்க இந்த முறை பயிர்கள் நல்லா இருக்குதே? நல்ல விளைச்சல் கிடைக்கும் என்று சகுந்தலா எதிர்வு கூறினாள். ஆம் சகுந்தலா நாம் வணங்கும் தெய்வம் என்றும் எம்மை கைவிடாது என்றவாறே சங்கரன் மர நிழலில் சிறிது ஓய்வு எடுத்து விட்டு மீண்டும் வயலிற்குச் சென்றான். தனது மகளை அழைத்துக் கொண்டு சகுந்தலா வீட்டிற்குச் சென்றாள். சங்கரன் மாலை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரமாகியதும் தன்னுடைய வேலைகளை முடித்து விட்டு வீடு திரும்பினான்.

நாட்கள் மிக வேகமாக ஓடின. ஒரு நாள் சங்கரன் தன்னுடைய வயலிற்குச் சென்றான். வயலைப் பார்க்கும்போது அவனுடைய மனம் மிகவும் சந்தோஷப்பட்டது. நெற்பயிர்கள் தலையசைத்தவண்ணம் காணப்பட்டன. அதைப்பார்த்ததும் சங்கரன் தன் குலதெய்வத்தை மனதில் நினைத்து நன்றி கூறினான். வீடு சென்று மனைவியிடம் தான் வயலிற்குச் சென்றதாகவும் அங்கு நெற் கதிர்கள் மிகவும் செழிப்பாகக் காற்றில் தலையசைத்த வண்ணம் காணப்படுவதாகவும் கூறினான். இந்த முறை நல்ல விளைச்சல் கிடைக்கும் என்பதையும் அவன் கூறத் தவறவில்லை. அதைக்கேட்ட அவனது மனைவி நீங்க பட்ட கஷ்டத்திற்கு நல்ல விளைச்சல் தானே கிடைக்கும் எனக் கூறினாள். இந்த முறை கிடைக்கிற விளைச்சலை வைத்துத் தான் நம்மட மகளோட காதுகுத்துச் சடங்கும் நடத்தணும் சகுந்தலா என்று சங்கரன் கூறினான். நீங்க சொல்லுறது சரிதானே? வேறு எந்த வருமானத்த வச்சு காதுகுத்துச் சடங்கு நடத்துறது. நம்ம வாழ்றதே இந்த விவசா யத்தை நம்பித் தானே என்றாள் சகுந்தலா.

நாட்கள் மிக வேகமாகச் சென்றன. ஒரு நாள் சங்கரன் வீட்டிற்கு அவனுடைய நண்பன் வேலாப்போடி வந்தான். என்ன வேலாப் போடி இண்டைக்கு இந்தப் பக்கம்? என்று சங்கரன் கேட்டான். ஒன்றுமில்லை சும்மாதான் என்று பதில் கூறினான். சகுந்தலா வேலாப்போடியை இன்முகத்தோடு வரவேற்று விருந்துபசாரம் செய்தாள். பின்னர், சிறிது நேரம் ஓய்வெடுத்தலின் போது என்ன சங்கரன் எப்போ உன்னோட பொண்ணோட காதுகுத்துச் சடங்கு? என்று வேலாப்போடி வினாவ அறுவடைக்கு பிறகு தான் வைக்கோணும் என்று இருக்கன் என்று பதிலளித்தான். சங்கரன் உனக்கு என்ன இந்த முறை அறுவடையில் நல்ல விளைச்சல் கிடைக்கும் தானே என்றான் வேலாப்போடி. சங்கரன் சிரித்துக் கொண்டே நான் பட்ட கஷ்டத்திற்கு நல்ல விளைச்சல் தானே அந்த கடவுள் கொடுக்கோணும் என்றான். நீ சொல்லுவது சரிதான் என்று கூறிய வேலாப் போடி சங்கரனிடமும், சகுந்தலாவிடமும் விடைபெற்றுக் கொண்டு தன்னுடைய வீடு திரும்பினான்.

நாளடைவில் அறுவடையும் ஆரம்பித்தது. சங்கரன் தனது வயலில் விளைந்த நெல்லை அறுவடை செய்ய தீர்மானித்தான். இதற்காக அவனது சொந்தக்காரர்கள் சிலரை அழைத்து அறுவடை செய்தான். அறுவடை செய்த வற்றையெல்லாம் ஓரிடத்தில் குவித்து சூடு வைத்த பின்னர், களம் காவல் செய்யப்பட்டது. அதன் பின்னர், சங்கரன் தனது குலதெய் வத்திற்குப் பந்தல் போட்டு, பொங்கி, மடை பரவி, பூசைகள் செய்தான். குலதெய்வத்தை அவ்விடத்தில் வரவழைத்துத் தன் தொழிலைக் காப்பாற்றித் தருமாறு வேண்டினான். (இச் சடங்கை மக்கள் போலிச் சடங்கு என்பர்) பின் இயந்திரத்தின் மூலமாக சூடு மிதிக்கப் பட்டு, வைக்கோலை வேறாக்கிய பின் அவற்றை காற்றிலே தூற்றி மூடையாய் கட்டி தனது வீடிற்கு கொண்டு சென்றான். இந்த முறை அவனிற்கு விளைச்சல் அதிகமாக காணப்பட்டது. அதைப்பார்த்ததும் அவனது மனைவி சகுந்தலா மிகவும் சந்தோஷப் பட்டாள். சங்கரன் கிடைத்த விளைச்சலைப் பயன்படுத்தி தனது மகளின் காது குத்துச் சடங்கினை கலாசார முறைப்படி நடத்தினான். அத்தோடு சித்திரைப் புத்தாண்டிற்கும் தனது பிள்ளைகளிற்குப் புத்தாடைகள் வாங்கியதோடு பண்டிகையின் அனைத்து வேலைகளிற்கான செலவுகளையும் இதிலிருந்து செய்தான்.

"முயற்சி பயனளிக்கும்"

*தி. புஸ்பலெட்சுமி*
தரம் - 10A
மட்/நாவற்காடு நாமகள் வித்தியாலயம்

கலாசார விழாப் போட்டியில் முதலிடம் பெற்ற சிறுகதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து வழிபாட்டு மரபில் பலியிடுதல் பற்றிய நோக்கு...



இந்து சமயமானது தொன்மையான வழிபாடு, தத்துவம், பண்பாடு, நாகரிகம், நம்பிக்கை என்பவற்றை அடித்தளமாகக் கொண்ட ஒரு வாழ்வியல் நெறியாகக் காணப்படுகிறது. இவ்வாறு காணப்படும் இந்து சமயமானது அன்பின் ஊடாக கொல்லாமையினை வலியுறுத்துகிறது. உலகாயுதம், கிறிஸ்தவம், வாமம், இலௌகீகம் ஆகிய மதங்கள் புலால் உண்பதை ஏற்கின்றன. அதாவது கிறிஸ்தவம் உயிர் கொலையை ஏற்றதோடு ஒருபடி மேலே சென்று விலங்குகள் மனிதனுக்காகப் படைக்கப்பட்டவை என்கிறது. வாமம் மதமானது உயிர்க்கொலை செய்து தெய்வத்திற்குப் புலால் நிவேதனம் செய்வதால் பாவம் நீங்கும் என்கிறது. உலகாயுதம் ஆனது இவ்வுலக வாழ்வை மட்டும் ஏற்பவை. வினைப்பயன், மறுபிறப்பு என்பவற்றை அவை ஏற்பதில்லை. இவ்வாறு ஏனைய மதங்கள் உயிரக் கொலை பற்றிய நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளன.

இந்துசமயம் மறுத்துரைக்கும் உயிர்க் கொலை ஆனது பல்வேறு பரிணாமங்களைப் பெற்றுவந்துள்ளது. அதன் ஒரு வடிவமே பலியிடுதல் ஆகும். பலியிடுதல் ஆனது வழிபாட்டுடன் இணைந்தமையே, இந்துசமயம் எதிர் நோக்கும் சவாலாக உள்ளது. இதனைக் காலத்திற்குக் காலம் இந்துசமய சீர்திருத்தவாதிகள் எதிர்த்து வந்தபோதும் இன்றும் அவை தொடரும் ஒன்றாகவே காணப்படுவது உற்று நோக்கத்தக்கது. இந்துசமய வழிபாட்டு முறைகளுடன் பலியிடுதல் ஆனது ஒன்றித்துக் காணப்படுவதானது பலியிடுதல் தொடர்வதற்குக் காரணமாக அமைகின்றது. பலியிடுதலில் பரிணாமம் பெற்று வந்தமையினை பண்பாடு, வழிபாடு, நம்பிக்கை என்பவற்றின் அடிப்படையில் நோக்குவது சிறப்புடையதாகும்.

பலியிடுதல் என்பது பற்றி நோக்கின் உயிர்களைத் தெய்வங்களுக்கு அளிக்கும் நிலையினைப் பலியிடுதல் என்பர். பலி என்ற சொல்லுக்கு நேர்தல், பயன்விளைவித்தல், செழித்தல், மிகுதல், யாகம் முதலியவற்றில் தேவர்கள் பிதிர் முதலியோர்க்கு இடும் உணவுப் பொருட்கள், பலியிடுதற்குரிய பிராணி முதலியனவும் திருநீறு, சாம்பல் எனப் பல்வேறு பொருள் கொள்ளப்படுகின்றது. அதேவேளை பலிகொடுத்தல் என்பதற்குக் கொல்லுதல் என்றும் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது. இவ்வாறு உள்ள பலியிடுதலானது பண்பாடு, நம்பிக்கை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசமய வழிபாட்டு மரபில் தொடர்வதாக உள்ளது. அவ்வகையில் பண்பாடு என்பது ஓர் இனத்தின் பாரம்பரியமான பண்பாட்டுக் கருவிகள் பொருட்கள் கருத்துக்கள் நடத்தைகள் பெறுமானங்கள் என்பவற்றின் கூட்டு மொத்தமே என Malinowsky கூறுகிறார். எனவே பண்பாட்டு ரீதியில் இப்பலியிடுதலானது ஒவ்வொரு இனத்தினது தொடர்ச்சியான பண்பாட்டுக் கைமாற்றலாகத் தொடர்ந்து பரிணாமம் பெற்று வருகிறது எனக் கூற முடிகிறது.

நம்பிக்கை, மூடநம்பிக்கை தொடர்பாக நோக்கும் போது நம்பிக்கையானது மக்களுடைய உள்ளுணர்ச்சிகளின் வெளிப்பாடாகும். இது மரபுவழியாகச் சந்ததி பின் சந்ததியினரால் கடைப்பிடிக்கப்படும் ஒரு வழக்காக உள்ளது. நம்பிக்கையைப் போன்றே மூடநம்பிக்கையும் மக்களுடைய உள்ளங்களிலும் கருத்துக்களிலும் வேரூன்றி உள்ளது. நம்பிக்கை என்பது மக்களிடையே அனைத்து நிலைகளிலும் காணப்படும் ஒரு கூறாகும். முதன்மையாய் படிக்காத நாட்டவர் மக்களிடையே காணப்படும் நம்பிக்கையானது படித்த உயர்குடிமக்களால் மூடநம்பிக்கை எனக் கருதப்படுகிறது. எனினும் அனைத்து மக்களிடையேயும் வாழ்வின் அனைத்து வகைகளிலும் நம்பிக்கை நிலைபெற்றுள்ளது.

அவ்வகையில் சமய வழிபாடுகள் அனைத்துமே நம்பிக்கையின் அடிப்படையில் மக்களால் பின்பற்றப்படும் நெறிகளாகக் காணப்படுகிறன. இவ்வகையில் இந்துசமய வழிபாட்டு மரபில் பலியிடுதலானது ஆழமாகக் காலூன்றுவதற்கு இந்நம்பிக்கை என்பது முக்கியமான காரணமாக அமைகின்றது. எனவே பலியிடுதல் என்பது மக்கள் நம்பிக்கையுடன் செய்வதால் அதுவும் ஒரு குழு அல்லது சமூகத்தினது பலியுடன் கூடிய வழிபாடாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதொன்றாகக் காணப்படுகிறது. இச் சமூகத்தினர் தெய்வங்களுக்குப் பலியிடுதல் செய்வதால் தமக்கு நன்மை உண்டாகும் என்று நம்பி பலியிடுதற் சடங்கினை முக்கிய சடங்காகக் கொள்கின்றனர்.

பொதுவாக வழிபாட்டு மரபில் நாட்டார் தெய்வங்கள் வழிபடப்படவில்லையெனின் நோய்நொடி வரும் என்பதால் அத்தெய்வங்களை அமைதிப்படுத்துவதற்காக வழிபாடுகள்

**முருகனுக்குப் படைக்கப்படும் ஆட்டுக்கடா இறைச்சி பற்றியும் அதன் குருதியில் வெண்மையான அரிசியைக் கலந்து அவற்றை பிரப்பங் கூடைகளில் படையல் செய்து முருகக் கடவுளை வழிபாடு செய்த பக்தர்களைப் பற்றியும் திருமுருகாற்றுப்படையில் குறிப்புக் கள் காணப்படுகிறன.**

நடத்தப்படுகிறது. வணங்கினால் நன்மையும் வழிபடப்படாவிட்டால் தீமையும் செய்வனவாக இத் தெய்வங்கள் நம்பப்படுகின்றன. பலியிடுதல் காலப்போக்கில் இரண்டுவகை மரபுகளில் இடம்பெற்றன. அவ்வகையில் உயிர்களைப் பலியிடுதல், (விலங்குகள், பறவைகள்) பிற பொருட்களைப் பலியிடுதல் (மலர், தேங்காய், நீற்றுக்காய், எலுமிச்சம்பழம்) என்பனவே அவையாகும். இவ்வாறாக இருவகை மரபுகளில் நாட்டுப்புறச் சமயத்தில் உயிர்களைப் பலியிடுதல் பெருவழக்காகக் காணப்பட்டது. உயிர்ப்பலி என்பது தொடக்க கால மக்கட் சமுதாயத்தினரிடையே தெய்வத்தின் சீற்றம் போக்கக் கையாண்ட வழிபாட்டு முறை என்பதை மானிடவியலாளர்கள் உணர்த்தியுள்ளனர். அவ்வகையில் பலியிடுதலானது பழைய சமுதாயத்தில் தெய்வத்தை அமைதிப்படுத்தக் கையாண்ட வழிபாட்டு முறையாகும்.

இந்துசமய வழிபாட்டு மரபில் பலியிடுதல் தொடர்பாக நோக்கும் போது பொதுவாக இந்துசமய நூல்கள் எவையும் பலியிடுதலை ஆதரிப்பதாகவோ அல்லது ஊக்குவிப்பதாகவோ எந்தக் கருத்துக்களும் இடம்பெறவில்லை. ஆனால் நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்ற பலியிடுதல் மற்றும் உயிர்க் கொலைகள் பற்றியும் கூறத்தவறவில்லை. இந்துசமயம் பலியிடுதலை எச்சந்தர்ப்பத்திலும் எந்நூல்களிலும் வலியுறுத்தவில்லை. மாறாக எல்லா உயிர்கள் மீதும் அன்பு செலுத்த வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறது.

வேதங்களில் "பசு கொல்லப்படத் தகாதது" என்ற பொருள்பட "அகன்யா" என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படுகிறது. மேலும் கால்நடைகளின் எண்ணிக்கைகளைக் கொண்டே வேதகால சமுதாயத்தில் பொருளாதார அந்தஸ்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் வேதகால மக்கள் சமூகமானது மாமிசஉணவு உண்டதற்கான சான்றுகள் எவையும் இல்லை. மேலும் வேதங்களில் உயிர்கள் அனைத்தையும் சமநோக்கில் தரிசிக்கின்ற தன்மையும் "எல்லா உயிர்களும் என்னை நண்பனாகக் கருதட்டும் எல்லா உயிர்களையும் என் நண்பனாகவே கருதுவேனாக", (யசூர்வேதம் 36:18) "பூமி நமது தாய் நாம் பூமியின் பிள்ளைகள் மேகம் நமது தந்தை அவை நம்மைப் புனிதமாக்கி நமக்கு தெம்பூட்டுகின்றன" (அதர்வவேதம் 12:1:12) என இவைகளின் ஊடாக மேற்கூறிய பண்புகள் வெளிப்படுவதைக் காணலாம்.

வேதங்களில் பலியிடல் இடம்பெற்றமை பற்றியதான குறிப்புக்கள் காணப்படுகிறன. அசுவமேதயாகம், ராஜசூயயாகம் என்பவற்றின் போது குதிரை, மாடு ஆகியவை பலியிடப் பட்டன என வேத இலக்கியங்களின் ஊடாக அறியமுடிகிறது. அதேபோன்றே ரிக்வேதத்தில் உள்ள குறிப்பில் திருமண விழா ஒன்றின் போது பசு மாமிசம் பரிமாறப்பட்டமை பற்றிய குறிப்பு காணப்படுகிறது. மேலும் வேதங்களில்ப் பலியிடு தல் பற்றி மறைமுகமான கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால் பலியிடுதல் பற்றி வேதம் எதனையும் மறைக்கவில்லை.

வேத கால பலியிடல் ஆனது தமது சமுதாய வாழ்வில் உன்னதமாகக் கருதிய செல்வங்களை எல்லாம் இறைவனுக்கென அர்ப்பணித்து வழிபாடு இயற்றும் வடிவமாக காணப்பட்டது. எனவே வேதகால பலியிடல் என்பது வலியுறுத்தப்படாத ஒன்றாக இருந்த அதேவேளை அன்பினை முதன்மைப்படுத்து வதாகவும் காணப்பட்டிருந்தது எனக் கூறலாம். பலியிடல் ஆனது நம்பிக்கையின் அடிப்படை யில் வேதகால சமுதாயத்தில் சில கிரியை முறைகளுள் நிலவியது என்பதையும் மறுக்க முடியாது. அதாவது வேள்வியில் ஆகுதியான விலங்குகள் மீள உயிருடன் எழுகின்றன என்ற குறிப்புக்கள் வேதத்தில் உள்ளன.

தெய்வங்களுக்குப் பலி கொடுப்பது பற்றிப் சதபதப் பிராமணம் (Satapatha Brahmana) உபநிடதம் (11:2:1:6) "பலி அக்கினியில் பிறந்தது. தெய்வசோதியில் ஒன்றான அக்கினி பலி செலுத்துகின்றவனின் (Jajamana) பாவத்தைப் பட்சித்துப் போகும் அதன் விளைவால் பாவம் அகற்றப்பட அழகினால் ஐசுவரியத்தினால் அக்கினியின் புண்ணியத்தால் அவன் பரமலோகத்தில் பிரவேசிக்கும் சுடராவான். இதற்காகவே பலி செலுத்துகின்றான்" என்று கூறுகின்றது.

தென்னாட்டைப் பொறுத்தவரையில் வீரயுகம் என வர்ணிக்கப்படுகின்ற பழந்தமிழ் இலக்கிய காலத்தில் மிருகபலி சர்வ சாதாரண மாகக் காணப்பட்டது என்பதை இலக்கியங்க ளின் ஊடாக அறிந்து கொள்ள முடிகின்றது. முருகனுக்குப் படைக்கப்படும் ஆட்டுக்கடா இறைச்சி பற்றியும் அதன் குருதியில் வெண்மை யான அரிசியைக் கலந்து அவற்றை பிரப்பங் கூடைகளில் படையல் செய்து முருகக் கடவுளை வழிபாடு செய்த பக்தர்களைப் பற்றியும் திருமுருகாற்றுப்படையில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. அதாவது

**"மதபலிநிலை இயமாத்தாள்**
**கொழுவிடைக்**
**குருதியொடு விரை இத்தூ வெள்ளரிசி**
**சில்பலிச் செய்து பல்பிரப்பிர்இச்"**

என்கிறது.

மேலும் குறுந்தொகையில் "பலவாகிய வேறுபட்ட நிறம் பொருந்திய சோற்றை உடைய பலியுடன் சிறிய ஆட்டுக்குட்டியைக் கொன்று நோய் உள்ள பெண்ணின் நறிய நெற்றியைத் தடவி முருகக் கடவுளை வணங்கிப் பலிகொடுப்பான் வேலன்" என்ப தாக இப்பலியிடுதல் பற்றி விளக்குகிறது. இவை யாவுமே நம்பிக்கை என்ற சொல்லை அடிநாதமாகக் கொண்டதாகக் காணமுடிகிறது.

இவற்றோடு "தலைவியின் நோய் தணிய நிலையான துறையில் இருந்த கடவுளுக்கு வெள்ளாட்டுக்கடா பலியிட்டும் தணியவில்லை" என அகநானுறு கூறுகிறது. தெய்வத்தின் சீற்றத்தைப் போக்கப் பலியிடும் முறையினை அகநானுறு விவரிக்கிறது. தெய்வத்திற்குப் பலியிடும் வழக்கினை ஐங்குறு நூறு தெரிவிக்கிறது. இவ்வாறு பலியிடுதல் தொடர்பாக பழந்தமிழ் இலக்கியங்களில் பல்வேறு பரிணாமங்களில் கூறப்பட்டுள்ள போதும் கொலைமறுப்புக் கொள்கையானது அக்காலம்தொட்டே இருந்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயச் சீர்திருத்தவாதிகள் என்ற மரபில் கால்பதித்தவர்களில் ஈழநாட்டில் ஆறுமுகநாவலர் முதன்மை பெறுகிறார். நாவலர் பலியிடுதலை மிக வன்மையாக எதிர்த்தார். பல தளங்களில் தன்னை பழமை போற்றும் பண்பாளனாக, மரபுகளில் மரியாதை கொண்டவராக இனங்காட்டிக் கொண்டார். "நல்லூர் கந்தசுவாமி", "யாழ்ப்பாணத்துச் சமயநிலை" போன்ற அவரது நூல்கள் பலியிடுதலைக் கண்டிக்கும் பிரசுரங்களுக்கு எடுத்துக்காட்டுக்களாகும். ஆயினும் நாவலர் போன்ற படித்த வர்க்கத் திற்கே அதிகம் அவருடைய போதனைகள் சென்றடைந்தது. நாவலர் அறிவியல் விஞ்ஞானம் அறிந்த ஒரு பகுத்தறிவாளன். களத்தில் நின்றே தனது எதிர்ப்பினை வெளிப்படுத்தினார். மக்கள் நம்பிக்கையின் அடிப்படையில் வழிபடப்பட்ட பலியிடுதலானது முற்றாக நாவலரால் ஒழிக்கப்பட முடியாது போனது எனலாம். இவ்விடத்தில் நாவலர் பலி யிடுதலை இந்துசமயத்திற்கு எதிரான ஒன்றா கக் கருதினாரே தவிர அதனைப் பின்பற்றும் மக்களின் நம்பிக்கையினை அவர் நினைக்க வில்லை.

வேதங்களில் மிருகபலி பற்றிய செய்திகள் காணப்பட்டபோதும் நாவலர் வேதங்களை மதித்தார். அத்தோடு ஆட்டுக் கடாவை அறுத்து நிவேதித்தமை பற்றிக் கூறும் திருமுருகாற்றுப்படைக்கு உரை எழுதியுள்ளார். இவ்வாறு எல்லாவற்றையும் அறிந்த நாவலர் காலமாற்றத்திற்கேற்ப பலியிடுதல் மாற்றம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் செயற்பட்டார் என்றே கூற முடிகிறது. நாவலர் வாழ்ந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் வியாபார நோக்கத்தின் பொருட்டு நடைபெற்ற பலியிடுதல் அதிகமா கக் காணப்பட்டமையும் ஆங்கிலேய கிறீஸ்தவ சமயத்தின் கேள்வியும் நாவலரை இவ்விடயத் தில் தூண்டியிருக்கிறன.

மனிதனை மனிதனாக்கும் சமயம் தான் இன்று தேவை எனக் கூறிய நடைமுறை வேதாந்தி விவேகானந்தர் மனதுக்கோ உடலுக்கோ பலவீனத்தை உண்டுபண்ணும் எதையும் உன் கால்விரலாலும் தீண்டாதே... என்கிறார். இவ்வாறு விவேகானந்தர் தனது போதனைகளில் அன்பையே வலியுறுத்தினாரே தவிர உயிர்க்கொலை பற்றியோ பலியிடுதல் பற்றியோ எதனையும் கூறவில்லை. இவரைத் தொடர்ந்து வந்த சீர்திருத்தவாதிகளும் இந்து சமயத்தின் பெயரால் நடைபெற்ற பலியிடுத லினை எதிர்த்தே வந்துள்ளார்கள் சீர்திருத்த இயக்கங்கள் அன்றுமுதல் இன்றுவரை இதனை பல்வேறு கோணங்களில் எதிர்த்தே வந்திருக் கின்றன, வருகின்றன.

இவ்வாறு இந்துசமய வழிபாட்டு மரபில் பலியிடுதலானது பின்பற்றப்பட்டும் எதிர்க்கப்பட்டும் வந்துள்ளமையைக் காணலாம். ஆயினும் இவை எல்லாவற்றிலும் காணப்படுகின்ற பொதுவான விடயங்களை நோக்கும் போது வழிபாட்டு மரபில் ஒவ்வொன் றும் அன்பினையும் உயிர் கொல்லாமை பற்றியும் கூறத்தவறவில்லை. அதேபோல் பலியிடுதலும் ஒவ்வொரு காலகட்டத்திலும் நடைபெற்று வந்துள்ளது. அவை அனைத்தும் நம்பிக்கையினைக் காரணமாகக் கொண்டே நடைபெற்று வந்துள்ளமையினை இலக்கியங் கள் எடுத்தியம்புகின்றன. இவை இந்துப் பண்பாட்டு மரபில் பரிணாமம் பெற்று வந்துள்ளன.

பலியிடல் நடைபெறும் அகோரத் தெய்வங்களாகக் காளி, வீரபத்திரர், மதுரை வீரன் போன்ற தெய்வங்களைக் கூறலாம். மதுரைவீரன் நாட்டார் தெய்வங்களில் மிகவும் ஆவேசமான, துடிப்பான தெய்வம். அவனது இயல்பான ஆவேசத்தன்மையானது வழிபாட்டு முறைகளால் படிப்படியாக குறைக்கப்படுகிறது. குறிப்பாக பலிகொடுத்தலின் மூலம் அவனை அமைதிப்படுத்த வழிபடுவோர் முற்படுகின்ற னர். மதுரை வீரனுக்குப் பலிப் பொருட்களாக ஆடு, பன்றி, சேவல் ஆகியன பயன்படுத்தப் படுகின்றன. இவ்வழிபாடு இடத்திற்கிடம் வேறுபடுகின்றது.

பலியிடுதல் ஆனது ஆரம்பநிலை சமூகங்கள் பெரும்பாலனவற்றில் ஏதோ ஒரு வகையில் சமய நம்பிக்கையாகக் காணப்பட்டது. ஏனெனில் சடங்குகளும் வழிபாடுகளும் மனிதனாலேயே நம்பிக்கையின் அடிப்படையில் படைக்கப்பட்டவை. அந்த மனிதனே தன்னைக் கட்டுப்படுத்தி, தன்னைவிட மேலான சக்தி யாகிய பரம்பொருளோடு தொடர்புகொள்ள வெனத் தன்னளவில் ஆரம்பித்த முயற்சிகளே இவையாகும். இவ்வாறான முயற்சிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடநம்பிக்கை எனக்கூறி முடிச்சுப் போட நினைப்பது அறிவார்ந்த விடயமல்ல.

ஒரு பண்பாட்டுப்புலத்தின் கட்டுக் கோப்பான சமூக இயக்கத்திற்கு அவசியமான ஒருவகையான பண்பாட்டுப் பண்டமாகவே சமயம் சமூகப் பண்பாட்டு ஆய்வாளர்களால் நோக்கப்படுகிறது. ஒரு சமூகத்தின் பண்பாட்டு நியமங்களும் விழுமியங்களும் குடிவழக்காறுக ளும் சிதைவுறாது தாங்கிக் கொள்வதும் சமயமே. அவ்வகையில் கால மாற்றத்திற் கேற்ப பொருத்தமானவற்றை உள்வாங்கி பொருத்தமற்றதைச் சிறுகச் சிறுக வழக் கொழியச் செய்து தீடீரென சமூக ஒழுங்கமைப் புச் சிதையா வண்ணம் காப்பதும் சமயமே ஆகும். E.P.ரெயிலர், நடேல், ராபல், அபற்றி ஸோனி, எலியட் போன்ற சமூக மானிட வியலாளர்களும் இதனையே வலியுறுத்து கின்றனர்.

பொதுவாக பலியிடுதலானது பல்வேறு பரிணாமங்களைப் பெற்று வருகின்றது. ஆரம்ப காலமான வேதகாலத்தில் காணப்பட்ட பலியிடுதலுக்கும் தற்காலத்தில் உள்ள பலியிடுதலுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. அதாவது பலியிடுதல் மீது கொண்ட நம்பிக்கை குறைவடைந்து வருவதனை அவதானிக்க முடிகிறது. அவ்வகையில் இப்பலியிடுதல் பற்றி நோக்கின் உதாரணமாக ஒரு சமூகம் பலியிடுதல் மீது நம்பிக்கை கொண்டு அச்சமூகமானது வழிபாட்டின் போது பலியிட்டு வழிபாடாற்றுகிறது. வேறொரு சமூகத்திலிருந்து அவ்வழிபாட்டினை நோக்கின் அது ஒரு மூடநம்பிக்கையால் ஏற்பட்ட வழிபாடு என்றே கூறுவர். ஆனால் அச்சமூகம் தமது வழிபாட்டில் உயர்ந்தே நிற்கிறது என்றே கூறலாம்.

"இந்துசமயம் காலத்திற்கு காலம் தன்னைப் புதுப்பித்து வந்துள்ளது. அதன் நிலைபேற்றுக்குக் காரணம் கொள்கையிலோ ஒழுக்கத்திலோ மாற்றம் அடையாத இந்து சமயம் ஒன்று இருந்ததில்லை. அது வாழ வேண்டிய வாழ்வியல், அது சிந்தனையிலோ வரலாற்றிலோ ஏற்படக் கூடிய எந்தவொரு நடவடிக்கையையும் சமாளித்து இயங்கக் கூடியது என்பதை அதன் வரலாறு மெய்ப்பிக் கிறது" என டாக்டர்.ராதாகிருஸ்ணன் கூறுகிறார்.

அவ்வகையில் இந்து சமயத்தில் காணப்படுகின்ற பலியிடுதலும் இவ்வாறே ஒவ்வொரு மாற்றத்தினையும் பெற்று வந்துள்ளது. அந்தவகையில் மக்களிடம் அல்லது சமூகத்தில் காணப்படும் பலியிடுதல் நம்பிக்கையானது தாமாகவே உணர்ந்து அவ்வழிபாட்டிற்கு மாறாக குறியீட்டு வடிவிலான வழிபாடுகளை மேற்கொள்ளு வார்களேயானால் இப்பலியிடுதலானது மறையுமே ஒழிய ஏனைய முறைகளால் இந் நம்பிக்கையுடனான பலியிடுதலை நிறுத்த முடியாது.

தற்காலத்தில் பலியிடுதலானது சில இடங்களில் பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டு நம்பிக்கைக்குரிய வழிபாடாக காணப்படும் அதேவேளை ஈனத்தனமான செயற்பாடுகளும் அரங்கேறி வருகின்றன. அதாவது இந்து சமயத்தினையும் வழிபாட்டினையும் அடிப்படை யாகக் கொண்டு வர்த்தக நோக்கத்திற்காக இப்பலியிடுதலை பின்பற்றும் சமூகங்களும் இக்காலத்தில் இருக்கத்தான் செய்கின்றன. பல ஆலயங்களில் இவை மும்முரமாக உள்ளமையினைக் காணமுடிகிறது. இதற்கு இந்துசமயத்தினை பகடைக்காயாகப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறான வர்த்தக நோக்கத்திலான செயற்பாடுகள் மூலம் பலியிடுதல் தொடர்பான வெறுப்புணர்வையும் மற்றைய சமயங்களின் இந்து சமயத்திற்கு எதிரான செயற்பாடுகளும் அதிகரிக்கவே செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

இந்துசமயத்தில் மட்டும் இப்பலியிடும் மரபு காணப்படவில்லை. தமிழ் மக்கள் பலிகொடுப்பதைப் போன்று கிரேக்கர்களும் ஹிபெட், ஆர்டிஸ், அப்பல்லோ போன்ற தெய்வங்களுக்குப் பலி கொடுக்கும் வழக்கம் கிரேக்கம் போன்ற நாடுகளில் வழக்கத்தில் இருந்துள்ளது.

ஒரு சமுதாயத்தில் ஏற்படும் மாற்றம் எவையும் தானாக நின்றுவிடுவதில்லை. அவற்றை மூடநம்பிக்கை என ஒதுக்கிவைக்க வும் முடியாது. நம்பிக்கைகள் உணர்வுகளுடன் தொடர்புபட்டது. அவற்றை இலாவகமாகக் கையாள வேண்டும். சமயத்தின் மீதான நம்பிக்கையினை இழக்காத வகையில் உயிர் பலியின் தாக்கத்தினை அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்த வேண்டும். மாறாக அவர்களது கருத்தியல்களையும் வழிபாட்டு முறைகளையும் மூடத்தனமாக முறையற்ற விதத்தில் நோக்கப் படுமாயின் பலியிடுதலைப் பின்பற்றும் சமூக மும் தமது கருத்தியலிலும் வழிபாட்டு முறைகளிலும் இருந்து விலகாது அவர்களை வலுப்படுத்தவே உதவும் என்பது திண்ணம்.

இந்து வாழ்வியல் கூறுகள் சிலவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதையும் சிலவற்றைத் தூக்கிவீசுவதும் சிலவற்றைவிடவும் முடியாமல் கடைப்பிடிக்கவும் முடியாமல் திணறுவதையும் இன்று காணலாம். அவற்றில் ஒன்றாகவே இந்து வழிபாட்டு மரபில் பலியிடுதலானது காணப்படுகிறது.

● **திரு. சி. சுதாகரன்,**
பட்டதாரிப் பயிலுனர்,
பிரதேச செயலகம், மண்முனை மேற்கு.

# கலாசார விழா - 2012

## போட்டி முடிவுகள்

**திறந்த போட்டி**

**கவிதை**

1ம் இடம் - **திரு.கே. பூபாலசிங்கம்**

2ம் இடம் - **திரு.சு. ரசிகரன்.** மண்டபத்தடி, கன்னன்குடா.

3ம் இடம் - **திரு.க. மயில்வாகனம்**, கரவெட்டி, நாவற்காடு.

**சிறுகதை**

1ம் இடம் - **செல்வி.தி. புஸ்பலெட்சுமி,** மாவடித்தீவு, நாவற்காடு.

2ம் இடம் - **திரு.சு.ரசிகரன் ,** மண்டபத்தடி, கன்னன்குடா.

3ம் இடம் - **செல்வி.இ. துஸ்சணியா,** விளாவெட்டுவான், நாவற்காடு.

**பாடசாலை மட்டப் போட்டிகள்**

**கட்டுரை — சிரேஷ்ட பிரிவு**

1ம் இடம் - **செல்வி.யோ. ஜமுனா,** மட்/ கன்னன்குடா மகா வித்தியாலயம்

**பேச்சு — கனிஷ்ட பிரிவு**

1ம் இடம் - **செல்வி.இ.துஸ்சணியா,** மட்/ நாவற்காடு நாமகள் வித்தியாலயம்.

**பேச்சு — சிரேஷ்ட பிரிவு**

1ம் இடம் - **செல்வி.கு.சுதர்சியா** - மட்/ நாவற்காடு நாமகள் வித்தியாலயம்.

2ம் இடம் - **செல்வி.யோ.கேமாவதி,** மட்/ கன்னன்குடா மகா வித்தியாலயம்.

**ஓவியம் - சிரேஷ்ட பிரிவு**

**ஆறுதல் பரிசு**

**தி. அனுசாந்தன்** - மட்/ கன்னன்குடா மகா வித்தியாலயம்.

**யோ. ஜெகதீஸ்வரன்** - மட்/ கன்னன்குடா மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நானிலம் கொண்டது மண்முனை மேற்கு
ஆன்மீகம் கொண்டது மண்முனை மேற்கு
விவசாயம் பொங்குவது மண்முனை மேற்கு
வியாபாரம் பொங்குவது மண்முனை மேற்கு

கலைகள் பல கொண்டது மண்முனை மேற்கு
அதில் கண்ணியம் உடையது மண்முனை மேற்கு
கூத்தின் உறைவிடம் மண்முனை மேற்கு
நல் இசைகள் பல உடையது மண்முனை மேற்கு

இயல் இசை வளர்வது மண்முனை மேற்கு
நாடகம் சிறப்பது மண்முனை மேற்கு
இசைக்கலை இனிப்பது மண்முனை மேற்கு
அதில் இன்புற்றிருப்பது மண்முனை மேற்கு

கண்ணகி களிப்புறும் மண்முனை மேற்கு
அது கன்னன்குடாவில் உள்ளது மண்முனை மேற்கு
சிறப்புறு குளத்தினை உடையது மண்முனை மேற்கு
அது உன்னிச்சை பதியினுடையது மண்முனை மேற்கு

நல் விவசாயம் உடையது மண்முனை மேற்கு
அது பரவலாக உடையது மண்முனை மேற்கு
விந்தைகள் படைப்பது மண்முனை மேற்கு
அதை விருப்புடன் படைப்பது மண்முனை மேற்கு

வள்ளல்கள் வாழ்ந்திடும் மண்முனை மேற்கு
வறியவரை வாழவைத்திடும் மண்முனை மேற்கு
குடிகள் பல கொண்டது மண்முனை மேற்கு
அதன் ஒற்றுமைக்கு உதாரணம் மண்முனை மேற்கு

பாவலர் பலர் வாழ்வது மண்முனை மேற்கு
ஆடிடும் மயிலின் அழகு கொண்டது மண்முனை மேற்கு
கவிதைகள் புனைவது மண்முனை மேற்கு
அக்கவிதைக்கு குயில் பாடும் மண்முனை மேற்கு

வயல் வெளிகள் சூழ்ந்தது மண்முனை மேற்கு
அதில் உழவர்கள் உறவாடும் மண்முனை மேற்கு
காவியங்கள் இயற்றிடும் மண்முனை மேற்கு
அதை கடவுளுக்கு இசைத்திடும் மண்முனை மேற்கு

நீர் வளம் உடையது மண்முனை மேற்கு
அதில் திரவியம் சேர்ப்பது மண்முனை மேற்கு
மட்டுமாநகர் புகழ் மண்முனை மேற்கு
அந் நகருக்கு மேற்கான மண்முனை மேற்கு


ஆலயம் சூழ்ந்தது மண்முனை மேற்கு
அதில் அற்புதம் நிகழ்வது மண்முனை மேற்கு
கல்விக் கூடங்கள் நிறைந்தது மண்முனை மேற்கு
அதில் கல்விமான்கள் வளர்த்திடும் மண்முனை மேற்கு

நாட்டு வைத்தியம் வளர்வது மண்முனை மேற்கு
அரிய மூலிகை பல கொண்டது மண்முனை மேற்கு
பல்வகை சேனைகள் உடையது மண்முனை மேற்கு
அங்கு பல்வகை பயிர்கள் கொண்டது மண்முனை மேற்கு

சூரியன் மறைவது மண்முனை மேற்கு
அதில் மனம் நிறை மகிழ்வது மண்முனை மேற்கு
பண்புடை மாதர்கள் நிறைந்தது மண்முனை மேற்கு
அனைத்தையும் அருளும் மண்முனை மேற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதயமாகும் உபதேசம்

சீரற்ற பாதையிலே
சீரழியும் எம் இனத்தை
சீருடையின் கோலத்தால்
சீர் பெறவே நீ வழிகாட்டு

அரும்பெரும் மழலையாகி
மொட்டாகும் சிறுமியெனும் வடிவத்தால்
வளர்ச்சிப் பருவத்திலே வனப்பான கன்னிகையே!
மாசில்லா மங்கையெனும் மலராக நீ ஜொலிக்க

மேலுள்ள பருவங்கள் நான்கினிலும்
பண்பாட்டு சீருடையை
நாணயமாய் நீ அணிந்து
நானிலத்தில் நிமிர்ந்தெழம்மா

எழிலான உன் நுதலில்
வாகான குங்குமம்தான் உனக்கென்றும்
வளமான வாழ்வு தரும் மாறாக
நீயொட்டும் ஸ்ரிக்கர்திலகமது உன்வாழ்வை
நாளாந்தம் மழுங்கடிக்கும்

அர்த்தங்கள் ஆயிரம்
அறிவுரையாய் பார்த்திடலாம்
மற்றவர்க்கும் களம் அமைக்க வழிவிட்டு
எம்பேனா விநயமுடன் விடைபெறுதே.

**நா**கரீக மோகத்தில்
நடைபோடும் நங்கையே
நானிலம் போற்றும்
தங்கையாய் நீ வாழ மறுப்பதேன்?

பண்பான கலாசாரம்
அன்பாக வழிநடத்த
வம்பான பாதையிலே
திசைமாறி நகர்வதென்ன?

அவனியெல்லாம் பவனிவரும்
மங்கையர் குலமே நீர்
மாயையெனும் கோட்டையிலே
மதிமயங்கி சுழல்வதும் முறைதானோ?

அன்பான அரிவையே நாம்
அருள் வடிவ சக்தியல்லோ!
ஆடம்பர வேசத்திற்கு அடிமையாய்
உருமாறி
ஊரார் தூற்றநடப்பது சரிதானோ?

பொறுமையின் சின்னமாய்
பெருமையுடன் திகழும் எம் குலமே!
பொன்னான எம் பண்பாட்டை
கண்ணாக நீயும் மதித்துவிடு

**செல்வி. ச. சந்திரமதி**
மகிழவெட்டுவான், ஆயித்தியமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவியும் பொருளும்

திரு.க.மயில்வாகனம்
கரவெட்டி, நாவற்காடு
மட்டக்களப்பு.

காலம் உணர்ந்து நட
காலம் பொன்னானது வெறும்
கோலம் போட நினைத்தால்
கோலம் நாமாவோம்

சாலமும் துதித்து வாழ்ந்தால்
சாலங்கள் விலகி விடும்
சாலமிட நினைத்திடில்
சாலையும் தூக்கமுறும்

இல்வாழ்வை நினைத்துப் பார்
இல்லான் மனம் மகிழ்வான்
இல்லையேல் இன்பமில்லை
இல்லம் வெறுமையுறும்

சொல்லுதல் சொல் உயர்வுண்டு
சொல் வேறு ஆனால் வீண்
சொல் என்றும் கரும்பு
சொல் மதியேல் அது வீணே

பருவம் மதித்து நட
பருவம் பல பகரும்
பருகாதே என்றுரைக்கில்
பருகில் பாசாணம்

வெறுமையால் வறுமையின்மை
வெறுமுறவு தேவையில்லை
பொறுமை பொன் பெறும்
பொறுத்தோர் புவியாழ்வார்

கவி.1 காலம் உணர்ந்து நட
காலம் பொன்னானது –வெறுங்
கோலம் போட நினைத்தால்
கோலம் நாமாவோம்

(காலம் உணர்ந்து நட)

**பொருள்: 1** காலத்திற்கு ஏற்றவாறு உணர்ந்து செயற்பட்டால் நாங்கள் எச்சமயத்திலும், எந்தவேளையிலும் எதையும் வென்றுவிடலாம். நாம் அவதியுறும் வேளையிலோ, அல்லது அவமானச் சந்தர்ப்பத்தைச் சந்திக்கும் வேளையிலோ அதிலிருந்து தப்பிக் கொள்ளலாம்.

(காலம் பொன்னானது)

1. எமக்கு கிடைத்த காலப் பகுதியை வீணடியாமல் அதைப் பொன்னென மதித்து மிகவும் சுறுசுறுப்புடனும் உற்சாகத்துடனும் செயற்படும் போது அது பொன்னாய் மதிக்கப்படுகின்றது.

(வெறுங் கோலம் போட நினைத்தால்)

3. உண்மை ஒருபுறம் இருக்க இல்லாத ஒரு வெறுமையான பொய்யைச் சொல்லி நடித்தால் நாம் மனித நிலையில் இருந்தும், மனு நீதியில் இருந்தும் மாறுபட்டு, மிருகக்குணம் உடையவராய் மதிக்கப்பட்டு புறக்கணிக்கப்படுவோம்.

(கோலம் நாமாவோம்)

2. நாம் நமது நம்பிக்கை நாணயத்தை இழந்து, மறந்து பிறரை ஏமாற்ற நினைத்தால் வல்லவர்க்கு வல்லவர் வையகத்தில் உண்டு என்பதை மறந்து, நான் தான் பெரியவன், நானே அனைத்தும் தெரிந்தவன் என்றும் இறுமாப்புக் கொண்டு செயற்பட முனைந்தால் நாம் பிறரால் அவமதிக்கப்படுகிறோம். இதற்குக் காரணம் நாமாவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவி. 02 சாலமும் துதித்து வாழ்ந்தால்
சாலங்கள் விலகிவிடும் - போலிச்
சாலமிட நினைத்திடில்
சாலையும் தூக்கமுறும்

(சாலமும் துதித்து வாழ்ந்தால்)

**பொருள்:**

1. மனித வாழ்க்கையில் காலம்தோறும் ஆலயங்கள் சென்று வழிபடல், சமூக சேவைகளில் மனத்தூய்மையுடன் பணியாற்றல், சமய கலாச்சாரங்களில் கலந்து கொள்ளல், திருமண வைபவங்களில் பங்கேற்றல், தொழில் புரியும் இடங்களில் தினமும் சமூகம் கொடுத்து தமது பணியைக் குறைவின்றிச் செய்வனவே செய்து முடித்தல், மரண சடங்குகளில் கலந்து கொள்ளல் இவை நல்ல விடயங்கள் ஆகும்.

(சாலங்கள் விலகி விடும்)

2. உண்மை உடையவராய், உற்சாகம் உடையவராய் செயற்படும் போது எங்கள் சோம்பல் நீங்கி தேக ஆரோக்கியமுடையவராய் வாழலாம். மேலும் எம்மை ஒரு எதிரியாக நினைப்பவரையும் கூட, அவரது வெறும் சாலங்கொண்ட மனநிலை விலகி, ஒரு நல்லவராய், நல்ல உறவினராய் ஏற்றுக்கொள்ள முடியும்.

(போலிச் சாலமிட நினைத்திடில்)

3. தெரிந்தும் தெரியாதவராய், தெரியாதவற்றைத் தெரிந்தவாராய், சாலங் காட்டி நடந்து கொள்வதனால், நாம் பொய்யராகவும் ஒன்றும் தெரியாதவராகவும் கருதப்பட்டு, பெறுமதியற்றவராய் கவனிக்கப்படுகின்றோம்.

(சாலையும் தூக்கமுறும்)

3. நாம் செய்யும் தொழிலைத் தெய்வமாக மதிக்கிறோம், தொழிற்சாலையைக் கோயிலாக நினைக்கிறோம், மாறாக பொய், களவுக்கு முன்னுரிமை கொடுத்து நடக்கும்போது தொழிற்சலையை இழுத்து மூட வேண்டிய நிலை உருவாகும். ஏன் மூடப்பட்டே விடும்.

கவி.03 இல்வாழ்வை நினைத்துப்பார்
இல்லாள் மனம் மகிழ்வாள்
இல்லையேல் இன்பமில்லை
இல்லம் வெறுமையுறும்

(இல்வாழ்வை நினைத்துப்பார்)

**பொருள்:**

1. உலகில் வாழும் மனிதர் யாவரும் இல்வாழ்வை நல்வாழ்வாய் நினைத்துப் பார்க்க வேண்டும். மண், பொன், பெண், பொருள், இல்லிடம் இல்லார்க்கு நல்லிடம் இல்லை. எனவே இல்வாழ்விற்கு இல்லிடம் முக்கியம் தேவை, இல்லம் ஒளிபெற வேண்டுமெனின் ஒரு பெண் தேவை, சந்தோஷ வாழ்க்கைக்குப் பொன்னுடன் பொருளும் தேவை.

(இல்லாள் மனம் மகிழ்வாள்)

2. இல்லத்தில் விழக்கொழியாய் திகழும் இல்லாள் மனம்மகிழ தன்னை மனைவியாய் ஏற்று மாலையிட்ட கணவன் தனக்கு மட்டுமே என மகிழ்ச்சி அடைகிறாள். தேவையான பொன் பொருள்களை அள்ளி அணைத்து அணிகிறாள். குழந்தை இச்சை கொள்கிறாள். பெற்று வளர்க்கிறாள். தான் நினைத்த செல்வங்களை அனுபவித்து மனமகிழ்வடைகிறாள்.

(இல்லையேல் இன்பமில்லை)

3. இப்பெண் நினைத்தபடி தன் கணவன் தனக்கு மட்டும் என நடந்து கொள்ளாமல் உழைத்தும், வீண் செலவாழியானால், உண்ணவில்லை, உடுக்க உடையில்லை, என்ற நிலையில், மதுபோதையில் இதுவே வாழ்க்கையென இறங்கிவிட்டால் மனதுக்கு இன்பமே இல்லை.

(இல்லம் வெறுமையுறும்)

4. வறுமை தலைதூக்கி ஆடத் தொடங்கினால் உள்ள பொன், பொருட்கள் அனைத்தையும் விற்று உண்ண வேண்டி ஏற்படும். கணவன் ஒருபுறம், மனைவி, பிள்ளைகள் ஒருபுறம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் விளக்கு வைப்பதற்கும் ஒருவரும் இல்லாது இல்லம் இருள் சூழ்ந்து வெறுமையடைகிறது, பாழடைகின்றது

கவி. 04 சொல்லுதல் சொல் உயர்வுண்டு
சொல் வேறு ஆனால் வீண்
சொல் என்றும் கரும்பு
சொல் மதியேல் அது வீணே

(சொல்லுதல் சொல் உயர்வுண்டு)

**பொருள்:**

1. மனிதன் வாயினால் உரைக்கும் வார்த்தைகள் அனைத்தும் மனிதப் பண்பிற்கு ஏற்றதாகவும், உண்மை யானதாகவும், மனுநீதிக்கு மாறு படாதவைகளாகவும், பக்கச்சார்பற்ற தாகவும் இருக்குமாயின் மனித வாழ்வில் உயர்வு உண்டு.

(சொல் வேறு ஆனால் வீண்)

2. வாய் திறந்தால் பொய், பிறரை ஏமாற்றும் பழக்கம், பிறர் உடமை களை அபகரித்தல், உயிர்வதைக்கு அஞ்சாமை, இவை வீண் நிலை யானவை.

(சொல் என்றும் கரும்பு)

3. ஒருவர் அடக்கமாக, ஆதரவாக, பண்பாக, பிறர் மனதை நோக வைக்காமல், சிரித்த முகத்துடன் பேசுபவர் பேச்சு, பிறர் உள்ளத்தில் நம்பிக்கையும், தெளிவையும், கொடுத்துக் கரும்பென இனிக்கும்.

(சொல் மதியேல் அது வீணே)

4. ஒருவர் உண்மையான அறிவுரை களை, எதிர்காலத்தில் அடையக் கூடிய நன்மைகளை, நல்ல விடயங் களைப் பேசும் போது அதைப் பொருட்படுத்தாது, வேறுபாடான கதைகளைப் பேசியவாறு இருந்தால் அது வீணாக அமைகிறது, பிரயோச னமற்று போகின்றது.

<u>கவி.05</u> பருவம் மதித்து நட
பருவம் பல பகரும்
பருகாதே என்றுரைக்கில்
பருகில் பாசானம்

(பருவம் மதித்து நட)

**பொருள்:**

1. பெரியவரை, பெற்றோரை, சகோதரரை, திருமணமான பெண்களாயின் தன் கணவனை, குழந்தைகளை, மற்றும் ஏனைய உயிர்களை அவை அவைக்கு, அவர் அவர்க்கு ஏற்றவாறு மனம் மகிழ்வுற இன்சொல் பேசி நடக்க வேண்டும்.

(பருவம் பல பகரும்)

2. குழந்தை தன் குழந்தைப் பேச்சுக்க ளைப் பேசி பெற்றோரை, உற்றார் உறவினரை மகிழ்விக்கும் அறிவுடை யவராய், பொறுமையுடையவராய், பிள்ளையைச் சீராட்டி, தாலாட்டி, உணவூட்டி, அன்பு பாராட்டுவர். அறிவுடைய தந்தையின் அன்பான வார்த்தைகள் பிள்ளைகளின் இதயத்தில் பதிகின்றது. குருவான வர்களின் உபதேசம் அறிவுடைய பிள்ளைகளைச் சென்றடைகின்றது, முதியவர்களின் அனுபவம் மிக்க கதைகள் வாழ்வின் முன்னேற்றத் திற்கென பல நன்மைகள் பகரும்.

(பருகாதே என்றுரைக்கில்)

3. ஒருவருக்குத் தீங்கு நேருமென அவர் உயிரைப் பாதுகாக்க நினைத்து உயிருக்குத் தீங்கு செய்யும் ஒன்றைப் பருகாதே என்று உரைக்கில் அவர் காப்பாற்றப்படுகிறார்.

(பருகில் பாசானம்)

4. ஒருவர் கோபத்தில், அல்லது தன் இறுமாப்பில், பருகுகின்றார். அல்லது ஓர் குழந்தை அறியாமல் பருகிக் கொள்கின்றது என்றால் உயிரிழக்கும் நிலை உருவாகும் அது பாசாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவி 6 வெறுமையாய் வறுமையில்லை
வெறுமுறவு தேவையில்லை
பொறுமை பொன் பெறும்
பொறுத்தோர் புவியாள்வார்

(வெறுமையாய் வறுமையில்லை)

**பொருள்**

1. உலகில் ஆபாசங்கள் அனைத்தையும் வெறுத்து தனிமையிலே தன் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி தன் உயிர்மூச்சுக்கு முக்கியத்துவம் கொடுத்து, தேகப்பியாசங்களைச் செய்து, உடலுக்கு ஆரோக்கியத்தைக் கொடுத்து வாழ்கிறான். மேலும் இப்பழக்கவழக்கங்களைப் பிறருக்குப் பழக்கிக் கொடுக்கிறான் என்றால் அங்கு வறுமையில்லை.

(வெறுமுறவு தேவையில்லை)

2. ஒருவர் இவரது மாணாக்கரை ஒரு வல்லவனாக்கி உலகம் புகழும் படியாக்க வேண்டுமென நினைத்து கற்பிக்கும் வேளை, குருவுக்கு மாறாக கெட்ட நடைமுறைகளில் ஈடுபடுவதால் பல அவமானங்களைச் சந்திக்கின்றான். எனவே இவ்வாறான உறவு தேவையில்லை.


(பொறுமை பொன் பெறும்)

4. இப்புவியில் பல கணங்கள், பல குணமுடையவர்கள் உள்ளனர். பல ஜீவாத்மாக்கள் உள்ளன. அவை நமக்கு கோபத்தை, பல துன்பங்களை, அவமான வேதனைகளைச் செய்ய முடியாத பாவங்களைச் செய்யத் தூண்டும். அவ்வேளை பொறுமையென்னும் படகில் ஏறிச் சென்றால் பொன் நிறைந்த பதியை அடைந்திடலாம்.

பொறுத்தோர் புவியாள்வார்

4. அறம் என்னும் அற்புத விளக்கை அணையாது பாதுகாத்து, திரி எண்ணெய் விட்டு ஆத்மாக்களின் ஆசை பல பூர்த்திசெய்து, அயராது அன்புள்ளங்களைக் கொண்டு அணுகி, புவி விளக்காய் திகழ்வர், புவியாழும் பக்குவத்தைப் பெற்றவராயும் திகழ்வர்.

# மீண்டும் ஒரு விடியல்



நெல்லுடன் சோழமும் எழுந்து
நின்று வரவேற்க
பாலுடன் தேனும் சேர்ந்திங்கு
சுவையூட்ட
உருண்டோடும் உன்னிச்சையும்
தவழ்ந்தோடி தாலாட்ட
காளையரும் கன்னியரும்
கவிபாடி களனி காக்க
வந்தாரை வரவேற்று
வாழவைத்த தேசமிது
வவுணதீவு
மூன்று தசாப்தங்களிவையாவும்
மூழ்கிப்போனதேனோ?
பொட்டிழந்த விதவைகளும்
பூவிழந்த பாவையரும்
பாரினில் பரிதவித்ததேனோ?
உறவறுத்த உத்தமரும் ஊரை
விட்டோட?
பலமிழந்த பாமரரும் புலம்
பெயர்ந்ததேனோ?
மீண்டும் ஒரு விடியல்
நமக்காய் பூ மலர்ந்து
கல்வியுடன் கவிதரும் கலைகளும்
களிப்புற எழுந்தன.
புதுயுகத்தில் புது வசந்தம்
இதமாய் மலர
இனியெல்லாம் இங்கிதமாய்
வாழ்ந்திடவே இறைவன் எம்மை
ஆசீர்வதிக்கட்டும்

கே.பூபாலசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழுப்பெயர் : திருமதி. வீரக்குட்டி சின்னப்பிள்ளை
பிறந்த திகதி : 1942.07.01
முகவரி : ஒளிமடு, ஆயித்தியமலை தெற்கு, ஆயித்தியமலை.
துறை : கிராமிய வைத்தியம் (மருத்துவிச்சி)

இவர் இருபது வருடங்களுக்கு மேலாக மருத்துவிச்சியாகச் சேவை செய்து வருகின்றார். இவரது தாய் மருத்துவிச்சியாக இருந்ததால் அவரிடமிருந்து இதனைக் கற்றுக் கொண்டு செய்துவந்ததுடன் ஆரையம்பதி, திருப்பெருந்துறை போன்ற இடங்களில் இது தொடர்பான பயிற்சிகளையும் பெற்றுள்ளார்.

இவர் கடந்த காலங்களில் குறிப்பாக அசாதாரண சூழ்நிலை நிலவிய காலங்களில் ஆயித்தியமலை, உன்னிச்சை 6ஆம் கட்டை, உன்னிச்சை 5ஆம் கட்டை, உன்னிச்சை 4ஆம் கட்டை போன்ற பல இடங்களுக்குச் சென்று இரட்டைக் குழந்தைகள் உள்ளடங்கலாக ஆயிரத்திற்கு மேற்பட்ட குழந்தைகளின் ஜனனத்திற்கு மருத்துவிச்சியாக சேவை செய்துள்ளார்.

தற்போது வைத்தியசாலை வசதிகள் ஓரளவு உள்ளதால் வாகன வசதிகள் இல்லாத இடங்களில் சந்தர்ப்ப சூழ் நிலைக்கேற்ப மருத்துவிச்சியாகச் சேவை செய்து வருகின்றார்.



முழுப்பெயர் : திரு. முருகேசு தில்லையம்பலம்
பிறந்த திகதி : 1957.03.29
முகவரி : கன்னன்குடா - 01, மட்டக்களப்பு.
துறை : கிராமத்து வைத்தியம்

1988 இல் இருந்து இவர் இருபத்தி நான்கு வருடங்களாக இவ் வைத்தியத்தினைச் செய்து வருகின்றார். தனது மூதாதையர் சின்னத்துரை பரிசாரியாரிடமிருந்து இதனைக் கற்றுக் கொண்டார். பாம்புக்கடி, விஷம் தீண்டியவர்கள், வாதம், சுவாதம், மனநோய், கைகால் பிடிப்புக்கள், பூச்சி, சுளுக்கு இன்னும் பல நோய்களுக்கு வைத்தியம் செய்து வருவதுடன் ஆயிரத்திற்கு மேற்பட்ட நோயாளிகளைக் குணமாக்கியுமுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமல்லாது இவர், யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, அட்டாளைச்சேனை, நிந்தவூர், பாலமுனை போன்ற வெளிமாவட்டங்களுக்கும் சென்று தனது சேவையினைச் செய்துவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர் கௌரவம்



முழுப்பெயர் : திரு. நோஞ்சிப்போடி சண்முகநாதன்
பிறந்த திகதி : 1953.02.25
முகவரி : பருத்திச்சேனை, கன்னன்குடா.
துறை : நாட்டுக்கூத்து

1978ஆம் ஆண்டிலிருந்து முற்பத்து நான்கு வருடங்களாக அண்ணாவியாராகவும், கொப்பி ஆசிரியராகவும் சேவையாற்றுவதோடு மட்டுமல்லாது வடமோடி, தென்மோடி, நவீன கூத்துகளை எழுதியும் மேடையேற்றியுமுள்ளார். அத்தோடு கிராமிய நடனங்களான கரகம், கும்மி போன்றவற்றைப் பயிற்றுவிப்பதிலும் தேர்ச்சி பெற்றவராவார்.

இவர் இருபதிற்கும் மேற்பட்ட வடமோடி, தென்மோடி கூத்துகளையும், இரண்டு கரகங்களையும், ஒரு நவீன கூத்தினையும் கொத்தியாபுலை, பத்தரைக் கட்டை, ஊத்துமடு, நொச்சண்டகல், வேடன்குளம், பறங்கிரகுளம், வண்டர் மூலை, பழையவாடி, பருத்திச்சேனை, களிமடு போன்ற மண்முனை மேற்கு பிரதேசத்திற்குட்பட்ட இடங்களில் மட்டுமல்லாது மயிலாம்பாவெளி போன்ற வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பயிற்றுவித்தும், மேடையேற்றியுமுள்ளார்.

**இவர் எழுதிய கூத்துகள்**

1. நச்சுப் பொய்கை
2. அமுர்த சம்பவவல்லி
3. மாரா அசுரன் சண்டை
4. அதிரூபன் நாடகம்

**இவர் பழக்கிய கூத்துகள்**

**தென்மோடிக் கூத்துகள்**

1. மயில் இராவணன் சண்டை
2. சத்தியவான் சாவித்திரி
3. அங்க சுந்தரி நாடகம்
4. இரணிய சம்காரம்
5. சாரங்க ரூபன் நாடகம்
6. சாம்பேந்திரன் நாடகம்
7. அதிரூப சுந்தரன் நாடகம்
8. நளாயினி
9. மதுர வாசகன் நாடகம்

**வடமோடிக் கூத்துகள்**

1. நச்சுப்பொய்கை
2. அமுர்த சம்பவ வல்லி நாடகம்
3. ஆஞ்சநேயர் யுத்தம்
4. ஸ்ரீ வள்ளி
5. ஆரவல்லி நாடகம்
6. கங்கையம்மன் நாடகம்
7. மாரா அசுரன் நாடகம்
8. பகா அசுரன் சண்டை
9. தசக்கிறிவன் நாடகம்
10. தருமர் அசுவமேத யாகம்
11. சந்திரகாசன் நாடகம்

என்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர் கௌரவம்

முழுப்பெயர் : திரு. கதிராமத்தம்பி மயில்வாகனம்
பிறந்த திகதி : *03.05.1948*
முகவரி : கரவெட்டி, மட்டக்களப்பு.
துறை : கிராமியக் கலை / நாடகம்



இவர் சீநோப் கதிர்காமத்தம்பி அண்ணாவியாருடைய மகனாவார். கூத்துத்துறையில் மட்டுமல்லாது நாடகத்துறை, சிற்பத்துறை, ஓவியம், பாடலாக்கம், சோதிடம் போன்றவற்றிலும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

மட்/ மகாஜனக் கல்லூரி, மட்/ சிவானந்தா தேசிய பாடசாலை, மட்/இந்துக் கல்லூரி, மட்/ வின்சன் மகளிர் உயர்தர பாடசாலை போன்றவற்றில் தமிழ்த்தினப் போட்டிகளிற்கும், நாடகமும் அரங்கியலும் பாடநெறிக்காகவும் கூத்துக்களைப் பயிற்றுவித்துள்ளார். அதுமட்டுமல்லாது கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களிற்கும் கூத்துக்களை பயிற்றுவித்தும், அரங்கேற்றியும் உள்ளார். இதற்காக இவரிற்கு 14.01.2000ஆம் ஆண்டு வலயக்கல்வி அலுவலகத்தால் 'மத்தள வித்தகர்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

2008ஆம் ஆண்டு நடைபெற்ற கலாசார விழாப் போட்டிகளில் இவரது வடமோடி கூத்து 2ஆம் இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. மேலும் இவர் கழிவுப் பொருட்கள், தெங்குமட்டை, தென்னம்பாளை, உரிமட்டை போன்ற பொருட்களைக் கொண்டு கலைப்பொருட்கள் செய்வதோடு, மரத்தில் சிற்பம் வடிப்பதிலும் தேர்ச்சி பெற்றவராவார். இவற்றோடு ஓவியத்துறையிலும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

நாடகத்துறையைப் பொறுத்தவரையில் இவர் 15 மேடை நாடகங்களை நெறிப்படுத்தியும், நடித்துமுள்ளார். இன்றுவரை மட்டக்களப்பு வண்ணத்துப்பூச்சி சமாதானப் பூங்காவில் மாணவர்களிற்கு நாடகப்பயிற்சி வழங்கியும் வருகிறார்.

இவரது பாடல்கள் பல வண்ணத்துப்பூச்சி சமாதானப் பூங்காவில் வெளியிடப்படும் காற்றாடி எனும் மலரிலும், எமது அகணி மலரிலும் வெளிவந்துள்ளமையைக் காணலாம். மேலும் கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய இலக்கிய விழாப் போட்டிகளில் 2010ஆம் ஆண்டு பாடலாக்கத்தில் (திறந்த போட்டியில்) இவரது பாடல் 1ஆம் இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இவற்றை விட மட்/மகாஜனக் கல்லூரியிலும் நாட்டார் பாடல் பயிற்சியினை வழங்கியுள்ளார்.

இவரால் 1992ஆம் ஆண்டில் கரவெட்டி நெல்லுச்சேனை செந்தில் முருகன் ஆலயத்தின் வரலாறு, காவடிச்சிந்து, கும்மிப்பாடல் என்பனவும் 2007ஆம் ஆண்டு கரவெட்டி ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வரலாறு, காவடிச்சிந்து, கும்மிப்பாடல்கள் என்பனவும் புத்தகமாக வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவற்றை விட, கடந்த இருபது ஆண்டு காலமாகச் சோதிடக் கலையிலும் இவர் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ குறள்கள்

1. மாணவர்கள் விரும்பும் ஆசிரியர்
கற்றலைக் கற்போருக்குக் கரும்பாக்க வல்ல
கற்றல் வழி தேர்ந்தவனே ஆசான்!

2. நோக்கமில்லாக் கல்வி
நோக்கமில்லாக் கற்றல் கற்பித்தல் போக்கிடம்
புரியாம் பயணத்திற் கொப்பாம்!

3. வித்தகரை யாக்கும் புத்தகம்
புத்திதனைத் தீட்டும் பொக்கிசமாய் நூலை – நீ
நித்தமும் கற்றால் வித்தகனாவாய்

4. தெளிவான கற்றலின் பயன்
தேடித்தெளிந்து கற்றால் தேர்வும் பேறு கண்டு
வாடத் தேவை யில்லை

5. ஆராய்ந்து கற்றால் அறிவு பெருக்கெடுக்கும்
சரித்திரம் தன்னை ஆய்ந்து கற்றால் அறிவுச்
சரித்திரம் அகல்வது திண்ணம்

6. கற்கும் கால விரயமும், கவலையும்
கற்றல் காலத்தில் சுற்றலை நியதிகரித்தால்
கற்றலில் சறுக்கி கவலைக்கிடமாவாய்

7. நச்சரிப்புக்களால் வெற்றி கிடையாது
நச்சரிப்புக்களே வாழ்வின் உச்சரிப்புக்களானால் – நீ
எச்சரியும் பெறமாட்டாய்

8. கொடியோர் நட்பு கொடுமைகளை தரும்
கெடுபிடிக் கஞ்சி எடுபிடியானால் கொடுவினை குறையாது
கொடுமைகளே பெருகிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு குறள்கள்

9. ஞாபகத்தில் நிலைக்கும் ஒப்பீட்டு கல்வி
ஒப்பிட்டு கற்பதே சிறந்த கற்கை மற்றெல்லாம்
தப்பித்து விடுமானால் ஞாபகத்தை விட்டு

10. மரியாதை புரியாதவர்களுக்கு மரியாதை அளியாதே
மரியாதை புரியார்க்கு அளிக்கும் மரியாதை
சரியான செயலாகாதறி

11. புத்தகப்படிப்பும் மேதைகளும்
வித்தகர் விளைவது புத்தக வயலில் புத்தகம்
விளைவது வித்தகர் வயலில்

12. பிழையான செயல் பிழையே ஆகும்
வழுவினை யாற்றுவதே வழு வழுவை வழுவென்று
வஞத்துவது வழுவன்று!



● **திரு.ஞா.ஸ்ரீனேசன்,**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
மட்/ மகிழவட்டவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறையும் நன்றிப்பெருக்கில்..

மண்முனை மேற்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடாத்தும் 2012ம் ஆண்டுக்கான கலாசார விழாவும், மலர் வெளியீடும் சிறப்பாக நடைபெற ஆலோசனைகளை வழங்கியதுடன் மட்டுமல்லாது, சகல வழிகளிலும் ஒத்துழைப்பையும், ஊக்கத்தையும் எமக்கு வழங்கிய கலாசாரப் பேரவைத் தலைவரும், பிரதேச செயலாளருமான திரு.வெ.தவராஜா அவர்களுக்கு முதற்கண் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மற்றும் மலர் சிறப்புற வாழ்த்துச் செய்தியை வழங்கிய அரசாங்க அதிபர் திருமதி.பி.எஸ்.எம்.சாள்ஸ் அவர்களுக்கும், மேலதிக அரசாங்க அதிபர் திரு.கே.விமலநாதன் அவர்களுக்கும், எமது பிரதேச செயலாளர் திரு.வெ.தவராஜா அவர்களுக்கும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு.டி.டபிள்யூ.யூ.வெலிக்கல அவர்களுக்கும், மற்றும் சிறுவர் நிதிய பிராந்திய முகாமையாளர் திரு.பேர்னாட் பிரகாஷ் அவர்களுக்கும்,

இந்நிகழ்வை சிறப்பிக்க வருகை தந்துள்ள அதிதிகள் அனைவருக்கும்,

மலர் சிறப்பாக வெளிவர தமது ஆக்கங்களை வழங்கியவர்களுக்கும்,

கலாசார விழாப் போட்டி நிகழ்வுகளை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளருக்கும், அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், நடுவர்களுக்கும், போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கும் மற்றும் கலை ஆர்வலர்களுக்கும்,

கலாசார விழாவுக்கும், மலர் வெளியீட்டிற்கும் நிதியுதவி நல்கிய வவுணதீவு அபிவிருத்தி அமைப்பு, சிறுவர் நிதியம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கும்,

மலரைப் பற்றி ஆய்வுரையாற்றியவருக்கும்,

மலரினை சிறப்பாகப் பதிப்பித்த அச்சகத்தாருக்கும்,

இவ்விழா சிறப்பாக நடந்தேற அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய மண்முனை மேற்குப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும்,

விழாவை அலங்கரிக்க கலை நிகழ்வுகளை வழங்கிய அனைவருக்கும்,

மற்றும் விழாவிற்கு வருகை தந்துள்ள எமது அலுவலக உத்தியோகத்தர்கள், மாணவர்கள், கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், சுவைஞர்கள், ஊர் மக்கள் அனைவருக்கும் மண்முனை மேற்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை சார்பாக எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி.த.ஜெயமாறன்,**
கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம்,
மண்முனை மேற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்முனை மேற்கு பிரதேச கலாசார பேரவை - 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகணி வருகைக்காய்
# வாழ்த்துக்களும் அனுசரணையும்



ChildFund Sri Lanka

வவுணதீவு அபிவிருத்தி அமைப்பு

**சிறுவர் நிதியம்,** மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org